Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 30 ரூபா • தீபம் 97 • 18.06.2017

இலங்கையின்
முதல் தர தமிழ்
வார இதழில் உங்கள்
வணிக விளம்பரங்கள்
நியாயமான விலைகளில்
இடம்பெற வேண்டுமா

உடனே அழையுங்கள்
076 82 555 67 / 60

தீபம் எப்பொழும் உங்களுக்கான
தன்னிகரில்லா சேவையை வழங்க முன்னிற்கும்



## வெளியில் வாருங்கள் முதல்வரே!

## அடுத்த அமைச்சரவை இதுதான்!

### அமைச்சர்கள் நீக்கம் முதல் இரகசிய பேச்சு வரை

# முதல்வர் விவகாரத்தின் முழுமையான பின்னணி

தலைமைக் காரியாலயம்
இல. 57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
077 722 6247

கிளைக் காரியாலயங்கள்
வேலணை, வங்களாவடிச் சந்தி
021 221 5472
மல்லாகம். கே.கே.எஸ் வீதி,
021 224 3393
சங்கானை, ஓடக்கரை வீதி
021 225 1664

சசிகா
லேணர்ஸ்



சசிகா லேணர்ஸ் தனது
மற்றும் ஒரு கிளையை
யாழ் நகரில் திறந்துள்ளது.

இல. 821C
மணிக்கூட்டுக் கோபுர வீதி,
யாழ்ப்பாணம்

தொலைபேசி
021 222 8004



# HOTEL SELLA Rest

WIFI/ TV/ AC/ Non AC / conference hall / Double Bed rooms / Single rooms / Hall / kitchen facility / Parking என சகல வசதிகளுடனும் கிளிநொச்சியில் அமைந்துள்ளது.

**வசதிகள் மற்றும் அமைவிடம்**

1.சுற்றுலா பயணிகளுக்கான சகல ஒழுங்குகளும் செய்துகொடுக்கப்படும்.
2. மத்தியில் அமைந்துஉள்ளதால்அனைத்து பகுதிகளுக்கும் இலகுவாக பிரயாணிக்க முடியும்
3. சமைத்து சாப்பிடுவதற்கான வசதிகள்
4.மிகவும் அமைதியான மற்றும் இயற்கையான சூழல்
5.சுற்றுலா பிரயாணிகளுக்கு சைக்கிள் வசதிகள் ஒழுங்கு செய்துகொடுக்கப்படும்

தரமான உணவுகளை உங்கள் விருப்பத்துக்கு ஏற்ப சுவைத்து மகிழ இன்றே நாடுங்கள்.

நியாயமான கட்டணத்தில் தரமான சேவை

Phone: 0777442846, 0214925665, 0212285613

# KTT travels

கொழும்பு - யாழ்ப்பாணம்



இளவாலை இருந்து பண்டத்தரிப்பு ஊடக மானிப்பாய் வீதி ஊடக யாழ்ப்பாணம் உங்கள் முற்பதிவுக்கு எங்களை அழையுங்கள்

யாழ்ப்பாணம் : 077 44 80 216
கொழும்பு : 077 54 84 963
முறைப்பாடு : 077 40 19 227
65 uduvil Road manipay.

# ஜேர்மன் மொழி deutsch கற்கைநெறி 18.06.2017 ஆரம்பமாகிறது

கடந்த 7 வருடகாலம் யாழ் மாணவர்களின் ஆங்கில புலமைக்கு தன்னிகரில்லா பங்களிப்பு செய்த எமது கல்வி நிறுவனத்தின் 7ஆம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு எதிர்வரும் மாதம் dutch, french, deutsch மொழி வகுப்புகள் ஆரம்பமாகின்றன.



A1 exam இற்கு பூரணமான வழிகாட்டல்.

grammar, vocabulary விருத்தியுடன் speaking, listening, reading, writing என்பனவற்றில் அதீத பயிற்ச்சி வழங்கப்படும்.

உறுதிப்படுத்தல் மற்றும் மேலதிக தகவல்களுக்கு
077 13 633 89 , 076 41 90 327

LONDON METROPOLITAN COLLEGE
No 136, palali road, parameswara junction, Jaffna.
PH NUMBER : 021 753 8395

# Golden Look Beauty



✓ திருமண பெண் அலங்காரம்
✓ பூப்புனித நீராடுவிழா அலங்காரம்
✓ ஏனைய விழாக்களுக்கான அலங்காரம்
✓ பேசியல்
✓ அனைத்து வகையான தலை ஒப்பனை
✓ அனைத்து வகையான தலை முடிவெட்டுதல்
✓ கண் இமை சேப் செய்தல்

யாழ்ப்பாணத்தில் வேறெங்கும் இல்லாத விலைக்கழிவுடன் அனைத்து அழகு சிகிச்சைகளையும் இங்கு பெற்று கொள்ளலாம்.

அத்துடன் குறைந்த கட்டணத்தில் பயிற்சி வகுப்புகளும் இடம்பெறுகின்றன.

✓ Diploma in beauty culture and hair dressing
✓ Certificate in beauty culture and hair dressing
✓ Certificate in self makeup.
✓ Certificate in cake Icing

Proprietor
Mrs. T. Nitharshana Secretary, Associations of Beautician Jaffna district.
0772242749, 0212215987
no 01, 5th lane, palali road, kantharmadam, jaffna.

# EMK Engineering and Construction

யாழ்ப்பாணத்தில் உயர் தொழிநுட்பத்தினுடன் கூடிய கட்டிடங்களை நிர்மாணிக்கும் ஸ்தாபனம்.



✓ Building constructions
✓ Building consultancy
✓ Architectural designs
✓ Interior design
✓ Cladding works
✓ Renovation works
✓ Molding works
✓ Landscaping
✓ Aluminium works

✓ நியாயமான கட்டணத்தில் தரமான சேவை.
✓ தகுதி பெற்ற நிபுணர்களின் மேற்பார்வை.
✓ தரமான மூலப்பொருட்கள்.
✓ வாடிக்கையாளர் திருப்திக்கமைவான சேவை.

EMK construction .kaithady south, kaithady
Jaffna Town, Sri Lanka.
Phone number : 0778302190



# TOPAZ

No. 01 Shop in Jaffna



திருமண பட்டுச்சேலை காஞ்சி புரம் பட்டுச் சேலை சுடிதார் மற்றீயல்கள் மற்றும் ரெடிமேட் ஆடைகள்




ஆண்களிற்கான சூட் மற்றும் ரெடிமேட் ஆடைகள்



மிஸ் சுட்டி மிஸ் பியூட்டியாக வலம் வரும் சுட்டிச் சிறுமியர்களிற்கான பஷன் ஆடைகள்

We are specialist in in
Wedding suits, Wedding Sarees , Party Sarees, Wedding Frocks, Party Frocks and all kinds of items

| TOPZ | TOPAZ TAILORING | TOPZ MALL |
|---|---|---|
| No 72, Grand Bazaar Jaffna | No 80/24, Kasthuriyar Road Jaffna | No 195, Power House Road Jaffna |
| Tel 021 222 4743 | Tel 021 222 4643 | Tel 021 222 4933 |
| Fax 021 222 7645 | Email : topazagn@gmail.com | 021 221 9933 |



# நஷனல் கசங்கட்டும்...
# வீட்டை விட்டு வெளியில் வாருங்கள் முதல்வரே!

அன்ரனி பாலசிங்கம்

இதுதான் இன்றுள்ள பெரிய கேள்வி. தமிழ்தேசிய அரசியலில் ஏற்பட்டுள்ள பிளவில் முதல்வரை எவ்வளவு தூரம் நம்பலாம்? அவரில் எவ்வளவு தூரம் நம்பிக்கையை முதலிடலாம்?

இந்த கேள்விக்கு தெளிவான பதிலை சொல்ல முடியவில்லை. வடமாகாண சபையின் முதல்வராகி, தமிழ்தேசிய அரசியலின் புதிய பிரதிநிதியாகி மூன்றரை ஆண்டுகள் ஆகிவிட்டபோதும், இப்படியொரு கேள்வி எழுப்பப்படுவது துரதிஸ்டவசமானதே. இது விக்னேஸ்வரனின் பலவீனமே.

வடக்கில் விக்னேஸ்வரனிற்கு ஆதரவாக நடத்தப்பட்டுவரும் போராட்டங்கள் எல்லாவற்றிலும், "எங்கள் தலைவர்", "தமிழர்களின் தலைவர்" என்ற கோசங்கள் எழுப்பப்பட்டுவருகின்றன. விக்னேஸ்வரனிற்காக எதையும் செய்யத் தயாராக இருப்பதாக காட்டிக் கொள்கிறது ஒரு மக்கள் கூட்டம். தமிழ் ஜனநாயக அரசியல் கட்சி தலைவர்கள் யாருக்கும் இப்படியொரு அனுதாப அலை இதுவரை இருந்ததில்லை.

விக்னேஸ்வரனிற்கு மட்டும் அப்படியொரு ஆதரவு அலை உருவாகியிருக்கிறது. இதில் முரண்நகை என்னவென்றால், சமகால தலைவர்கள் யாரளவிற்கும் அரசியல் செயற்பாட்டு அனுபவம் முதல்வரிற்கு கிடையாது. அதிகம் எதற்கு வடமாகாணசபை உறுப்பினர்களாக உள்ள வயதில் இளையவர்களின் செயற்பாட்டனுபவம் கூட முதல்வரிற்கு கிடையாது. ஆனால் தமிழ்தேசிய அரசியலில் வெகுஜன கவர்ச்சி மிக்கவராக விக்னேஸ்வரன் மாறியுள்ளார்.

இந்த அனுபவமின்மைதான் இதுவரை அவரது பலம். தற்போதுள்ள மற்றைய மூத்த தலைவர்கள் எல்லோர் மீதும் ஏதோவிதமான அதிருப்தி மக்களிற்கு உள்ளது. அவர்களின் நீண்ட அனுபவமே பலவீனமானது. செயற்பாட்டு காலத்தில் நடந்த ஏதோவொரு சம்பவத்தையாவது நினைவில் மீட்டுகிறார்கள் மக்கள். விக்னேஸ்வரனிற்கு அப்படியான எந்த சிக்கலுமில்லை. அவரது மூன்றரை ஆண்டு அரசியல் பயணத்தில் ஒரு நேர் கோட்டில்தான் பயணித்துக் கொண்டிருக்கிறார். முன்னரே தயாரித்த அறிக்கையை வாசிப்பது, பொது இடங்களில் ஒரு நீதியரசரை போல நடந்துகொள்வது, சாதாரண உணர்ச்சிகளிற்கு இடமளிக்காத ஒருவராக தன்னை காட்டிக்கொள்வதுதான் விக்னேஸ்வரனின் அடையாளமாக இருக்கிறது. தமிழ்தேசிய கூட்டமைப்பு என்ற பலமான, பாதுகாப்பான குடையின் கீழ் இருந்துதான் இதுவரை அரசியல் செய்தார். எந்த சிக்கலான சூழலையும் அவர் இதுவரை கையாளவில்லை. அதிகபட்சமாக அவர் சந்தித்த சிக்கலான பிரச்சனையே அவரது தலைமைக்கு எதிராக மாகாணசபைக்குள் தமிழரசுக்கட்சியின் உறுப்பினர்கள் சிலர் "கிளர்ச்சி" செய்தது. அந்தபிரச்சனைதான் இன்றுபிரமாண்டமாகி, மாகாணசபையை சிக்கலுக்குள் கொண்டு வந்து விட்டுள்ளது. தனக்கெதிராக ஏற்பட்ட கிளர்ச்சியை முதலமைச்சரால் முறியடிக்க முடியவில்லை. தன்னை பாதுகாத்த தமிழ்தேசிய கூட்டமைப்பு என்ற குடையிலிருந்து தமிழ்தேசியம் என்ற மக்களின் உணர்வுநிலை குடைக்கள் இப்பொழுது முதல்வர் ஒதுங்கியிருக்கிறார்.

முதல்வரின் பலவீனமும் இந்த அனுபவமின்மைதான். முதல்வரிற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை சமர்ப்பிக்கப்பட்ட அன்றும், மறுநாள் முற்பகலும் முதல்வர் தளர்வான மனநிலையிலேயே இருந்துள்ளார். இனியென்ன, வீட்டுக்கு மூட்டை கட்டலாமென்ற மனநிலைக்கு அவர் வந்திருந்தார்.

மறுநாள் மாலையில் தனது வீடு நோக்கி ஆதரவாளர்கள் வந்தார்கள். அவர்களை கண்டதும் முதல்வரின் குரல் தளதளத்தது. அந்தக்கூட்டம்தான் முதல்வரின் நம்பிக்கையை அதிகரிக்க செய்தது. ஒரு நெருக்கடியான சமயத்தில் எப்படியான அரசியல் முடிவுகள் எடுப்பது என்பதில் முதல்வர் பலவீனமாக உள்ளார். அதைவிட பெரிய சிக்கல் அவர் என்ன முடிவெடுப்பார் என்பது.

இவ்வளவு சிக்கல்களின்போதும் அவர் தனது எதிர்கால திட்டங்கள் பற்றி எதையும் வெளிப்படையாக பேசவில்லை. தன்னுடன் துணையாக இருக்கும் கட்சிகள், பிரமுகர்களிற்கும் அவர் என்ன செய்வார் என்பது தெரியாது. பிரபாகரனின் அரசியல், இராணுவ முடிவுகள்கூட ஒரு குறுகிய வட்டத்திலேனும் முன்னரே ஆலோசிக்கப்பட்டது. தாக்குதல் திட்டங்களை தளபதிகளுடன் கலந்துபேசி திட்டமிட்டார். ஆனால், ஜனநாயக அமைப்பில் செயற்படும் முதல்வர் அப்படி செய்வது கிடையாது. உணர்வுகளை ஒடுக்கி, தன்னைப்பற்றிய பூடகத்தை பொதுவெளியில் பரவவிட்டுள்ள முதல்வர், அரசியல் முடிவுகளிலும் அப்படி செயற்பட முடியாது. நம்பிக்கையில்லா பிரேரணை வெற்றியடைந்தால், முதல்வரின் அடுத்த திட்டம் என்னவென்பது அவருக்காக போராடும் சாதாரண சனங்களிற்கு மட்டுமல்ல, சுரேஷ் பிரேமச்சந்திரன், கஜேந்திரகுமார் போன்றவர்களிற்கு கூட தெரியாது. அரசியல் கட்சிகளை விடுங்கள், சாதாரண மக்கள்கூட முதல்வரின் முடிவை ஊகிக்க முடியாவிட்டால், அவரது அரசியல் தலைமைத்துவத்தில் எப்படி நம்பிக்கை வைப்பார்கள்?

முதல்வரிற்கு ஆதரவாக தற்போது நடக்கும் போராட்டங்களில் தமிழரசுக் கட்சி எதிர்ப்பாளர்கள், வேறு அரசியல் நோக்கமுடையவர்கள் கலந்துகொண்டிருக்கலாம். அவர்கள் இதை ஒரு வாய்ப்பாக பயன்படுத்தலாம். ஆனால், அவர்கள் எல்லோரையும் விட பிரமாண்டமானது, பொதுநோக்கமுடைய சனத்திரள். ஒருவரை பிரமாண்டமான தலைவராக்குவதோ, ஒன்றுமேயில்லாதவராக்குவதோ எல்லாமே அவர்களால்தான் முடியும்.

விக்னேஸ்வரனை காலம் கையை பிடித்து அழைத்து வந்து இந்த இடத்தில் நிறுத்தியிருக்கிறது. இந்த இடத்திற்கு வந்துசேர அவர் அதிகம் உழைக்கவில்லை, சிரமப்படவில்லை. ஒரு தொழிலதிபர் தனது நிறுவனத்தின் தலைமை பொறுப்பிற்கு மகனை கையை பிடித்து அழைத்து வருவதைபோல, காலம் விக்னேஸ்வரனை இந்த இடத்திற்கு அழைத்து வந்துள்ளது. இனி அவர்தான் செயற்பட வேண்டும்.

இறுக்கமான நீதியரசரை போலிருக்கும் மனநிலையிலிருந்து முதலில் வெளிவர வேண்டும். முறையான அரசியல் ஆலோசகர்களை அவர் கொண்டிருக்க வேண்டும். முக்கியமாக தனது அரசியல் திட்டங்கள் குறித்து ஆதரவாளர்களுடன் வெளிப்படையாக பேச வேண்டும். தனது அரசியல் பயணத்திற்கு தெளிவான சித்தாந்தத்தை உருவாக்க வேண்டும். சமூக, ரசியல் விவகாரங்களில் பார்வையை விசாலப்படுத்திக்கொள்ள வேண்டும். இதையெல்லாம் செய்ய அவர் வீதிக்கிறங்க வேண்டும். மக்களுடன் பேச, வாழ வேண்டும். அவரது நஷனல் உடை சற்று கசங்கினாலும், கறைபட்டாலும் கவலைப்பட வேண்டியதில்லை. சுறுசுறுப்பாக இயங்கி, நிர்வாக வல்லமையுள்ளவர்களை உரிய பொறுப்புக்களில் நியமித்து, மாகாண நிர்வாகத்தை சீர்படுத்த வேண்டும். முக்கியமாக நடந்த கசப்பையெல்லாம் மறந்து தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைமையுடன் சுமுகமான உறவை வைத்துக்கொள்ள வேண்டும். இதையெல்லாம் செய்தால் ஒரு பெருந்தலைவராகலாம். அப்படித்தான் இல்லாமல், ஒரு சாதாரண தலைவராகத்தான் ஆகுவதென்றால், குறைந்தபட்சம் வழக்கமான நமது அரசியல் தலைவர்களிற்குரிய மசாலாத்தனத்தையாவது வளர்த்துக்கொள்ள வேண்டும்.

காலம் யாருக்கும் இரண்டு சந்தர்ப்பம் கொடுப்பதில்லை. முதல்வரிற்கு மட்டும் இரண்டு சந்தர்ப்பம் கொடுத்துள்ளது. முதலாவது சந்தர்ப்பத்தை எப்படி பயன்படுத்தினார் என சொல்ல தெரியவில்லை. இந்த மக்கள் எழுச்சி முதல்வரிற்கு இன்னொரு அத்தியாயத்தை ஆரம்பித்து வைக்கிறது. கடந்த சந்தர்ப்பத்தில் அவர் விட்ட தவறுகளையெல்லாம் கணக்கிலெடுக்காமல் வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பம் இது. முதல் சந்தர்ப்பத்தில் வீட்டுக்குள்ளிருந்து அரசியல் செய்தார். இப்போது வீதிக்கு வாருங்கள் முதல்வரே!







# கல்யாணம் முதல் கண்ணீர் வரை

## வெளிநாட்டு மாப்பிள்ளைகளை தேடும் இளம்பெண்களின் துயரம்

என்னுடன் கூடப்படித்த நண்பியொருவர் இப்பொழுது ஐரோப்பாவில் இருக்கிறார். அழகிய தோற்றமுடைய அவள், கல்லூரி காலத்தில் எப்பொழுதும் இளைஞர்களின் கவனத்தில் இருந்தவள். திருமணம் செய்து ஐரோப்பாவில் குடியேறி விட்டாள். முகப்புத்தகத்தில் தனது புகைப்படங்களை அடிக்கடி பதிவேற்றிக் கொண்டிருப்பாள். பூங்காவில், பனிபடர்ந்த சாலையில், நீரேரியில் விதவிதமான படங்கள். அத்தனை படத்திலும் அவள் தனித்துதான் நிற்பாள். அந்த படங்களை யார் எடுத்திருப்பார்கள் என யோசித்ததில்லை. கணவனுடன் அங்கு குடியிருக்கிறாள் என்றால், வேறு யார் எடுப்பார்கள்.

பணி நிமித்தமாக வவுனியா சென்ற போது, இருவருக்கும் நெருக்கமான இன்னொரு நண்பியை அண்மையில் சந்திக்க கிடைத்தது. ஐரோப்பிய நண்பியின் நெருக்கமான நண்பி இவள். பேச்சின் இடையே தயங்கிதயங்கி ஒரு விடயத்தை சொன்னாள். ஐரோப்பிய நண்பி ஒருவித விரக்தியில் இருக்கிறாள் என்றாள். விடுப்பறியும் குணம் சும்மா விடுமா? துருவிதுருவி விசாரித்ததில் விடயம் வெளிப்பட்டது.

அவளை விட வயதில் அதிகமான கணவனின் தோற்றம்தான் பிரச்சனை. தலைமுடி உதிர்ந்து, தொப்பையுடன் திரியும் கணவனுடன் கூட நின்று படம் எடுத்து பேஸ்புக்கில் பகிர அவளிற்கு வெட்கமாக இருந்துள்ளது. அதனால்தான் தனது படங்களை மட்டும் பிரசுரிக்கிறாள்.

**மணமக்களிற்கிடையிலான வயது வித்தியாசம் 5 7 வரையாக இருந்தது. இன்று, அது 12, 13 என்று அதிகரித்து விட்டது. இந்த அதிகரிப்பை மணமகனும் மணமகளும் இணைந்து ஏற்படுத்திக் கொண்டதல்ல. மணமகன் தரப்பும் பெண் வீட்டாரும் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கை**

உண்மையை சொன்னால் இது தனியே அவளது பிரச்சனை மட்டுமல்ல. ஒரு பெரிய சமூகப்பிரச்சனையாக உருவெடுக்க ஆரம்பித்துள்ள பிரச்சனை. பணம் கொழிக்கும் ஐரோப்பிய சந்தையும், உள்ளூர் ஏழ்மையும் பெண்களை வைத்து ஏற்படுத்திக்கொள்ளும் உடன்படிக்கையே இந்த திருமணங்கள். பெரும் செலவில் ஆடம்பரமாக நடக்கும் திருமணங்களில் சில சமயங்களில் பெண்களின் உணர்வுகள் பலியிடப்படுவது துயரமே.

யாழ்ப்பாணத்தில் பல திருமணசேவை நிறுவனங்கள் உள்ளன. அங்கு பணியாற்றுபவர்களுடன் பேசியபோது கிடைத்த தகவல்கள் தலைசுற்ற வைப்பது.

வெளிநாட்டு திருமணங்கள் சடுதியாக அதிகரித்த கடந்த 25 வருடங்களில் தமிழ் சமூகத்தில் நடந்த முக்கிய மாற்றங்கள் இரண்டை அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். முதலாவது மணமக்களிற்கிடையிலான வயது வித்தியாசயம் அதிகரித்து செல்வது. இரண்டாவது மணமகனின் கடந்தகால வாழ்க்கை எப்படியென்றாலும் இருந்து விட்டு போகட்டும் என சமரசமாகும் மனப்போக்கு.

யாழிலுள்ள முக்கிய திருமணசேவை நிறுவனமொன்றின் உரிமையாளர் சொன்னார் "எம்மிடம் பல தரப்பட்டவர்களின் குறிப்புக்கள் வருகின்றன. பல குறிப்புக்கள் பொருந்திப்போனாலும், மாப்பிள்ளை வெளிநாட்டில்இருக்கவேண்டுமெனபெண் வீட்டார் எதிர்பார்ப்பார்கள். இதற்காக சில வருடங்கள் கூட காத்திருப்பார்கள். இப்படி காத்திருந்து வயதான பெண்களையும் தெரியும். சின்ன வயதிலேயே வெளிநாட்டு மாப்பிள்ளைக்காக வரும் பெண்களின் குறிப்புக்களும் உண்டு" என்றார்.

முன்னர் மணமக்களிற்கிடையிலான வயது வித்தியாசம் 5 - 7 வரையாக இருந்தது. இன்று, அது 12, 13 என்று அதிகரித்து விட்டது. இதில் துரதிஸ்டம் என்னவென்றால், இந்த அதிகரிப்பை மணமகனும் மணமகளும் இணைந்து ஏற்படுத்திக் கொண்டதல்ல. மணமகன் தரப்பும் பெண் வீட்டாரும் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கை இது. உண்மையில் இது மோசமான சமூக பிறழ்வுகளை ஏற்படுத்தும்.

அதிக வறுமைதான் இந்த பிரச்சனையின் மூல காரணம். 1995களின் பின்னர்தான் வெளிநாட்டு மாப்பிள்ளைகளை நோக்கி, நமது குடும்பங்கள் பெருமளவில் படையெடுக்க ஆரம்பித்தன. அப்பொழுது ஒரு வரைமுறையிருந்தது. உள்ளூர் திருமண வயது இடைவெளிகளில் இது தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. எனினும், அடுத்த ஐந்து வருடங்களின் பின், 2000 இன் தொடக்கத்தில் அந்த நிலை மாறத் தொடங்கியது. மணமகளைவிட வயதில் அதிகமான மணமகனை பெற்றோர் தவிர்க்கவியலாத சந்தர்ப்பங்களில் ஏற்றுக் கொள்ள தொடங்கினார்கள். இயன்றவரை வயதான மணமகனை தவிர்த்து, பொருத்தமான மாப்பிள்ளையை தேடி திருமணம் செய்தார்கள். வயதான மாப்பிள்ளையை திருமணம் செய்வது அப்பொழுதும் ஒரு செய்தியாகத்தான் இருந்தது. அப்படி ஒரு திருமணம் நடந்தால், ஊரார் வாயில் அவலாக மெல்லப்பட்டு கொண்டிருந்தது.

கடந்த ஏழெட்டு வருடங்களில் நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. அதிக வயதான மாப்பிள்ளையைத்தான் இன்று கணிசமான பெண்கள் திருமணம் செய்கிறார்கள். மாப்பிள்ளை எப்படியிருக்கிறார் என்பதை பற்றி ஊராரும் பேசுவதில்லை. வெளிநாட்டு மாப்பிள்ளையென்றால் அப்படித்தான் என்ற அபிப்பிராயத்திற்கு நமது சமூகம் தன்னை பழக்கப்படுத்திக்கொண்டு விட்டது. வெளிநாட்டு மாப்பிள்ளையை பிடித்து விட்டால், குடும்பத்தை காப்பாற்றி விடலாமென கருதும் பெற்றோர், பிள்ளைகள் இருபது வயதையடைந்ததும் தரகர்களை தேடத் தொடங்குகிறார்கள்.

இதன் விளைவுகளில் ஒன்றையே இந்த பகுதியின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இன்னொரு உதாரணத்தையும் குறிப்பிடலாம்.

அண்மையில் கனடாவில் ஒரு கொலை சம்பவம் நடந்தது. கொன்றவரும் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்தான், கொல்லப்பட்டவரும் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்தான். கொலைக்காண காரணத்தை காவல்த்துறை வெளியிட்டுள்ளது. கொல்லப்பட்டவரிற்கும் தனது மனைவிக்குமிடையில் இருந்த கள்ள உறவுதான் தன்னை கொலைகாரன் ஆக்கியதென்ற, கொலை செய்தவரின் வாக்குமூலமே வெளியாகியது. அவருக்கும் மனைவிக்குமிடையில் பதின்னான்கு வயது வித்தியாசமென்பதை ஒரு தகவலுக்காக குறிப்பிட்டு

தொடர்ச்சி 9-ம் பக்கம்...



# இது பொறுப்பற்ற செயல்!

வடமாகாணசபை முதல்வர் மீது தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் நம்பிக்கையில்லா தீர்மானம் ஒன்றை ஆளுனரிடம் சமர்ப்பித்துள்ளனர். இது மிகவும் நெருக்கடியான காலகட்டம். முதிர்ச்சியான தமிழரசுக்கட்சியிடமிருந்து இப்படியொரு அவசரகதியிலான முடிவை யாரும் எதிர்பார்த்திருக்க முடியாது. ஆனால் அது நடந்து விட்டது.

தமிழரசுக்கட்சியின் அரசியல் வரலாற்றில் இது ஒரு கழுவ முடியாத கறையாக என்றுமிருக்க போகிறது. 1965இல் ஐக்கிய தேசியக்கட்சியை நம்பி அமைச்சு பொறுப்பை ஏற்ற தமிழரசுக்கட்சி, அதன் பழிச்சொல்லை காலம் எல்லாம் ஏந்தி திரிந்தது. இதன்விளைவுதான், எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தமிழரசுக்கட்சி என்ற பெயரை குப்பைக்கூடைக்குள் எறிய வைத்தது. அந்தக்கட்சியினால் இனி எதையும் செய்ய முடியாதென்று உணர்ந்ததன் பின்னர்தான் செல்வநாயகம் இந்த முடிவை எடுத்தார். அப்போது செல்வநாயகம் சொன்ன பிரபலமான கூற்று தமிழர்களை ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும் என்பது.

அதன்பின் பல தலைமுறைகளாக அந்தப்பெயர் குப்பைக்கூடைக்குள்தான் இருந்தது. 2009 இற்கு பின்னர் ஏற்பட்ட சடுதியான அரசியல் மாற்றம் ஒன்றின் பின், மீண்டும் தமிழரசுக்கட்சி அரங்கிற்கு வந்தது. 1965இல் செய்த தவறொன்று, எத்தனையோ தலைமுறைகளாக அந்த கட்சியை குப்பைக்கூடைக்குள் எறிந்திருந்தது.

அதேபோன்றதொரு நெருக்கடியான காலகட்டம் இப்பொழுது தமிழரசுக்கட்சிக்கு. புதிய அரசியலமைப்பிற்காக தென்னிலங்கை அரசுகளுடன் இணக்கமான போக்கை தமிழரசுக்கட்சி கடைப்பிடித்து வருகிறது. அது சமூகத்தின் சில மட்டங்களில் விமர்சனத்திற்குரியதாக இருந்தாலும், பொதுவான அபிப்பிராயம் அதுவல்ல. இனப்பிரச்சனை தீர்விற்காக சாத்தியமான எந்த வழிவகைகளையும் ஆதரிப்பவர்களே பெரும்பாலான தமிழ் மக்கள். அதில் இரண்டு கருத்திற்கு இடமில்லை. ஏனெனில் இதை தவிர்த்தால் நமக்கு வேறு மார்க்கங்கள் இல்லை.

அதிகாரத்தில் இருக்கும் சிங்கள கட்சியொன்றின் தயவில் இனப்பிரச்சனை தீர்விற்காக முயற்சிப்பது தவறாகாது. ஆனால் அந்த முயற்சி தோல்வியடைந்தால் அதற்காக மிகப்பெரிய விலையை கொடுக்க நேரிடும். ஒரு பொது நன்மையை முன்னிட்டு, இணக்கப்பாட்டிற்கு தமிழ் சமூகம் தயாராகத்தான் இருக்கிறது.

ஆனால், இப்பொழுது மாகாணசபையில் அரங்கேறுவதை போன்ற அசிங்க காட்சிகளை காண சமூகம் தயாராக இல்லை. முதலமைச்சரிற்கு எதிராக தமிழரசுக்கட்சி நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வந்தது எதிர்க்கட்சிகளை நம்பித்தான். எதிர்க்கட்சிகள் என்பவை எதிரிக்கட்சிகள் அல்ல. ஆனால் மக்கள் பிரதிநிதிகளின் சபைகளில் ஒவ்வொரு செயலுக்கும் வலுவான அர்த்தமுண்டு.

வடமாகாணசபை முதல்வர் தமிழ்தேசிய கூட்டமைப்பு என்ற நான்கு கட்சிகளின் பிரதிநிதி. உண்மையில் அப்படி முறையாக தேர்வு செய்யப்படவில்லை. எனினும், நான்கு கட்சிகளின் பிரதிநிதியாகத்தான் அரங்கிற்கு கொண்டு வரப்பட்டவர். அவர் அகற்றப்படுவதென்றாலும் நான்கு கட்சிகளின் சம்மதத்துடன்தான் அகற்றப்பட வேண்டும். அழைத்து வருவதில் கருத்து கேட்காததைபோல, அகற்ற முயல்வதிலும் கருத்தறிய ஆர்வமில்லையென்றால், தனது முயற்சிகளில் பங்காளிகள் ஒத்துழைக்கவில்லையென்ற இப்போதைய குற்றச்சாட்டுக்கள் அவசியமில்லை.

தமிழரசுக்கட்சி முதல்வரை அகற்ற எடுத்த தீர்மானத்தை பங்காளிகள் ஆதரிக்கவில்லையென்ற குற்றச்சாட்டை தமிழரசுக்கட்சியின் தலைவர்கள் இப்பொழுது வைப்பது முறையல்ல. முதல்வர் பதவி தொடர்பில் ஆலோசனைக் கூட்டமொன்றை தமிழரசுக்கட்சி கூட்டும்போது, பங்காளிகள் கலந்துகொள்ளாவிட்டால் தவறு. தமிழரசுக்கட்சி எடுத்த முடிவை பங்காளிகள் ஆதரிக்கவில்லையென்பது சகித்துக்கொள்ளவே முடியாத வன்முறை. பங்காளிகள் தொடர்பில் தமிழரசுக்கட்சி கடைப்பிடித்து வரும் வன்முறையின் நீட்சிதான் இந்தப்பார்வை.

தமிழரசுக்கட்சியின் தலைமைக்கு முதல்வர் கட்டுப்படவில்லையென்ற ஒரே காரணத்தின் நிமித்தம் ஏற்படுத்தப்பட்ட சிக்கல் இன்றைய குழப்பம். நீண்ட போராட்டத்தின் விளைவு இந்த மாகாணசபை.

பிரபாகரனையும், புலிகளையும், அழிவுகளையும் முன்னிலைப்படுத்தி வாக்குகேட்ட யாருக்கும், எத்தனை தியாகத்தின் பின்னர் மாகாணசபையை பெற்றோம் என்ற பொறுப்புணர்வு கிடையாது. கட்சியின், தனிப்பட்ட நலன்களின் அடிப்படையில் ஒட்டுமொத்த இனத்தின் அரசியல் அபிலாசையை துஷ்பிரயோகம் செய்யும் அதிகாரத்தை பெற முடியாது. இந்த மாகாணசபை தமிழரசுக்கட்சியினதோ, விக்னேஸ்வரனினதோ கிடையாது. இது ஒட்டுமொத்த தமிழர்களினது. யாரென்றே தெரியாது காடுகளிலும், கடல்களிலும் வீழ்ந்த ஆயிரமாயிரம் உயிர்க்கொடைகளின் விளைவு. கால்களையும், கைகளையும், விழிகளையும், நடமாட்டத்தையும் இழந்த ஆயிரக்கணக்காணவர்களின் வலிகளின் விளைவிது. சிறைகளில் இருப்பவர்கள், காணாமல் போனவர்களின் துயரங்களின் பரிசிது.

அரசியல் வியாபாரிகள் யாருக்கும் இதை துஷ்பிரயோகம் செய்யும் அதிகாரமோ, உரிமையோ கிடையாது. அரசியல் வியாபாரிகள் விளையாடிச்செல்லும் விளையாட்டு திடலல்ல, மக்களின் உழைப்பின் பலனான இந்த மாகாணசபை. இதை புரியாமல் செயற்பட கூடாது.

தமிழர்களின் அரசியல் அடையாளமான மாகாணசபையை பேணிப்பாதுகாப்பது அதன் ஒவ்வொரு பிரதிநிதிகளின் கடமை. அரசஆதரவு கட்சிகளுடன் இணைந்து முதல்வரை பதவிநீக்குவதென்பது பொறுப்பற்ற செயல். நாளைய சந்ததி இந்த செயலை செய்தவர்களை காறி உமிழ்வார்கள். எப்படி 1965 உதாரணம் ஒரு கறையோ, அதேபோல இன்றைய சம்பவமும் தமிழரசுக்கட்சியின் இன்னொரு கறை.

ஊழல்குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுவிக்கப்பட்ட அமைச்சர்கள் பதவியிலிருந்து அகற்றப்படகூடாதென்ற தமிழரசுக்கட்சியின் அபிப்பிராயம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது. ஆனால் அதற்காக முதல்வரையே பதவியிலிருந்து அகற்ற முயல்வது பொறுப்பற்ற செயல்.

அற்பசொற்ப அதிகாரம்தான் எனினும், கிடைத்துள்ள இந்த மாகாணசபைக்காக நாம் கொடுத்தது மிகமிக அதிக இழப்புக்கள். அந்த இழப்புக்களின் மீதே மாகாணசபை அமைக்கப்பட்டுள்ளது. இதை ஒவ்வொரு உறுப்பினரும் நினைவில் கொள்ளட்டும்.

தீபம்
989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர்
(கல்வியங்காடு இலங்கை வங்கி கட்டிட தொகுதி)
ஆசிரியர்பீடம்: 0768255562
விளம்பரம்: 0768255560, 0768255567
செய்திகளிற்கு: deepamdesk@gmail.com
செய்திகளை அறிந்திட: deepamnews.lk



**எஸ். சிறிதரன்**
**– பா.உ, தமிழ் தேசிய கூட்டமைப்பு**

யூனியன் கல்லூரி அதிபர் விண்ணப்பம் கோரியபோது, அதிபர் தில்லையம்பலம் வரதன் விண்ணப்பத்திருக்கிறார். நேர்முகத் தேர்வில் புள்ளிகளினடிப்படையில் அவர்தான் முதலிடம் பிடித்தார். நந்தீஸ்வரனும் நேர்முகத் தேர்விற்கு தோற்றியிருந்தார். நந்தீஸ்வரனை அதிபராக நியமிக்குமாறு சிரேஸ்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கடிதம் கொடுத்திருந்தார். கல்வியமைச்சினால் அவருக்கு விளக்கமளிக்கப்பட்டு, உண்மையினடிப்படையில் வரதன் அதிபராக்கப்பட்டார். அவர் ஒருசில நாட்கள்தான் அந்தப்பாடசாலையில் படித்ததாக விசாரணைக்குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ஆனால் மூன்றரை வருடம் படித்ததற்கான ஆவணங்களை அந்த அதிபர் வைத்துள்ளார்.



**எம்.கே.சிவாஜிலிங்கம்**
**– வடமாகாணசபை உறுப்பினர்**


முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையில் கையெழுத்திட்டு ஆளுனரிடம் வழங்கியிருக்கிறார்கள். அது தமிழ்தேசிய கூட்டமைப்பின் நிலைப்பாடு அல்ல. இலங்கை தமிழரசுக்கட்சி உறுப்பினர்களும், ரெலோவில் இருந்து ஒதுங்கிப்போன அல்லது ஓடிப்போன ஒருவரும்தான் கையெழுத்திட்டுள்ளனர். ஆனால் முதலமைச்சருக்கு ஆதரவாக நாங்கள் ஒரு நம்பிக்கை ஆவணத்தை சமர்ப்பித்திருக்கிறோம். இதில் தமிழ்தேசிய கூட்டமைப்பிலுள்ள நான்கு கட்சி உறுப்பினர்களும் கையெழுத்திட்டுள்ளனர். தமிழ்தேசிய கூட்டமைப்பின் முப்பது மாகாணசபை உறுப்பினர்களில் பதினைந்துபேர் இதில் கையெழுத்திட்டுள்ளனர்.



**எம்.ஏ.சுமந்திரன்**
**– பேச்சாளர், தமிழ் தேசிய கூட்டமைப்பு**

ஊழல் குற்றச்சாட்டு ஒரு அமைச்சருக்கு எதிராகத்தான் இருந்தது. முதலமச்சர் நியமித்த விசாரணைக்குழு அந்த ஒரு அமைச்சருக்கு எதிராகத்தான் ஊழல் குற்றச்சாட்டு சுமத்தியது. மற்றைய அமைச்சருக்கு எதிராக அதிகார துஷ்பிரயோக குற்றச்சாட்டு சுமத்தியது. இரண்டு அமைச்சர்களை குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுவித்தது. குற்றம்சுமத்தப்பட்ட, குற்றத்திலிருந்து விடுவிக்கப்பட்ட நான்கு அமைச்சர்களையும் ஒரேவிதமாக கையாளும் முதல்வரின் முடிவைத்தான் தமிழரசுக்கட்சி எதிர்க்கிறது. முதல்வரின் இந்த நடவடிக்கை, குற்றம் சுமத்தப்பட்ட அமைச்சரை பாதுகாப்பதற்கான ஒரு நடவடிக்கை. அமைச்சர்களை பதவியிலிருந்து ஒதுங்கியிருக்க சொல்ல, கட்டாய விடுப்பில் அனுப்ப அரசியலமைப்பில் இடமில்லை.


## பொலிற்றிக்கல் கிரிக்கெட்



கிரிக்கெட்டில் நடுவர்களின் பணி விளையாடுவதல்ல. ஆனால் வடமாகாணசபை அரசியல் சர்ச்சையில் நடுவரே பந்துவீசியதை போன்ற விசித்திர சம்பவமொன்று நடந்தது. வடமாகாண அவைத்தலைவர் தலைமையிலேயே முதல்வரிற்கு எதிரான கையொப்பங்கள் ஆளுனரிடம் கொடுக்கப்பட்டுள்ளன. அவைத்தலைவர் நடுநிலையானவராக இருக்க வேண்டும். தனது பதவியை துறந்த பின்னரே முதல்வரிற்கு எதிரான நம்பிக்கையீனத்தை வெளிப்படுத்த வேண்டும். ஆனால், வடமாகாண அவைத்தலைவரின் செயற்பாடு, நடுவரே வந்து பந்துவீசியதை போலிருந்தது.

உள்ளூர் ஆடுகளங்களில் ஆடும் அணிகளிற்கு இரசிகர்கள் ஆதரவு மிகப்பெரிய பலம். எதிரணியை நிலைகுலைய வைக்கவல்லது அது. முதல்வர் எதிர் தமிழரசுக்கட்சி முரண்பாட்டில் வடக்கில் நடக்கும் வெகுஜன போராட்டங்கள் தமிழரசுக்கட்சி உறுப்பினர்களை கொஞ்சம் ஆட்டம் காண வைத்துள்ளதை போல தெரிகிறது. தமிழரசுக்கட்சியின் மாகாணசபை உறுப்பினர்களை குறிவைத்து சமூகவலைத்தளங்களில் தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. நேரில், தொலைபேசியில் தொடர்பு கொண்டு அழுத்தம் கொடுப்பதாக தெரிகிறது. இதனால் பலர் நிலைகுலைந்துள்ளதாக கூறப்படுகிறது.

கிரிக்கெட் வீரர்களிற்கு பணம் கொழிப்பது ஐபிஎல் சீசனில். வருடம் முழுவதும் ஐபிஎல் நடப்பதில்லை. அந்தந்த சீசனில் நடக்கும். அப்பொழுது வீரர்களை அணிகள் போட்டிபோட்டுக்கொண்டு வாங்கும். அதிக ஏலத்தொகை கொடுக்கும் அணிகள் வீரர்களை வாங்கலாம். இப்பொழுது வடமாகாணசபையில் நடப்பதுதான் உறுப்பினர்களிற்கு ஐபிஎல் சீசன். தத்தமது பக்கம் உறுப்பினர்களை இழுக்க ஏலம்தான் நடக்கிறது. இதில் “கெட்டிக்காரத்தனமாக” சுழித்து செல்பவர்கள் வாழ்க்கை முழுதும் உட்கார்ந்து சாப்பிடலாம்.



# பிழைத்தது சம்பந்தரின் கணக்கு... வீட்டுக்கு போகிறார் விக்கி!

நம்மாழ்வார்

விக்கியின் நாட்கள் எண்ணப்பட தொடங்கியாயிற்று. ஓரிரு நாளில் அவர் வீட்டுக்கு செல்ல வேண்டி நேரலாம். அதாவது, முதல்வர் விக்னேஸ்வரன் முன்னாள் முதல்வராக வீட்டுக்கு போகப் போகிறார். மூன்று வருடங்களின் முன்னர் தமிழர்களின் கர்வமாகவும், பெருமையாகவும், திமிராகவும் கையேற்ற மாகாணசபை, தோல்வியின் அடையாளமாக மாறப்போகிறது.

இதுதான் வடமாகாணசபையின் இன்றைய நிலை!

சத்தமில்லாமல் கொல்லும் புற்றுநோயாக வடமாகாணசபைக்குள் யார்? எந்த விடயம்? எந்த அணி? புகுந்ததென்பதே தெரியாமல் வடமாகாணசபை மரணிக்கப் போகிறது. அதன் மரணத்தின் காரணம் என்னவென்பதை போஸ்ட்மோர்ட்டம் செய்யக்கூட தமிழர்களால் முடியாமலிருக்க போகிறது என்பதுதான் துயரமானது.

வடமாகாணசபையில் இன்று ஏற்பட்டுள்ள சிக்கல், தமிழர்களின் முதலாவது அதிகார அலகான வடக்கு மாகாணசபையை தோற்றுப்போன ஒன்றாக வரலாற்றில் பதியப்போகிறது. மாகாணசபையையே நிர்வகிக்க தெரியாதவர்களிற்கு தனிநாடு எதற்கு என முந்தநாள் மழையில் முளைத்த உதய கம்மன்பில, ஞானசாரர் போன்றவர்களின் சீண்டல்களையெல்லாம் கேட்பதே விதியாகும்.

விக்கிக்கு ஆதரவாக - 11 உறுப்பினர்கள்
தமிழரசுக்கட்சி - 2, புளொட் - 1, ரெலோ - 3, ஈ.பி.ஆர்.எல்.எவ் - 4, உதிரி - 1

எதிராக தமிழரசுக்கட்சி 13 உறுப்பினர்கள்

சந்தேக உறுப்பினர்கள் தமிழரசுக்கட்சி - 2, புளொட் - 1, ரெலோ - 2

எதிர்க்கட்சி வரிசை - 8 உறுப்பினர்கள்

மாகாணசபையில் இப்பொழுது ஏற்பட்டுள்ள சிக்கல் முதல்வரை ஏன் வீட்டுக்கு அனுப்புகிறது? மாகாணசபையை ஏன் செயலிழக்கச் செய்யப் போகிறதென உங்களிற்கு சந்தேகம் எழலாம். அந்த சந்தேகத்தை தீர்க்க தொடர்ந்து படியுங்கள்.

இந்த பிரச்சனையை புரிந்து கொள்வதற்கு முன்னர் இன்றைய வடக்கு மாகாணசபையை நன்றாக புரிந்து கொள்ள வேண்டும். மாகாணசபையில் முப்பத்தெட்டு உறுப்பினர்கள் இருக்கிறார்கள், சி.வி.விக்னேஸ்வரன் முதல்வராக இருக்கிறார் என நீங்கள் அறிந்த தகவல்களிற்கு மேலதிகமாக அறிய வேண்டிய தகவல்கள் கொஞ்சம் உள்ளன. அத்தனையும் உள்வீட்டு பிரச்சனைகள்.

மாகாணசபை ஆரம்பித்ததென்னவோ வெகு சுமுகமாகவும், மங்களகரமாகவும்தான். யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த நிகழ்வில் சம்பந்தனும், விக்னேஸ்வரனும் முடிசூடி, வேலாயுதமும் ஏந்தியபடி உட்கார்ந்திருந்த புகைப்படம்தான் இன்றும் மீம்ஸ் கிரியேட்டர்களின் மிக விருப்ப படம். மங்களகரமென்றால் அப்படியொரு மங்களகரம்.

மாகாணசபை முதல்வராக விக்னேஸ்வரனை நியமிப்பதென முடிவுசெய்தது இரா.சம்பந்தன். அதுவரை முதல்வர் வேட்பாளர் போட்டியில் கற்பனையில் குதிரை விரட்டிக்கொண்டிருந்த மாவை சேனாதிராஜாவை காய் வெட்டியது பெரியகதை. கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் விக்கிக்கு எதிராக ஆளாளுக்கு போர்க்கொடி தூக்கினார்கள். அதையெல்லாம் சமாளித்து, வீரசிங்கம் மண்டபத்தில் விக்கி வேல் பிடித்து உட்கார்ந்திருந்ததை பேச ஒருநாள் தேவை.

மாகாணசபை இயங்க ஆரம்பித்த சிறிதுகாலத்திலேயே விக்கி தமிழரசுக்கட்சி தலைமைக்கிடையிலான முரண்பாடு மேலெழுந்து விட்டது. முதல்வர் பந்தயத்திலிருந்து தான் அகற்றப்பட்ட வலி மாவையின் மனதில் இருக்கிறதோ என்னவோ, விக்கியுடன் இறுக்கமான நிலைப்பாட்டையே தமிழரசுக்கட்சி எடுத்தது. விளைவு, தமிழரசுக்கட்சியின் சில உறுப்பினர்கள் மாகாணசபையில் விக்கிக்கு குடைச்சல் கொடுக்க ஆரம்பித்தனர். இதனால், மாகாணசபைக்குள் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆளுங்கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு எதிர்க்கட்சியென்ற நிலைமை மாறி, தமிழ்தேசிய கூட்டமைப்பிற்குள்ளேயே ஆளுங்கட்சியும், எதிர்கட்சியும் தோன்றின. சில சமயங்களில் விக்கி ஆளுங்கட்சி மாதிரி இருந்தார், அவரை எதிர்ப்பவர்கள் எதிர்க்கட்சி மாதிரி இருந்தனர். சில சமயங்களில் விக்கி எதிர்கட்சி மாதிரி இருக்க, அவரை எதிர்ப்பவர்கள் ஆளுங்கட்சி மாதிரி இருந்தனர். ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பினர் எதிர்க் கட்சியென்ற நிலையிலிருந்து மாறி, கூட்டமைப்பின் குத்துப்பாடுகளை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

இந்த சமயத்தில்தான் வடக்கு அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் கிளம்பின. இந்த குற்றச்சாட்டுக்களை சொந்தக்கட்சியினரே செய்தார்கள் என்பதைதான் குறித்து வைத்துக்கொள்ளுங்கள். குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்ய வேண்டுமென மாகாணசபைக்குள் ஒரு குழு அடம்பிடித்துக்கொண்டிருந்தது. மாகாணசபையை குழப்ப, செயலற்றதென்ற அபிப்பிராயத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்த செய்யப்பட்ட இரகசிய நிகழ்ச்சி திட்டத்தின் ஒரு பகுதியென்ற பேச்செல்லாம் அப்பொழுது எழுந்தது. கொழும்பு அரசுகளின் இரகசிய நிகழ்ச்சிநிரலை நம்மவர்களை வைத்தே செயற்படுத்தப்படுகிறதோ என்ற சந்தேகம் நெருப்பில்லாமல் கிளம்பிய புகையல்ல.

அமைச்சர்கள் மீதான விசாரணை அழுத்தமும் அப்படியான ஒன்றாககூட இருக்கலாம். எதிலும் நீதி, நேர்மை, வெளிப்படைதன்மையாக நடக்க வேண்டுமென நினைக்கும் முதல்வரும் தடாலடியாக ஒரு விசாரணைக்குழுவை அமைத்தார். தடாலாடி குழுவென்றதாலோ என்னவோ, இப்பொழுது அதை பார்த்து சந்தி சிரிக்கிறது.

மிக இரகசியமாக தயாரிக்கப்பட்ட விசாரணை அறிக்கையை முதல்வர் மாகாணசபை உறுப்பினர்களிற்கு வழங்கினார். அந்த அறிக்கையில் விவசாய அமைச்சர் ஐங்கரநேசன், கல்வி அமைச்சர் குருகுலராஜாவை பதவியிலிருந்து அகற்ற சிபாரிசு செய்யப்பட்டது. இந்த அறிக்கைதான் முதல்வரை வீட்டுக்கு அனுப்புகிறது.

அமைச்சர்களை குற்றம்சாட்டிய அறிக்கை வந்த பின் முதல்வரிற்கு முன்னாலிருந்தவை மூன்று தெரிவுகள்.


1. குற்றம்சாட்டப்பட்ட அமைச்சர்களை பதவி நீக்குவது.

2. நான்கு அமைச்சர்களையும் பதவி நீக்குவது.

3. யாரையும் பதவி நீக்காமல் விடுவது.

யாரையும் பதவிநீக்காமல் விடும் முடிவை முதல்வர் எடுத்தால் தமிழரசுக்கட்சி ஆதரிக்கும். ஏனெனில், தமிழரசுக்கட்சியின் குருகுலராஜாவை பாதுகாக்கலாம். அது சத்தமில்லாமல் முதல்வரை காலி செய்யும் காரியமென்பதை தமிழரசுக்கட்சியும் அறிந்திருக்கிறது. ஊழல் அமைச்சர்களை பாதுகாத்தார் என்ற மக்களின் அதிருப்தி, முதல்வர் பற்றிய நல்அபிப்பிராயத்தை இல்லாமல் செய்துவிடும்.

இரண்டு அமைச்சர்களை பதவிநீக்கினால், முதல்வர் தனது அணியை



பகைத்துக்கொள்வார். தற்போதைய நிலையில் மாகாணசபைக்குள் ஐங்கரநேசன் போன்ற சிலர்தான் முதல்வரிற்கு சார்பாக இருக்கிறார்கள். தமிழரசுக்கட்சியில் முதல்வரை ஆதரிப்பவர்களில் சிறிதரன் முக்கியமானவர். குருகுலராஜாவை அகற்றினால் சிறிதரனின் அதிருப்திக்குள்ளாவார். ஐங்கரநேசனை அகற்றினால், துணையாக நின்றவர்களையே அகற்றினார் என்ற அதிருப்திக்குள்ளாவார். மொத்தத்தில் மாகாணசபைக்குள்ளும், கட்சிக்குள்ளும் தனித்து போய்விடுவார்.

இதனால்தான் முதல்வர் இரண்டு அமைச்சர்களை பதவியிலிருந்து அகற்றவும், ஏனைய இருவரையும் ஒதுங்கியிருக்க வைக்கவும் முடிவு செய்திருக்கிறார்.

சுகாதார அமைச்சர் சத்தியலிங்கத்தை பாதுகாக்க வேண்டியது கட்சியின் கடமையாக தமிழரசுக்கட்சி நினைக்கிறது. வன்னியில் தமிழரசுக்கட்சிக்கு செல்வாக்கு இல்லாமலிருந்த நிலையில், அங்கு

தொடர்ச்சி அடுத்த பக்கம்...



# 'எனது ஆதரவு அந்தப்பக்கம்தான்'

## எதிர்க்கட்சி தலைவர் தவராசா சொல்கிறார்

தனி செல்வம்

**தீபம்: வடமாகாண அமைச்சர்கள் மீது முதலமைச்சர் எடுத்த நடவடிக்கை சாரியானதா?**

**தவராசா:** முதலமைச்சர் இரண்டு விதமான முடிவுகளை எடுத்துள்ளார். ஒன்று ஏற்கனவே இந்த விசாரணைக்குழு அறிக்கையின் விதப்புரையின் படி இரண்டு அமைச்சர்கள் பதவி நீக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில இரண்டு அமைச்சர்களையும் பதவிவிலகும்படி கேட்டிருக்கின்றார். அது சாரியான முடிவு. விசாரணைக்குழு அறிக்கையின் விதப்புரையின் அடிப்படையில் முடிவு எடுத்திருக்கிறார். இரண்டாவது ஏற்கனவே அந்த விசாரணைக்குழு அறிக்கையில் ஏனைய இரண்டு அமைச்சர்கள் மீதும் கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப் படவில்லை. அந்த சூழலில் உங்களுக்கு எதிராக மீண்டும் நான் விசாரணைக்குழு அமைக்கப் போகிறேன், அது மட்டும் நீங்கள் ஒதுங்கியிருக்கவேண்டும் என்பது பிழை. இப்படி கேட்பது நியாயமில்லை

ஏனென்றால் இந்த விசாரணை நடக்கும் போது எல்லோரையும் ஒதுங்கியிருக்கும்படி கேட்கவில்லை. இவ்வளவு காலமும் அமைச் சர்களை தமது கடமைகளை செய்யவிட்ட வர்தானே. அரசியல் அமைப்பில் இடமிருப்பதாகவும் தொரியவில்லை. நீங்கள் விடுமுறையில் நில்லுங்கள் நான் அந்த வேலைகளை செய்வேன் என்று



அமைச்சர்களிற்கு சொல்ல முடியாது. அமைச்சர்களை நீக்கிவிட்டு அவர்களின் கடமைகளை பொறுப்பேற்கலாம். நீதியரச ராக இருந்து கொண்டு இந்த முடிவுக்கு வந்தது எவ்வளவு சார்யென்று எனக்குத் தொரியவில்லை.

**தீபம்: தமிழரசுக்கட்சியால் முதலமைச் சருக்கு எதிராக கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு நீங்கள் ஆதரவாக கையெழுத்து போட்டீர்களா?**

**தவராசா:** இல்லை

**தீபம்: ஒருவேளை சபையில் நம்பிக்கை வாக்கெடுப்பு நடந்தால் உங்கள் ஆதரவு யாருக்கு?**

**தவராசா:** பெரும்பான்மை இருப்ப வர்கள்தான் ஆட்சியமைக்க முடியும். அவர்களால்தான் மாகாணசபை நிர்வாகத்தை சீராக நடத்த முடியும். பெரும்பான்மையை நெருங்குபவர்கள் ஒரு வாக்கு போதாமல் இருந்தால், நான் அவர்களை ஆதரிப்பேன். இதேவேளை, கட்சி என்ன முடிவெடுக்கிறதென்ப தையும் பார்க்க வேண்டும்.

**தீபம்: இந்த பிரேரணையை ஆதரிக் கும்படி தமிழரசுக்கட்சியினர் கேட்ட னரா? அங்கிருந்து யார் தொடர்பு கொண்டனர்?**

**தவராசா:** ஆதரவு தரும்படி தலைவர்கள் கேட்டார்கள். இது ஜனநாயகத்தின் உரிமை.

**தீபம்: முதல்வரிற்கு ஆதரவாக கையொப்பமிடுமாறு அணுகினார்களா?**

**தவராசா:** கையொப்பமிடுமாறு கேட்க வில்லை. முதல்வருக்கு இக்கட்டான நிலைவரும்போது எந்தப்பக்கம் நிற்பீர்கள் என கேட்டனர். பெரும்பான்மையை நிரூபித்தால் உங்களை ஆதரிப்பேன் என்றேன்.

**தீபம்: விக்னேஸ்வரன் வினைத்திற னற்றவர் என அவரை நீக்கினால், மாகாணசபையின் சிக்கல்கள் எல்லாம் தீர்ந்து, சிறப்பாக செயற்படுமா?**

**தவராசா:** அது எனக்குத் தொரியாது. முதலமைச்சர் விக்னேஸ்வரன் இல்லாமல் போனால் இனி வருபவர் யார் என்று தொரியாமல் வினைத்திறனாக நடத்துவார் என்று சொல்ல முடியாது. ஒட்டுமொத்த மாக இந்த மாகாணசபை வினைத் திறனற்றதாக, ஆளுமைத்திறனற்றதாக இருக்கிறது. இதைமாற்ற வேண்டும் என்ப தற்காக மாற்றினால், புதியவரை கொண்டு வந்து நிரூபித்துக்காட்ட வேண்டும்.

**தீபம்: வடமாகாணசபை இப்படியே போனால் எதிர்காலம் எப்படி இருக்கும்?**

**தவராசா:** முதலமைச்சர் நம்பிக்கைக் குரியவர். மதிப்புக்குரியவர். ஊழல் அற்றவர். நிர்வாகத்தை வினைத்திறனாக செயற்படுத்தாதது மட்டுமல்ல, ஒரு இக்கட்டான இறுகல் நிலைக்கு கொண்டு வந்து விட்டார். வடமாகாணசபைக்குள் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளார். இனி இவரால் மாகாணசபையை கொண்டு செல்லமுடியுமா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது.

இப்படியான குழப்பத்தை ஏற்படுத்தி விட்டு புதிய அமைச்சர்களை வைத்து வடமாகாணசபையை நடத்த முடியுமா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. ஆளும்கட்சி உறுப்பினர்களுடைய நம்பிக்கைக்குரியவராக இருக்கவேண்டும். பல சந்தர்ப்பங்களில் முதலமைச்சாரின் வேண்டுகொளை உறுப்பினர்கள் நிராகாரித்த சம்பவங்கள் நிறைய இருக்கிறது. பிரதி அவைத்தலைவர் தொரிவின்போது அப்போது முதலமைச்சர் இலங்கையில் இல்லை. ஆனால் எழுத்தின் மூலம் சபைத் தலைவருக்கு அறிவித்திருந்தவர் விவாகத்துக்கு இதை எடுக்க வேண்டாம், நான் வரும் மட்டும் இருங்கள் என்று. ஆனால் அவருடைய வேண்டுகோளை மீறி ஆளுங்கட்சியே பிரதிஅவைத்தலைவரை தீர்மானித்தார்கள். ஆளும் தரப்பு உறுப்பினர்கள் அவர் கேட்டதை செய்யவில்லை. அங்கேயே அவர் உறுப்பினர் நம்பிக்கையை இழந்த வராகத்தான் காணப்படுகிறார். இவ்வாறு பலசம்பவங்கள் நடந்துள்ளன. ஆளும்கட்சி உறுப்பினர்களுக்கு நம்பிக்கைக்குரியவராக இல்லாவிட்டால் எவ்வாறு ஆட்சியை கொண்டுசெல்வார்?

---

வெற்றியீட்டியவர். அங்கு கட்சியை வளர்த்து வருகிறார். ஆகவே, அவரை காப்பாற்ற என்ன விலையென்றாலும் கட்சி கொடுக்கும்.

இதற்குள் இன்னொரு தகவலும் உண்டு. சத்தியலிங்கத்தின் மீதான விசாரணை முறையாக நடக்கவில்லையென்ற அபிப்பிராயம் முதல்வரிற்கு உண்டு. அது மீண்டும் முறையாக நடத்தப்பட வேண்டுமென்பதில் முதல்வர் உறுதியாக இருக்கிறார். சத்தியலிங்கத்தை முதல்வர் குறிவைத்துள்ளார் என்றும் சொல்லலாம். முதல்வரிற்கு எதிரான தமிழரசுக்கட்சி அரசியலை அவர் மாகாணசபைக்குள் செய்கிறார் என முதல்வர் தரப்பு கருதுகிறது. ஆக, மாகாணசபைக்குள் சத்தியலிங்கத்தை முன்வைத்து தமிழரசுக்கட்சி எதிர் முதல்வர் மோதல் வெளிப்படையாக நடக்கப்போகிறது.

இந்த பின்னணி தெரிந்தும், சத்தியலிங் கத்தில் முதல்வர் கைவைத்துள்ளார். சத்தியலிங்கம், டெனீஸ்வரன் இருவரையும் கட்டாய விடுப்பில் அனுப்பியிருக்கிறார். அமைச்சர்கள் நால்வரையும் பதவியிலிருந்து அகற்றகூடாதென சம்பந்தன், மாவை போன்றவர்கள் வலியுறுத்தியும், முதல்வர் அந்த முடிவெடுத்தது, மோதிப்பார்க்க நானும் தயார் என்ற முதல்வரின் மனநிலைதான் காரணம்.

தமிழரசுக்கட்சியும் மோதிப்பார்க்கலா மென தொடைதட்டி களமிங்கிவிட்டது. முதல்வரிற்கு எதிராக 22 உறுப்பினர்களின் கையெழுத்துடன் ஆளுனரை சந்தித் திருக்கிறது. புதிய முதல்வராக யாரை நியமிக்கலாமென்ற முடிவும் எடுக்கப்பட்டுள்ளது. தமிழரசுக்கட்சியின் புதிய முதல்வர்

சீ.வீ.கே.சிவஞானம்.

**முதல்வரை பதவி நீக்கலாமா?**

இதுதான் இன்று விவாதத்திற்குரிய விடயம். முதல்வரை பதவி நீக்குவதெனில் இருபது உறுப்பினர்களின் ஆதரவு தமிழரசுக்கட்சிக்கு தேவை. இருபது உறுப்பினர்களின் ஆதரவுடன் ஆளுனரை அணுகி, பெரும்பான்மையை நிரூபித்தாலே முதல்வரை அகற்றலாம்.

**அதற்கு வாய்ப்புண்டா?**

மாகாணசபையில் தற்போது மொத்தமாக பதினெட்டு (முதல்வர், அவைத்தலைவர் உள்ளடங்கலாக) உறுப்பினர்களை தமிழரசுக்கட்சி வைத்துள்ளது. ஈ.பி.ஆர். எல்.எவ் நான்கு, ரெலோ ஐந்து, புளொட் இரண்டு உறுப்பினர்களை வைத்துள்ளனர். உதிரியாக ஐங்கரநேசன் இருக்கிறார். மிகுதி எட்டு உறுப்பினர்களும் ஈ.பி.டி.பி, சுதந்திரக்கட்சி, அகிலஇலங்கை மக்கள் காங்கிரஸ் என அரசசார்பானவர்கள்.

தமிழரசுக்கட்சியின் உறுப்பினர்களில் விக்கி, அனந்தி தவிர்ந்த பதினாறு உறுப்பி னர்கள் முதல்வரிற்கு எதிராக கையெழுத்திட்டுள்ளனர். பதினாறு உறுப்பினர்களின் ஆதரவுடன் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாது. ரெலோ, புளொட்டின் உதவியை தமிழரசுக்கட்சி நாடியது. அவர்களிற்கு அமைச்சர் பதவியென்ற பேரமெல்லாம் பேசப்பட்டது. ஆனால் அந்த இரண்டு கட்சியும் முதல்வரிற்கு எதிரான நடவடிக்கைக்கு துணைபோகவில்லை. அமைச்சர் பதவிக்காக டெனீஸ்வரன் மட்டும் தமிழரசுக்கட்சியை ஆதரித்தார்.

இதன்பின்னர்தான் எதிர்க்கட்சிகளுடன் பேச்சு நடத்தப்பட்டது. அந்த வகையில் நான்கு, ஐந்து உறுப்பினர்களின் ஆதரவு கிடைத்தது. அரசதலைமையிடம் உதவி கோரி இந்த ஆதரவு பெறப்பட்டதாகவும் ஒரு தகவலுண்டு. ஆக மொத்தத்தில் பேரினவாத அரசஆதரவின் துணையுடன் வடமாகாண முதல்வர் பதவியிலிருந்து விக்னேஸ்வரனை அகற்றியுள்ளது தமிழரசுக்கட்சி.

ஆனால், அது தமிழரசுக்கட்சியின் அரசியல் தற்கொலையாகவும் முடிய லாம். அரசதரப்புடன் கைகோர்த்து முதல்வரை கவிழ்க்கும் முடிவிற்கு தமிழரசுக்கட்சி இலகுவில் போகுமென யாரும் எதிர்பார்த்திருக்கவில்லை. வட மாகாணசபையை குழப்பி, வினைத் திறனில்லாத சபையாக இயங்குகிற தென்ற அபிப்பிராயத்தை பொதுமக்க ளிடம் ஏற்படுத்த, ஆளும் அரசுகள் மிகப்பெரியளவில் முயன்று கொண்டி ருந்தன. தமிழரசுக்கட்சியின் இந்த முடிவு, மாகாணசபையை குழப்ப ஆளுந்தரப்பின் அனுசரணையுடன்தான் இத்தனை நாளாக அதன் உறுப்பினர்கள் செயற்பட்டார்களோ என்ற சந்தேகத்தையும் வலுவாக்கியுள்ளது.

வடமாகாணசபையை குழப்பும் விதமாக செயற்பட்டது, முதல்வரிற்கு எதிராக அரசுடன் கைகோர்த்தது என்ற வரலாற்றின் பழிச்சொல் கழுவ முடியாத கறையாக அந்த கட்சியுடன் ஒட்டியிருக்கும். அது சம்பந்தரின் தோல்வியாகவும் இருக்கும். ஏனெனில், வடமாகாணசபை முதல்வராக விக்னேஸ்வரனை நியமிக்க பங்காளிக்கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தன. அதையெல்லாம் புறந்தள்ளித்தான் அவரை முதல்வராக நியமித்தனர். தமது முடிவு தவறென அவர்கள் இப்பொழுது மல்லுக்கட்டுகிறார்கள் என்றால், அது சம்பந்தரின் தோல்விதானே!

# அடுத்த அமைச்சர்கள் பட்டியல் இதுதான்!


கிறிஸ்ரி பெத்துராஜ், நிஹாலே, நட்சத்திரா

வடமாகாணசபைகுழப்பங்கள் தலையை சுற்றவைக்கிறது. அமைச்சர்களின் ஊழல் குற்றச்சாட்டையடுத்து, அமைச்சர்களை பதவியில் இருந்து அகற்றினார் முதல்வர் விக்னேஸ்வரன். அமைச்சர்கள் பதவிநீக்கத்திற்கு ஒத்துழைக்காமல் முதலமைச்சரையே பதவிநீக்கி மக்களின் எதிர்பார்ப்புக்களை கவிழ்த்து கொட்டிவிட்டு நிற்கிறது தமிழரசுக்கட்சி.


குழப்பகரமாக உள்ள வடமாகாணசபை குழப்பங்கள் இப்போதைக்கு ஓயாது. தூவானம் அல்லஞ் நீண்டகாலத்திற்கு அடைமழையே பெய்துகொண்டிருக்கப் போகிறது. பதவிகளிற்காக நடக்கும் இந்த இழுபறிகளில் கூடுதல் சுவாரஸ்யம் நடக்கப்போவது அமைச்சு பதவிகளை பகிரும்போதுதான். பதவிகளிற்காக முடியுமான தில்லாலங்கடி வேலைகளை அனைவரும் செய்வார்கள்.

ஏற்கனவே அமைச்சு பதவி பங்குபிரித்த இழுபறி எல்லோருக்கும் நினைவிருக்கும். கட்சிக்கு தரவில்லை, மாவட்டத்திற்கு தரவில்லை என ஒவ்வொரு பக்கமாக ஆளாளுக்கு இழுப்பார்கள். இந்த இழுபறியை முடித்து, அமைச்சு பதவிகளை பங்குபிரிப்பதற்குள் சம்பந்தனிற்கு போதும்போதுமென்றாகி விட்டது.

தமிழரசுக்கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், ரெலோ என்ற நான்கு கட்சிகளின் கூட்டு தமிழ்தேசிய கூட்டமைப்பு. தமிழ்தேசிய கூட்டமைப்பு வடக்கு மாகாணம் என்பது ஐந்து மாவட்டங்களை உள்ளடக்கியது. நான்கு கட்சிகள், ஐந்து மாவட்டங்கள் இரண்டையும் பிரதிநிதித்துவப்படுத்தும்விதமாக அமைச்சரவை அமைய வேண்டும். நியமிக்கக்கூடிய அமைச்சர்கள் எண்ணிக்கைமுதல்வரை தவிர்த்து நான்கு.





சத்தியலிங்கம் - றிப்கான்


ஜி.ரி.லிங்கநாதன்


டெனீஸ்வரன்


பசுபதிப்பிள்ளை


ஞானசீலன் குணசீலன்


ப.அரியரட்ணம்

இந்த சிக்கல் இப்பொழுது இல்லை. ஏனெனில், பங்காளிக்கட்சிகள் யாரும் இந்த குழப்பத்திற்கு ஒத்துழைக்கவில்லை. தமிழரசுக்கட்சியும் எதிர்க்கட்சிகளும் சேர்ந்துதான் முதல்வரிற்கு எதிரான இந்த குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளன.

முதலமைச்சர் யார், அமைச்சர்கள் யார், அவைத்தலைவர் யார் என்ற பல கேள்விகள் உள்ளன. இதையெல்லாம் பங்காளிகளுடன் தமிழரசுக்கட்சி பகிரும் என்று கருத முடியாது. ஏனெனில், தமது முடிவிற்கு ஒத்துழைக்காத கட்சிகளிற்கு பதவிகள் வழங்க தமிழரசுக்கட்சி சம்மதிக்க வாய்ப்பில்லை.

தற்போதைய அமைச்சரவை கிட்டத்தட்ட செல்லுபடியற்றதாகிவிட்டது. புதியவர்கள் நியமிக்கப்படுவது உறுதியாகி விட்டது. புதிய அமைச்சரவையில் யார் யார் அங்கம் வகிப்பார்கள்? அவைத்தலைவர் பதவி உள்ளிட்ட ஏனைய பதவிகள் எப்படி பகிரப்படும்?

தமிழரசுக்கட்சியின் பதினெட்டு உறுப்பினர்களிற்குள்தான் இந்த பதவி பகிரப்படவுள்ளது. அதனால் சிக்கல் அதிகமில்லாததை போல் தெரியும். ஆனால், இதிலும் நிறைய சிக்கல் உள்ளது. ஈ.பி.டி.பி உள்ளிட்ட எதிர்க்கட்சிகளுடன் கூட்டிணைந்துதான் முதல்வர் பதவி கவிழ்ப்பை தமிழரசுக்கட்சி நடத்தியிருக்கிறது தமிழரசுக்கட்சியின் மூன்று, நான்கு உறுப்பினர்கள் தீவிர முதல்வர் ஆதரவாளர்கள். அவர்களுடன் நடந்த பேரம் பேசலில் முக்கிய பதவிகள் வழங்கப்படும், ஒத்துழையுங்கள் என்றுதான் கூறப்பட்டுள்ளது.

அதேபோல, எதிர்க்கட்சிகளிற்கும் சில எதிர்பார்ப்பு உள்ளது. முக்கியமாக பிரதி அவைத்தலைவர் பதவி எதிர்க்கட்சிக்கு வழங்குவதை பரிசீலித்து நிலைமைக்கு ஏற்ப செயற்படுவதாக தமிழரசுக்கட்சியினர் கூறியிருக்கிறார்கள்.

இப்போதைய நிலையில் நான்கு அமைச்சர்களையும் பதவியிலிருந்து நீக்குவதா, இரண்டு அமைச்சர்களை மட்டும் நீக்குவதா என்பதில் கட்சிக்குள் உடன்பாடு எட்டப்படவில்லை. சுகாதார அமைச்சர், போக்குவரத்து அமைச்சரிற்கு எதிரான விசாரணைகள் நடத்தப்படும் வரை அவர்கள் ஒதுங்கியிருக்கலாமென்றும் கருதப்படுகிறது.

ஆகவே நான்கு அமைச்சுக்கும் யாரை நியமிக்க வாய்ப்புள்ளதென்ற பட்டியலை தயாரித்துள்ளோம்.

### கல்வியமைச்சு

கல்வியமைச்சர் குருகுலராஜா கிளிநொச்சியை சேர்ந்தவர். சிறிதரனின் ஆதரவாளர். அதுபோல அரியரட்ணமும் கிளிநொச்சியை சேர்ந்தவர். அவரும் சிறிதரனின் ஆதரவாளர். குருகுலராஜா மாற்றப்பட்டால்கிளிநொச்சியில்முதலிடம் பிடித்த அரியரட்ணம் கல்வியமைச்சராக வாய்ப்புண்டு. அவருக்கும் கல்வியமைச்சில் ஒரு கண் இருந்து கொண்டிருப்பதாக கூறப்படுகிறது. கல்வியமைச்சரிற்கு எதிராக அரியரட்ணம் சாட்சியமளித்தார் என விசாரணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. பச்சிலைப் பள்ளியில் நடந்த நிகழ்வொன்றில் உரையாற்றிய சிறிதரன், "அமைச்சு பதவிக்காகத்தான் ஒருவரையொருவர் வீழ்த்தும் வேலைகள் செய்கிறார்கள்" என சிறிதரன் கூறியிருந்தார். அண்மைய சில மேடைகளில் சிறிதரனுடன் முரண்படும்கருத்துக்களை அரியரட்ணம்தெரிவித்துள்ளார். சிறிதரனிற்குஎதிராகசெயற்பட்டு அரியரட்ணத்தால் அமைச்சு பதவியை பெறலாமா என்பது சந்தேகம்தான்.

இதை தவிர்த்தால் கல்வி புலத்தை சேர்ந்த தர்மலிங்கம் இருக்கிறார். இவர் அரசியலிற்கு புதியவர். இதனால் வாய்ப்பு கிடைக்காது. முதலமைச்சரிற்கு எதிரான நடவடிக்கைகளில் சிறப்பாக செயற்பட்ட இளையவர்கள் என்றரீதியில் சயந்தன், ஆனோல்ட் போன்ற இளையவர்களையும் தமிழரசுக்கட்சி பரிசீலிக்கலாம்.

### சுகாதார அமைச்சு

நமக்கு கிடைத்த தகவல்படி சுகாதார அமைச்சர் சத்தியலிங்கத்தின் நடவடிக்கைகளில் முதல்வரிற்கு அதிருப்தியிருந்தது. மாகாணசபைக்குள் சத்தியலிங்கம் கட்சி அரசியல் செய்கிறார், இதனால் மாகாணசபை செயற்பாட்டில் குழப்பங்கள் வருகிறதென முதல்வர் கருதினார். தனக்கு நெருக்கமானவர்களிடம் இதை பகிர்ந்துமுள்ளார். ஆகவே சுகாதார அமைச்சரை பதவியிலிருந்து அகற்றுவதில் உறுதியாக இருந்தார். சத்தியலிங்கத்தை முன்வைத்து நடந்த போரில்தான் முதல்வரை தமிழரசுக்கட்சி அகற்றியது. ஆகவே இந்த அமைச்சு அவருக்குரியது. அவர் முதல்வர் போட்டியிலும் இருக்கிறார். அதேநேரம் ஊழல் குற்றச்சாட்டுக்களும் உள்ளன.

நமது மரபான சிந்தனைப்படி இன்னொரு வைத்தியரிற்குத்தான் அதனை வழங்க

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

வேண்டும். அப்படி பார்த்தால் மன்னாரை சேர்ந்த வைத்தியர் ஞானசீலன் குணசீலன் இருக்கிறார். ரெலோ கட்சியை சேர்ந்தவர். முதல்வரிற்கு எதிரான நடவடிக்கைக்கு ரெலோ சம்மதிக்கவில்லை. அதனால் குணசீலனை மட்டும் இழுத்தெடுக்கலாமா என யோசிக்கலாம். தமிழரசுக்கட்சியின் இளையவர்களிற்கும் இந்த அமைச்சில் வாய்ப்புண்டு.

**போக்குவரத்து அமைச்சர்**

தற்போதைய போக்குவரத்து அமைச்சர் டெனீஸ்வரன் ரெலோ கட்சியை சேர்ந்தவர். ரெலோ கட்சி முதல்வரிற்கு எதிரான நடவடிக்கைக்கு ஆதரவளிக்கவில்லை. ஆனால் டெனிஸ்வரன் ஆதரவளிக்கிறார். அமைச்சு பதவி பேரம்பேசலின் பின்னர்தான் கட்சியின் முடிவை மீறி செயற்பட்டார் என்கிறார்கள். அப்படி நடந்திருந்தால் அவர்தான் போக்குவரத்து அமைச்சர்.

தற்காலிக கண்துடைப்பு விசாரணைகள் எதாவது நடத்தப்படுமானால், தற்காலிக போக்குவரத்து அமைச்சராகும் வாய்ப்பு யாழ் மாவட்டத்தை சேர்ந்த சிவயோகனிற்கும் உள்ளது. முதல்வரிற்கு எதிராக கம்பு சுற்றியவர்களில் முக்கியமானவரான பரஞ்சோதிக்கும் பதவி வழங்கப்பட வாய்ப்புண்டு.

**விவசாய அமைச்சர்**

விவசாய அமைச்சர் பதவிதான் தமிழரசுக்கட்சியின் பரிசளிப்பு பட்டியலில் உள்ளது. ஏனெனில் விவசாய அமைச்சரவை பதவிநீக்குவதென்ற குறிக்கோளுடன் ஆரம்பிக்கப்பட்ட விசாரணை இது. விவசாய அமைச்சரை மட்டுமல்ல, அவரை ஆதரித்த முதல்வரையும் பதவிநீக்கியுள்ளது. மொத்த மாகாணசபையையும் இடியப்ப சிக்கலாக்கியுள்ளது. விவசாய அமைச்சை கையில் வைத்துக்கொண்டு தமிழரசுக்கட்சி பேரம்பேசலில் ஈடுபட்டு வருகிறது. இந்த பகுதியை தயார்செய்து கொண்டிருக்கும்வரை புளொட் அமைப்பின் ஜி.ரி.லிங்கநாதனை (வவுனியா) பிரித்தெடுக்கும் முயற்சியில் தமிழரசுக்கட்சி ஈடுபட்டுள்ளது. முதல்வரிற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையில் கையெழுத்திட்டால் விவசாய அமைச்சர் என்ற வாக்குறுதி அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. எனினும், அவர் அதை ஏற்கவில்லை. அதனால் பிறகட்சிக்குள் வலைவீசி எடுக்கப்படுபவர்களிற்கு இந்த வாய்ப்பு கிடைக்கலாம். அப்படி யாரும் சிக்காத பட்சத்தில் தமிழரசுக்கட்சியின் முல்லைத்தீவு பிரதிநிதிகளிற்கு வழங்கப்படலாம். கமலேஸ்வரன், புவனேஸ்வரன் என்ற முல்லைத்தீவு பிரதிநிதிகளுடன் கிளிநொச்சியின் பசுபதிப்பிள்ளை, யாழ்ப்பாணத்தின் பரஞ்சோதி போன்றவர்களிற்கும் வாய்ப்புண்டு. முதல்வருடன் சமரசமானால் ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரனின் சகோதரர் சர்வேஸ்வரனுக்கு இந்த அமைச்சு கிடைக்கலாம். அல்லது விவசாய அமைச்சை தமிழரசுக்கட்சிக்கு விட்டுக்கொடுத்து, சர்வேஸ்வரன் கல்வி அமைச்சரும் ஆகலாம்.

> **டெனிஸ்வரன் ரெலோ கட்சியை சேர்ந்தவர். ரெலோ கட்சி முதல்வரிற்கு எதிரான நடவடிக்கைக்கு ஆதரவளிக்கவில்லை. ஆனால் டெனிஸ்வரன் ஆதரவளிக்கிறார். அமைச்சு பதவி பேரம்பேசலின் பின்னர்தான் கட்சியின் முடிவை மீறி செயற்பட்டார் என்கிறார்கள். அப்படி நடந்திருந்தால் அவர்தான் போக்குவரத்து அமைச்சர்.**

இது தவிர, ஏனைய சில பதவி நியமனங்களும் இதில் செல்வாக்கு செலுத்தும். சிவஞானம் முதல்வரானால், கமலேஸ்வரன் அவைத்தலைவராக நியமிக்கப்படலாம். அப்படியொரு நிலை வந்தால், விவசாய அமைச்சு கிளிநொச்சி, அல்லது யாழ்ப்பாணத்திற்கு செல்லலாம்.

இதேவேளை, பிரதி அவைத்தலைவர் பதவியை எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவருக்கு வழங்கவும் ஆலோசிக்கப்படுகிறது. தமிழரசுக் கட்சியின் நடவடிக்கைக்கு ஒத்துழைத்ததால் இந்த முடிவு எடுக்கப்படலாம். அனேகமாக அகில இலங்கை மக்கள் காங்கிரசின் தலைவர் ரிசாட் பதியூதினின் சகோதரர் றிப்கானிற்கு வழங்கப்படலாம். அல்லது இன்னொரு சிங்கள உறுப்பினருக்கு வழங்கப்படலாம். இந்த நியமனத்தின்போது இனநல்லிணக்கம் என்ற பெயரில் இது வழங்கப்படலாம்.

4-ம் பக்க தொடர்ச்சி...


வைக்கிறோம். அண்மையில் பிரித்தானியாவிலிருந்து வந்திருந்த ஒரு பெண்மணியை சந்தித்திருந்தேன். பிரித்தானியாவில் குடும்ப பிணக்குகளை கையாளும் துறையொன்றில் பணியாற்றுபவர் அவர். வெளிநாட்டு திருமணங்கள் தொடர்பாக பெற்றோரை விழிப்புணர்வூட்ட வேண்டியது அவசியம், ஏதாவது தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து அதை செய்ய முயற்சிக்கப் போவதாக சொன்னார். காரணம், ஈழத்தமிழ் குடும்பங்களிற்குள் அண்மைக்காலமாக சடுதியாக ஏற்பட்டுள்ள பிளவுகள்.

தமது துறையால் கையாளப்படும் ஈழத்தமிழர்களின் குடும்ப பிணக்குகளில் தான் விசேட கவனம் செலுத்தி தரவுகளை சேகரிப்பதாக சொல்லும் அவர் இரண்டு அதிர்ச்சிகரமான புள்ளிவிபரங்களை சொன்னார். அதிக வயது வித்தியாசத்தில் உள்ள தம்பதிகளிற்குள், கடந்த ஏழு வருடங்களிற்குள் திருமணமானவர்களிற்குள்தான் இந்த சிக்கல் அதிகமாக உள்ளதாக கூறுகிறார்.

திருமணத்திற்காக அங்கு வந்து, குடும்ப பிரச்சனைக்குள் சிக்கும் பெண்களுடன் நெருங்கிப்பழகும்போது இன்னொரு அவதானிப்பையும் செய்துள்ளார். குடும்பத்திற்குள் பிரச்சனை ஏற்பட்டுள்ளதை கணிசமான பெண்கள் இலங்கையிலுள்ள பெற்றோரிற்கு சொல்வதில்லை. கணவருடன் ஏற்பட்ட பிரச்சனை காவல்த்துறைவரை வந்த பின்னர், குடும்பம் மற்றும் சமூகத்தை கருத்தில்கொண்டு குறிப்பிடத்தக்களவான பெண்கள் சமரசம் செய்து கொள்கிறார்கள்.

எஞ்சியவர்கள் ஒரே வீட்டிலேயே பிரிந்து வாழ்கிறார்கள். வெளியாரின் பார்வைக்குத்தான் அவர்கள் கணவன் மனைவி. உள்ளுக்கும் வேறுவேறு குடும்பங்கள். குறைந்தளவானவர்கள் பிரிந்து வாழ்கிறார்கள். இந்த மூன்று வகையினரும் இலங்கையிலுள்ள பெற்றோரிற்கும், உறவினர்களிற்கும் விடயத்தை மறைத்து விடுகிறார்கள்.

இந்த பிரச்சனைகளின் அவதானத்தை எளிய உதாரணத்தில் அவர் சொன்னார். ஊரில் உயர்தரம் முடித்த ஓரிரு வருடங்களில் பெண்பிள்ளைகள் வெளிநாட்டுக்கு மணமகள்களாக வருகிறார்கள். உயர்தரத்திற்கு, இளமனதிற்கு உரிய அத்தனை தன்மைகளும் அவர்களிற்குள் இருக்கும். வகுப்பில் யாரையாவது காதலித்திருக்க கூடும். அல்லது நெருக்கமாக பழகியிருக்க கூடும். இன்னும் பல கூடப்படித்த நண்பர்கள் இருப்பார்கள். பாடசாலையை விட்டு வெளியில் வந்ததும் அவர்கள் சமூக ஊடகங்களில், தொலைபேசியில் பேசிக்கொள்வார்கள். இப்படியான ஒரு மணமகள் வெளிநாட்டிற்கு வந்த பின்னரும், பேஸ்புக் போன்ற சமூக ஊடகங்களில் நண்பர்கள் தகவல் அனுப்பலாம். வட்ஸ் அப்பில் எதையாவது பகிரலாம். இதை மணமகன் பார்த்தால் சந்தேகம் ஆரம்பித்து பிரச்சனையாகிறது. அவளுக்கு தெரிந்தோ, தெரியாமலோ அவர்களின்



பழைய உரையாடலை பரிசோதிக்க முயற்சிப்பான். அப்பொழுது விளையாட்டாக பேசியதெல்லாம் இப்பொழுது வினையாகலாம்!

வயது வேறுபாடு காரணமாக இருவரின் தேர்வுகள், விருப்பங்கள், நடை உடை பாவனைகள் வேறுபடும். இதுவும் பிரச்சனைகளை தோற்றுவிக்கிறது. இந்த கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டது ஒரு உதாரணம். கணவனின் படத்தை பகிரங்கமாக பகிர, ஏதாவது விசேடங்களில் தம்பதியாக செல்ல ஏற்படும் தயக்கத்தின் அடுத்த கட்டமே மேலே சொன்ன பிரச்சனைகள்.

ஒரு குடும்பத்தின் பொருளாதாரத்தை உயர்த்த சுலபமான வழியாக வெளிநாட்டு மாப்பிள்ளை இருக்கிறார். ஆனால், இதற்காக பெண்கள் கொடுக்கும் விலையை யாரும் கவனத்தில் கொள்வதில்லை. அந்தப் பெண்களின் கண்ணீர் ஊரருக்கு தெரியாமல் மறைக்கப்படலாம். பெற்றோரின் மனச்சாட்சியையுமா கேள்வி கேட்காமல் விடும்?


## தீபம் வழங்கும் மாபெரும் பரிசு திட்டம்.
## தீபம் வாங்கினால் பெறுமதிமிக்க பரிசுகள் காத்திருக்கின்றன.

ஒவ்வொரு மாதமும் குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்படும் 20 வாசகர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்கள்.

**London metropolitan college**

வழங்கும் 4500 பெறுமதியான கற்கைநெறி கட்டண கழிவினை பெறுவதற்கு அரியசந்தர்ப்பம்.

**நீங்களும் எமது பரிசு மழையில் இணையலாம்.**

முறை 1. கூப்பனை நிரப்பி எமது முகவரிக்கு அனுப்பலாம் அல்லது நேரில் கையளிக்கலாம்.

முறை 2. கூப்பனை நிரப்பி எமது பத்திரிகை முகவர் இடம் கொடுக்கலாம்.

முறை 3. கூப்பனை நிரப்பி எமது facebook.com/deepamweekly/ பக்கத்திற்கு அனுப்பலாம்

குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படும் வாசகர்கள் பெயர்கள் ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் எமது பத்திரிகையில் வெளியிடப்படும்.

**Issue Number 97**

Full Name :..........

Address :..........

Nic :..........

Phone Number :..........














## இணைய யன்னல்

























# தென்னாசிய சந்தைக்கு வரும் டுகாட்டி!



உலகளவில் மோட்டார் சைக்கிள் தயாரிப்பில் முன்னணி நிறுவனமான டுகாட்டி தனது புதிய மான்ஸ்டர் 797 மொடலை இந்தியாவில் விற்பனைக்காக அறிமுகப்படுத்தியுள்ளது.

கடந்த 2016ல் இத்தாலியில் நடைபெற்ற மோட்டார் கண்காட்சியில் அறிமுகமான இந்த பைக், டுகாட்டியின் மான்ஸ்டர் வகையில் மிகவும் சிறிய மொடலாக உள்ளது.

ஏர்கூல் 803சிசி திறனில் எல்ட்வின் எஞ்சின் புதிய டுகாட்டி மான்ஸ்டர் 797 மொடலில் உள்ளது. இது 74 பி.எச்.பி பவர் மற்றும் 68.6 என்.எம் டார்க் திறனை வழங்கும்.

இந்த பைக்கில் உருவாகும் இத்தகைய பவர் மற்றும் டார்க் திறனை பைக்கில் பொருத்தப்பட்டுள்ள 6ஸ்பீட் கியர் பொக்ஸ் பின் சக்கரங்களுக்கு கடத்தும்.

மான்ஸ்டர் 797 பைக்கில் ஒரே பகுதியை கொண்ட டுபூலர் ஸ்டீலினால் ஆன ஃபிரேம் உள்ளது. அதனுடன் இரட்டை ஸ்பார் ஸ்விங் களம் உள்ளது.

பைக்கின் முன்பக்கத்தில் சஸ்பென்ஷனின் சிறப்பான செயல்பாட்டிற்காக 43எம்.எம் காயபா யுஎஸ்டிஃபோர்க் பொருத்தப்பட்டுள்ளது. பைக்கின் பின்பக்கத்தில் அதிர்வுகளை உள்வாங்கிக்கொள்ள சாஸ் மோனா ஷொக் அப்ஸபர் உள்ளது.

4 பிஸ்டன் கொண்ட மோனோபிளாக் கலிபர் ட்வின் 320 எம்.எம் அளவில் முன் சக்கரங்களுக்கான பிரேக் அமைப்புகள் உள்ளன. அதேபோல பிரம்போ டிஸ்க் கொண்ட 245 எம்.எம் அளவுக்கொண்ட பின்பக்க பிரேக் அமைப்புகள் உள்ளன.

குறுக்கும் நெடுக்குமான டிசைனில் தயாரான ரோஸா 2 டயர்கள், இந்த வண்டியின் 17 அங்குல அலாய் சக்கரங்களில் முன் பின் என இருவேறு பக்கங்களில் உள்ளன. மான்ஸ்டர் 821 மொடலில் இருக்கக்கூடிய எல்.சி.டி பனல் லைட்டை தான் புதிய மான்ஸ்டர் 797 பைக்கும் பெற்றுள்ளது.

இந்த பைக்கில் உள்ள மொத்த விளக்குகளும் எல்.இ.டி தொழில்நுட்பத்தால் இயங்குபவை. மேலும் இதற்கான விளக்குகளில் மட்டும் சிவப்பு, ஸ்டார் வையிட் சில்க் மற்றும் ஸ்டெல்த் பிளேக் என நான்கு நிறங்களில் தயாரிக்கப்படுகின்றன.

பார்க்கவே மிரட்டும் வடிவத்தில் உள்ள டுகாட்டி மான்ஸ்டர் 797 மோட்டார் சைக்கிள், விற்பனையில் டிரையம்பின் ஸ்ட்ரீட் ட்ரிபிள் மற்றும் ஏப்ரில்லா ஷிவர் 900 ஆகிய பைக்குகளுடன் போட்டியிட உள்ளது.





▶ யாழ். அரியாலை காந்தி விளையாட்டுக் கழகம் நடாத்திய காந்தி பிறீமியர் லீக் 04 கிறிக்கெட் போட்டி கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் , கௌரவ விருந்தினர்களாக வட மாகாணசபை உறுப்பினர்கள் இ.ஆர்னால்ட், பா.கஜதீபன் மற்றும் யாழ் மாநகரசபை ஆணையாளர் பி.வாகீசன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.




# ‘எதிர்க்கட்சி தலைவர் செய்ய வேண்டியதை செய்து கொண்டிருக்கிறேன்’

## வடக்கு எதிர்க்கட்சீ தலைவர் தவராசா அனுபவங்களை எழுதுகிறார்

(கடந்தவார தொடர்ச்சி)

இதனைத் தொடர்ந்து 1981, 82, 83 காலப்பகுதியில் கணக்கியற் துறையில் எனது ஈடுபாடு காரணமாக நான் பொருளாதாரரீதியில் நல்ல நிலையில் இருந்தேன். அப்போது டக்ளஸ் தேவானந்தா அரசியல் வன்முறை செயற்பாடுகளினால் தடுப்புக்காவலில் இருந்தார். தேவானந்தாவின் தந்தையாரும், சகோதரர்களும் என்னுடன்தான் தங்கியிருந்தனர்.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் ஒருநாள் இந்தியாவிலிருந்து டக்ளஸ் தேவானந்தா தொலைபேசியில் பேசினார். புதிய கட்சியைப் பதிவுசெய்ய இந்தியாவிலிருந்து இரண்டுபேர் வருவதாகவும், அவர்களிற்கு உதவி செய்யு

**டக்ளஸ் தேவானந்தா இலங்கைக்கு வந்தபின் சந்திக்க கூப்பிட்டார். அப்பொழுது பொருளாதார நெருக்கடியில் நான் இருந்தேன். கட்சியின் முழுநேர செயற்பாட்டாளராகுமாறு என்னைக் கேட்டுக் கொண்டார். அன்று தொடங்கிய பயணம். இன்றுவரை தொடர்கிறது.**

மாறும் கேட்டிருந்தார். அதன்படி சந்திரகுமாரும் இன்னொருவரும் வந்திருந்தார்கள். சந்திரகுமார், தேவானந்தாவின் தந்தையார், அவரின் தம்பி மற்றும் நான் ஈ பி டி பி யினைப் பதிவு செய்தோம்.

பின்னர் டக்ளஸ் தேவானந்தா இலங்கைக்கு வந்தபின் சந்திக்கக் கூப்பிட்டார். அப்பொழுது பொருளாதார நெருக்கடியில் நான் இருந்தேன். கட்சியின் முழுநேர செயற்பாட்டாளராகுமாறு என்னைக் கேட்டுக் கொண்டார். அன்று தொடங்கிய பயணம். இன்றுவரை தொடர்கிறது.

ஈ.பி.டி.பியினால் எனக்கு சில சந்தர்ப்பங்கள் கிடைத்தன. அவற்றினை நான் சரியாகப் பயன்படுத்தியுள்ளேன். அதனால் கட்சிக்கும் நன்மையானது, என்னையும் அரசியல் ரீதியாக வளப்படுத்திக் கொண்டேன். அண்மையில் வடக்கு முதலமைச்சர் சொன்னார் “தவராசா.. அரசியலமைப்பு விவகாரங்களை நுணுக்கமாக படிக்க உங்களிற்கு நேரம் கிடைத்திருக்கிறது. நமக்குத்தான் கிடைக்கவில்லை” என்றார். இந்த நிலைமைக்கு என்னைக் கொண்டுவந்தது ஈபிடிபியில் எனக்குக் கிடைத்த வாய்ப்பும் அதனை நான் சரியாக பயன்படுத்தியமையும் ஆகும்.


சந்திரிகா அம்மையாரின் தீர்வுத்திட்டம் தொடர்பான நகல்வரைவில் எனக்குக்கட்சி சார்பில் தொடர்ச்சியாகப் பங்குகொள்ள வாய்ப்புக்கிட்டியது. அதேபோல் பேராசிரியர் திஸ்ஸவிதாரணவின் தலைமையிலான சர்வகட்சி பிரதிநிதித்துவக் குழுவில் எனது கட்சி சார்பில் பங்குகொள்ள எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. தமிழ் மக்களின் பிரச்சனைகள் தொடர்பாகத் தொடர்ச்சியாக அக்குழு முன் மூன்று, நான்கு நாட்கள் விளக்கமளித்து விவாதித்திருந்தேன். 33 பக்கமுள்ள ஆவணம் அது. இதற்கு முன் பாராளுமன்றத்தில் ஜி.ஜி.பொன்னம்பலம் மட்டுமே ஐம்பதிற்கு ஐம்பது கேட்டு இவ்வளவு நீண்ட உரையாற்றியுள்ளார். கடந்த வருடம்; அரசியலமைப்பு மாற்றத்திற்கான பொதுமக்கள் கருத்தறி குழுவிலும் நான் ஓர் உறுப்பினராகக் கட்சியினால் நியமிக்கப்பட்டிருந்தேன். இந்த வாய்ப்பினையும் நான் சரிவர முழுமையாகப் பாவித்துள்ளேன்.

வடமாகாணசபை தேர்தலில் நான்தான் கட்சியின் முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிட்டிருந்தேன். முப்பதாயிரம் வாக்குகளைக் கட்சி பெற்றிருந்தது. முதலமைச்சர் வேட்பாளரென்றால் விருப்பு வாக்கில்ஒன்று எனக்குவந்திருக்கவேண்டும். இந்த விடயத்தில் இதயசுத்தியுடன் கட்சியின் ஏனைய வேட்பாளர்கள் செயற்படவில்லை. அதனால் எமது கட்சியில் இன்னொருவரே என்னைவிட அதிக வாக்குகளைப் பெற்றார்.

இப்பொழுது வடமாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருக்கிறேன். ஜனநாயக மரபில் எதிர்க்கட்சி தலைவர் என்ன செய்ய வேண்டுமோ அதனைசெய்கின்றேன். வடமாகாண சபையின் செயற்பாடுகள் வினைத்திறனற்றவையென்பது இன்று பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. இதனை வெளிக்கொணர்வதில் முக்கிய பங்கு வகித்திருக்கின்றேன். நான் ஆதாரங்களுடன் வினைத்திறனற்ற செயற்பாடுகளைப் பகிரங்கப்படுத்தியதனாலேயே அது நிகழ்ந்தது.

எனினும், எனது கட்சியை சேர்ந்த சிலர் என்னில் குறை கண்டுபிடித்தனர். நான் எல்லாவற்றையும் எதிர்க்கவில்லை, கட்சியை முதன்மைப்படுத்தி செயற்படவில்லையென தொடர்ச்சியாக குற்றம் கூறியதோ என்னவோ, என்னை எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலிருந்து நீக்குவதற்கான முயற்சி நடைபெற்றது.

> மக்கள் பிரதிநிதிகள், பொதுவாழ்வில் உள்ளவர்களின் அறியப்படாத பக்கங்களை புரட்டும் பகுதி இது. வாழ்வில் நடந்த, அடிக்கடி நினைக்கும், மெய்சிலிர்க்கும் நிகழ்வுகளை இந்த பகுதியில் ஒவ்வொரு வாரமும் உங்களுடன் பகிர்ந்து கொள்ளவுள்ளார்கள் அவர்கள். மனதின் மூலைக்குள் மறைந்து வைத்திருந்த சம்பவங்களை முதன்முறையாக அவர்கள் அச்சில் பேசவுள்ளனர். நீங்கள் இதுவரை கேட்காத கதைகள் இவை.



அது சாத்தியப்படவில்லை. பதவியை சுழற்சிமுறையில் பகிர தேர்தலின் முன் இணக்கப்பாடு இருந்ததாக கட்சியினால் காரணம் கூறப்பட்டது, ஆனால் அப்படியொரு இணக்கப்பாடு கட்சிக்குள் இருக்கவில்லை.

கட்சிக்குள் முரண்பாடுகள் இருப்பது வழக்கம். எனது பங்களிப்பு கட்சிக்கு இருந்து கொண்டிருக்கிறது. எதிர்கட்சித் தலைவராக எனது ‘கேள்விகள் மற்றும் செயற்பாடுகள்’ மாகாண சபையை செழுமைப்படுத்திக் கொண்டிருப்பதாகவே நான் கருதுகின்றேன்.

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தித்திக்கும் புது வருட வாழ்த்துக்கள்

SKY ROSE CHIDAMBARAM COVERING

ஸ்கை ரோஸ் சிதம்பரம் கவரிங்

அனைத்து வொரண்டிங் கவரிங் நகைகளை இங்கே பெற்றுக்கொள்ளலாம்

No: 1 Hospital Road, Jaffna. Call: 0771536914

# அரச அதிகாரிகளின் இடமாற்றமும் அரசியல் தலையீடும்

வன்னிமது

ஒரு அரச அதிகாரி ஒரு மாவட்டத்திலோ அல்லது பிரதேச செயலகங்களோ அல்லது வேறு அரச துறை சார்ந்த அதிகாரிகள் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் ஐந்து வருடங்கள் மட்டுமே பணியாற்றுவதற்கு இடமுண்டு. அவ்வாறு பணியாற்றிய பின்னரே அவ்வதிகாரிகள் வேறு இடங்களிற்கு இடமாற்றம் கேட்கவோ அல்லது இடமாற்றவோ முடியும். ஆனால் அன்மைக்காலங்களாக அரச வேலைவாய்ப்பு உட்பட அரச இடமாற்றங்கள் வரை அரசியல் தலையீடுகள் ஏற்பட்டுள்ளது.



இவ்வாறான தலையீடுகள் காரணமாக இடமாற்றப்பட வேண்டிய உயர் அதிகாரிகள் தொடர்ந்தும் குறித்த பிரதேசத்தில் பணியாற்றுகின்றனர். இதன் காரணமாக அவரின் ஊடாக செயற்படுத்தப்படும் திட்டங்களை அவ் உயர் அதிகாரியின் இடமாற்ற விடயத்தை நிறுத்த உதவிய அரசியல்வாதிக்கும், உயரதிகாரிக்கும் இடையே நல்லதொரு பிணைப்பின் காரணமாக அத் திட்டங்களில் ஊழல்கள் மேற்கொள்வதற்கு ஏதுவாகின்றது. இது ஒருபக்கம் என்றால் மறுபக்கம் அவ் உயரதிகாரியின் கீழ் பணிபுரியும் அரசியல்வாதியுடன் தொடர்புடைய அலுவலகர்களும் ஊழல் செய்வதற்கு சாதக தன்மையை ஏற்படுத்துகின்றது.

குறிப்பாக வவுனியா வடக்கில் பரசங்குளம் வீட்டுத்திட்டம், அனர்த்த முகாமை அலுவலகத்தால் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டம், புளியங்குளம் புரட்சி விளையாட்டு கழக மைதான புணரமைப்பு, பெரியமடு முன்பள்ளி வேலி அமைத்தல் போன்ற சில திட்டங்களில் நடைபெற்ற ஊழல் நடவடிக்கைகளை எமது தீபம் வார இதழ் மூலம் கடந்த காலங்களில் கொண்டு வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவை அனைத்தும் நெடுங்கேணி பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட சில திட்டங்களிலும், அப்பிரதேசத்தில் நடைபெற்ற வேறு திட்டங்களிலும் நடைபெற்றது. இவையனைத்தும் குறிப்பிட்ட சில அரச உயர் அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளின் ஆதரவுடன் நடைபெற்றதை யாரும் மறுக்வோ மறைக்கவோ முடியாது.

இவ்வாறான நிகழ்வுகள் இப்பிரதேசங்களில் ஏற்படுவதற்கு வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச செயலகத்தில் கடந்த பதினேழு ஆண்டுகளாக ஒரு பிரதேச செயலாளர் கடமையாற்றி வருகின்றமை இந்நிகழ்விற்கு வழிசமைத்துள்ளது. ஆனால் வவுனியா செட்டிக்குளம் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் என யாரும் தற்போது இல்லை என்பதை கவனிக்க வேண்டும். முன்பு இருந்த பிரதேச செயலாளரும் முன்பு பணியாற்றி இடத்தில் நடைபெற்ற சில மோசடிகளுடன் தொடர்பு என்ற ரீதியில் அவருடனான விசாரணைகளிற்காக அழைத்துச்செல்லப்பட்டமையினால் தற்போது அவ்விடம் காலியாகியுள்ளது. இதனால் அப்பிரதேச மக்களின் அபிவிருத்தி ஒரு கேள்விக்குறியாக மாறியுள்ளது. இதனால் செட்டிக்குளம் வாழ் மக்கள் தமது பிரதேசத்திற்கு ஒரு பிரதேச செயலாளரை வழங்குமாறு மக்கள் கேரியிருந்தமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

அரச உயர் அதிகாரிகளின் இடமாற்றம் ஒழுங்காக நடைபெறுமாயின் அப்பிரதேசத்தின் அபிவிருத்தி அதிகமாகின்றது. ஏன்எனில் புதிய அலுவலகர், புதிய சிந்தனை, புதிய அபிவிருத்தி என அப்பிரதேச அபிவிருத்தி முன்னோக்கி செல்லும்.



# இந்த நாலு வகை பெண்களில் ஒருவரா நீங்கள்?

ஒவ்வொரு பொன்னுக்கும் ஒவ்வொரு ஃபீலிங் என்பது போல,ஒவ்வொரு உடல் அமைப்பு கொண்டிருக்கும் நபர்களுக்கும் ஒவ்வொரு உடல்நல நன்மைகள் மற்றும் அபாயங்கள் இருக்கின்றன.

இந்த உடல் அமைப்பு வகைகளை பொதுவாக நான்கு பிரிவாக காண்கின்றனர்,

1. ஹவர் கிளாஸ் (Hour Glass),
2. முக்கோணம் (Triangle),
3. தலைகீழ் முக்கோணம் (Inverted triangle),
4. சதுரம் (Square)

இந்த நான்கில் நீங்க எந்த வகை? உங்கள் ஆரோக்கியம் பற்றி அறியலாம் வாங்க.

**ஹவர் கிளாஸ் (Hour Glass)**

பெரும்பாலும் இடுப்பு பகுதியில்



வளைவுகள் இருக்கும் இந்த ஹவர்கிளாஸ் அமைப்பு பெண்களிடம்தான் காணப்படும். இந்த வகை உடல் அமைப்பு இருப்பவர்கள் மந்தியில் ஈஸ்ட்ரோஜென் அதிகம் சுரக்கும். கருவளம் அதிகம் இருக்கும். இது உடல் ஆரோக்கியத்தை சமநிலையில் வைத்துக் கொள்ள உதவும்.

இவர்கள் உடலில் கொழுப்பு மார்பி, புட்டம், அக்குள் கீழ் பகுதியில் அதிகம் சேமிப்பாகும் வாய்ப்புகள் உள்ளன. எனவே, நீங்க ஆரோக்கிய உணவுகள் அதிகம் சாப்பிட வேண்டும் மற்றும் சீரான உடற்பயிற்சிகளில் ஈடுபட வேண்டும்.

**முக்கோணம் (Triangle)**

சிலருக்கு தோள்பட்டை குறுகலாகவும், இடுப்பு அகலமாகவும் இருக்கும். இதை தான் முக்கோண உடல் அமைப்பு என கூறுகிறார்கள். இவர்களது கால்களில் அதிக கொழுப்பு சேராது. ஆனால், இதய நலனில் இவர்கள் அதிக அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும்.

இடுப்பு பகுதியில் அதிக கொழுப்பு சேர்வதால் இதய பலவீனம், இதய நோய்கள் ஏற்படும் வாய்ப்புகள் அதிகம். எனவே, ஆரோக்கிய உணவுகளை மட்டும் டயட்டில் சேர்த்துக் கொள்ளுங்கள். எண்ணெய் உணவுகளை குறைத்துக் கொள்ளுங்கள்.

**தலைகீழ் முக்கோணம் (Inverted triangle)**

இந்த தலைகீழ் முக்கோண உடல் அமைப்பு கொண்டவர்களை தான் ஆரோக்கியமான நபர்கள் என கூறுகிறார்கள். தோள்கள் அகலமாகவும், வயிறு மற்றும் இடுப்பு பகுதி கம்மியாகவும் இருக்கும். பெரும்பாலான தடகள வீரர்கள் உடல் அமைப்பு இப்படி தான் இருக்கும். இவர்களுக்கு இடுப்பு பகுதியில் கொழுப்பு அதிகம் சேராது. இதனால் இவர்களுக்கு இதய பாதிப்புகள் அதிகம் வராது.

இவர்களுக்கு கொழுப்பு அதிகம் மார்பு மற்றும் முகத்தில் தான் சேரும். எனவே, ஆரோக்கியமான டயட்டை மற்றும் சீராக



பின்பற்றி வந்தால் போதுமானது.


**சதுரம் (Square)**

இவர்களது உடலில் கொழுப்பு வயிறு, புட்டம், மார்பு, முகம் என எல்லா இடங்களிலும் சேமிப்பாகும் வாய்ப்புகள் இருப்பதால் உடல் எடை கூடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இவர்களது உடலில் கொழுப்பு வயிறு, புட்டம், மார்பு, முகம் என எல்லா இடங்களிலும் சேமிப்பாகும் வாய்ப்புகள் இருப்பதால் உடல் எடை கூடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.



குு.நக்கீரன்
உளவள ஆலோசகர்





# மனமே நலமா?

## உங்கள் சந்தேகங்களை கேளுங்கள்

**ஆண் (வயது 27)**
**கரந்தன், நீர்வேலி**

***நான் ஒரு பட்டதாரி. கடந்த ஐந்தாறு வருடங்களாக மது அருந்துகின்றேன். மது அருந்தும் போது என்னை அறியாத மன மகிழ்வும், புத்துயிர்ப்பும் கிடைப்பதாக உணர்கிறேன். ஆனால் மருத்துவத் துறையினரும், ஊடகங்களும் இதைப் பற்றி எதிர்மறையான சில கருத்துக்களை வெளிக்கொணர்கிறார்கள். உண்மையில் மது அருந்துவதில் உடலுக்கு புத்துயிர்ப்பு கிடைக்கின்றதா இல்லையா?***

பதில்: அன்புத் தம்பி! உங்கள் கேள்வியில் நியாயம் இருக்கின்றது. மதுவில் ஒரு சுகம் இல்லாவிடில் ஆண்டாண்டு காலமாக மதுவுக்கு அடிமையாக மக்கள் இருந்திருக்க மாட்டார்கள். அதில் ஏதோ ஒன்று உள்ளது என்பது உண்மைதான். பொதுவாக மதுபானம் எனப்படுபவை எல்லாம் அல்ககோல் எனப்படும் ஐதரோகாபன் எனப்படும் மூலக்கூறுகளை ஒரு குறிப்பிட்ட அளவிலே கொண்டவையே. மெதனோல், எதனோல் போன்ற அல்ககோல்கள் இவற்றின் உள்ளடக்கம் ஆகும். உண்மையில் நாம் உள்ளெடுக்கும் காபோவைதரேற்றுக்கள் கூட சமிபாடடைந்து இறுதியில் குளுக்கோஸாக மாறும் போது இதே ஐதரோகாபன் சேர்வையாகவே உருவெடுக்கின்றன.

எமது சுவாசத்தின் போது இந்த குளுக்கோஸ் ஆனது ஒட்சிசனுடன் தாக்கமுற்று சக்தியைப் பிறப்பிக்கின்றது. இதேபோல் தான் நாம் குடிக்கும் குடி வகைகள் சமிபாடு எதுவும் அடையாமல் உடனேயே இரத்தத்துடன் கலந்துவிடும். இரத்தத்தினுள் சென்ற அல்ககோல் ஆனது ஒட்சிசனுடன் தாக்கம் புரியும்போது குளுக்கோஸ் உடன் ஒட்சிசன் தாக்கமுற்று வெளிவிடும் சக்தியை விட அதிக அளவான சக்தியை வெளிவிடும். ஆகவே உடலில் அதிகளவு சக்தியைக் கொண்டுள்ள குடிப்பழக்கம் கொண்டவர்கள் அதிக சக்தி நிலையில் புலம்புவது, சண்டைக்குப் போவது, பாடுவது, ஆடுவது இன்னும் சொன்னால் நேரடியான மின் வழங்கியுடன் இணைக்கப்படும் மின் பிறப்பாக்கி ஒன்றானது தூக்கி எறியப்படுவதை போல் அதிக சக்திப் பிறப்பாக்கலினால் நடுத் தெருவில் நிலைமறந்து விழுந்து கிடப்பதை நீங்கள் அவதானித்திருக்கலாம். சக்தி வெளிப்பாட்டின் காரணமாக சிலர் கற்பழிப்பு, கொலை போன்ற வன்செயல்களில் கூட ஈடுபடுவது கூட உண்டு. இதற்குக் காரணம் இந்த அல்ககோல் எமது மூளையின் புலன் நரம்புகளுக்கும் இயக்க நரம்புகளுக்கும் இடையிலான தொடர்பை செயலிழக்கச் செய்வதால் (மூளையின் மேற்பட்டைக் கலங்கள்) இவர்கள் சுய நினைவின்றி தாம் செய்வது என்ன என்று தெரியாமலேயே சிலவற்றைச் செய்து விடுகின்றனர். இரவில் குடிபோதையில் மனைவியில் அடித்துக் கொன்று விட்டு விடிந்ததும் ஓவென அழுவதும் இதனாலேயே. எப்படி இருந்த போதும் இப்படியான சமயங்களில் இவர்களின் பகுத்தறிவும் சற்று வேலை செய்து கொண்டுதான் இருக்கிறது.

இதனாலேயே குடிபோதையில் வன்செயலில் ஈடுபடும் ஒருவன் தனக்கு ஆபத்து ஏற்படுகையில் தப்பி ஓடுகின்றான். எனவே மதுவை உள்ளெடுக்கும் போது உடலியல், உளவியல் ரீதியான மாற்றங்கள் நிகழ்கின்றன. இந்த மாற்றத்தையே குடிகாரர்கள் 'கிக்' என்கின்றார்கள். ஒரு சாராயத்தை ஒரு மேசையில் இருவர் பகிர்கின்றார்கள். ஆனால் ஒருவர் சந்தோசத்துக்காகவும், ஒருவர் கவலையை மறக்கவும் குடிக்கிறார்கள். எனவே மனதில்தான் விளையாட்டு உண்டே ஒழிய மதுவில் அல்ல.

**ஜோன்சன் பியசீலன் ( வயது 40 )**
**ஊரெழு**

***நான் உயர்தரம் படித்துள்ளேன். வியாபார நிறுவனம் ஒன்றின் உரிமையாளராகவும் இருக்கின்றேன். எனக்கு 3 பிள்ளைகள் உண்டு. இருவர் உயர்தரம் முடித்துள்ளனர். ஒருவர் சாதாரண தரம் படிக்கின்றார். கடந்த 4,5 வருடங்களில் எனக்கும் எனது மனைவிக்கும் இடையிலான தாம்பத்ய உறவு இல்லையென்று கூறும் அளவுக்குக் குறைந்து விட்டது. இதற்கு முக்கிய காரணம் எனது குடும்பச் சூழல். இதனால் எனக்குள்ளே ஒரு விரக்தியும், மனச் சுமையும் இருந்து என்னை அலைக்கழித்துக் கொண்டு இருக்கின்றன. சமூக ஒழுக்கக் கோட்டை தாண்டவும் முடியாமல், தவிர்க்கவும் முடியாமல் குழம்புகின்றேன். நான் என்ன செய்வது? இதற்கு ஒரு வழி கூறுங்கள்.?***

பதில்: அருமைச் சகோதரா! இது ஒரு பிரச்சினை என்பதை அறிந்து இதைத் தீர்ப்பதற்கு என ஆராய முனைந்ததற்கு முதலில் எனது வாழ்த்துக்கள். உண்மையில் ஒரு தடவையே பிறந்து இறக்கும் வாழ்வில் அந்தந்த காலங்களில் அந்தந்த விடயங்களை அனுபவித்துக் கடந்து செல்வது அவசியமானதாகும். குறிப்பாக எமது உடலில் தாம்பத்ய உறவுக்காக தயார்ப்படுத்த சுரக்கப்பட வேண்டிய ஓமோன்கள் குறையும் போது இயற்கையாகவே அதில் நாட்டம் குறைவது இயல்பானது.

எனவே குடும்ப வாழ்வில் கணவன் மனைவிக்கு இடையிலான தாம்பத்ய உறவு எவ்வளவு காலத்திற்கு நீளுகின்றது அவ்வளவுக்கு அவ்வளவு அது ஒரு ஆரோக்கியமான இயல்பே. எமது வாழ்வின் பல்வேறு குடும்ப சூழ்நிலைகள் இதற்குத் தடையாக அமைந்து விடுவதும் உண்டு. எல்லோருக்கும் எல்லாம் எல்லா நேரங்களிலும் பிரச்சினையாக இருப்பதில்லை. பிரச்சினையாக உணர்பவர்களுக்கு அது பிரச்சினையே. அது தீர்க்கப்பட வேண்டிய ஒன்றே.

இது தொடர்பாக நீங்களும் உங்கள் மனைவியும் தனிமையாகக் கலந்துரையாடுங்கள். உங்கள் மகிழ்ச்சிக்காக வாழ்வைத் திட்டமிடுங்கள். உங்கள் பிள்ளைகள் பெரியவர்கள் தானே? அவர்களை விடுத்து நீங்கள் இருவர் மட்டும் ஒரு சுற்றுலாவை ஏற்பாடு செய்யுங்கள். ஏன் பிள்ளைகளையாவது வெளியே அனுப்பி வைக்கலாமே. புதிது புதிதாக புத்துணர்ச்சியுடன் திட்டமிடுங்கள். வயது போய்விட்டதே என்று தவிர்க்காதீர்கள்.

குறிப்பாக உங்கள் மனைவியின் மனப்பாங்கை வயது போன ஒரு மனநிலையில் இருந்து மாற்றி இளமையான மனநிலையில் வைத்திருக்க முயலுங்கள். கணவன் மனைவிக்கு இடையிலான அன்னியோன்னியத்தை பிள்ளைகள் முன்னிலையில் வெளிப்படுத்த தயங்காதீர்கள். கணவன் மனைவிக்கு இடையிலான உறவின் பரிமாணங்களை பிள்ளைகளும் புரிந்து கொள்ளட்டும். மேலதிக ஆலோசனை பெற விரும்பின் ஓர் உளவளத் துணையாளரை நாடுங்கள் ●





மட்டக்களப்பு செட்டிபாளையம் கண்ணகை அம்மனின் வருடாந்த கல்யாண திருச்சடங்கு தேற்றாத்தீவு பொது மக்களின் ஏற்பாட்டில் மிக சிறப்பாக நடைபெற்றது. தேற்றாத்தீவு கொம்பு சந்தி பிள்ளையார் ஆலயத்தில் இருந்து வசந்தன் கும்மி கோலாட்டம் என்பன ஆடப்பட்டு பூசை பொருட்கள் பவனியாக கொண்டு செல்லப்பட்டது. ஆலயத்தில் தேற்றாத்தீவு சிறுவர்களினால் வசந்தன் கூத்து அளிக்கை செய்யப்பட்டது. அன்றையதினமும் அதனை தொடர்ந்து மாலை கண்ணகை அம்மனின் கல்யாண திருச்சடங்கு இடம் பெற்றது.

MA Holidays & Travels
Ticketing/Hotel/Holiday/Visa/Insurance
All Countries Air Ticketing




261, Power House Road,
Jaffna.
021 300 3888
077 00 666 56
mahólidaysmayu@gmail.com
www.maholiday.com
B.Mayuran
Managing Director

# சின்னத்திரை



## தேவசேனாவாகும் கார்த்திகா!

கோ படத்தின் மூலம் சினிமாவுக்கு வந்தவர் கார்த்திகா. முதல் படமே வெற்றிப்படம்தான். என்றாலும் அதற்கு பின் அவருக்கு வாய்ப்புக்கள் இல்லாமல் போனது. அன்னக்கொடி படத்தின் படுதோல்வி அவரை நிரந்தரமாகவே சினிமாவில் இருந்து தள்ளிவைத்துவிட்டது. நடித்து முடித்துள்ள வா டீல் படமும் வெளிவராமல் இருக்கிறது. இந்த நிலையில் சின்னத்திரை பக்கம் தாவியுள்ளார் கார்த்திகா. பாகுபலி படத்தின் கதாசிரியரும், இயக்குனர் ராஜமௌலியின் தந்தையுமான விஜயேந்திர பிரசாத் எழுதிய ஆரம்ப் என்ற சரித்திரக்கதை இந்தியில் தொடராக தயாராகிறது. இதில் தேவசேனா என்ற ஹீரோயின் பாத்திரத்தில் கார்த்திகா நடிக்கிறார். பிரபல இந்தி நடிகர் ரஜனீஷ் துக்கலா ஹீரோ. திரைப்படங்களிற்கு நிகராக பிரமாண்ட பட்ஜெட்டில் தயாராகிறது. வரும் 24ம் திகதி தொடக்கம் ஸ்டார் பிளஸ் சனல்களில் ஒளிபரப்பாகிறது. இந்தியில் 50 எபிசோட்கள் ஒளிபரப்பான பின்னர்தான் பிராந்தி மொழிகளில் டப் செய்யப்படவுள்ளது. தமிழில் விஜய் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகுமென தெரிகிறது.



## நிஜத்திலும் காதலர்கள்!

விஜய் தொலைக்காட்சியில் தற்போது ஒளிபரப்பாகிவரும் பகல் நிலவு தொடரில் ஜோடியாக நடிக்கும் அன்வரும், சமீராவும் நிஜத்திலும் காதலர்கள். தமிழ் சின்னத்திரைக்கு வருவதற்கு முன்னரே காதலர்கள். ஐதராபாத்தை சேர்ந்த இவர்கள் தெலுங்கில் சில தொடர்கள், குறும்படங்களில் நடித்துள்ளனர். பகல் நிலவு தொடரில் அன்வர்தான் முதலில் நடிக்க வந்தார். பின்பு சமீராவை அழைத்து வந்தார். தற்போது இருவரும் இணைந்து ஒரு தொடரை தயாரிக்கிறார்கள். ஜி மராட்டி சனலில் ஒளிபரப்பான தொடரை, ரெக்க கட்டி பறக்குது மனசு என்ற பெயரில் ரீமேக் செய்கிறார்கள். அன்வர் தயாரிப்பு பணிகளில் ஈடுபட, சமீரா நடிக்கிறார். ஜீ தமிழ் சனலில் தொடர் ஒளிப்பரப்பாகவுள்ளது.

## விஜய் டிவியின் டப்பிங் தொடர்!

அண்மைக்காலமாக நேரடி தமிழ் தொடர்களிற்கு முக்கியத்துவம் கொடுத்து வந்த விஜய் டிவி மீண்டும் டப்பிக் தொடர்களின் பக்கமும் கவனத்தை திருப்பியிருக்கிறது. ஸ்டார் பிளஸ் சனலில் ஒளிபரப்பான இஸ்க்பாஸ் என்ற தொடரை காதலா காதலா என்ற பெயரில் டப் செய்து ஒளிபரப்புகிறார்கள். கடந்த 5ம் திகதி முதல் ஒளிபரப்ப தொடங்கியுள்ளார்கள். திங்கள் முதல் வெள்ளி வரை இரவு 10 மணிக்கு ஒளிபரப்பாகிறது. லலித் மதன் இயக்கியுள்ளார். ஒபுராய் என்ற மிகப்பெரிய கோடீஸ்வர குடும்பத்தின் கதை. பல தொழில்நிறுவனங்களை நடத்தும் ஒபுராயின் இரண்டு மகன்களும் எதிரும் புதிருமாக இருக்கிறார்கள். மருமகள்கள் சொத்தை பிரித்து சென்று தனி நிறுவனம் நடத்த முயற்சிக்கிறார்கள். ஆனால் அவர்களின் இளைய தலைமுறை மகன்களும், மருமகள்களும் கூட்டுகுடும்பத்தை பாதுகாப்பதே கதை.



சுஷ்மா

## பூஜாவை நினைவிருக்கிறதா?

எஸ்.எஸ் மியூசிக் சனல் ஒருகாலத்தில் இருந்தது. அதில் பூஜா என்ற தொகுப்பாளினி இருந்தார். அவரது கலகலக பேச்சுக்கு ஏராளம் ரசிகர்கள் இருந்தனர். அந்தக்காலத்தில் அவர்தான் ஸ்டார் தொகுப்பாளினி. பின்னர் 2011 இல் அந்த சனல் நின்றுவிட்டது. பூஜா என்ன ஆனார் என விசாரித்தால்ஞ் அதன்பின் அவர் சினிமாவிற்குள் வந்துவிட்டார். இரண்டு தெலுங்கு படங்கள், ஒரு தமிழ் படத்தில் ஹீரோயினாக நடித்துவிட்டார். காதலில் சொதப்புவது எப்படி என்பது அவரது தமிழ்படம். படம் சொதப்பியதால் புதிய வாய்ப்புக்களை தேடிக்கொண்டிருக்கிறார். 2010 இல் அம்மணி ஒருவரை காதலித்து திருமணமும் செய் திருக்கிறார். எனினும், சிறிதுகாலத்திலேயே இருவரும் விவாகரத்து செய்துவிட்டனர்.

## ஆடப் பிடித்த சுனிதா!

அசாம் மாநிலம் கவுகாத்தியில் பிறந்தவர் சுனிதா. நடனம் மீது ஈர்க்கப்பட்டு, முறைப்படி நடனம் கற்றார். மும்பையில் நடந்த டான்ஸ் இந்தியா டான்ஸ் நிகழ்ச்சியால் பிரபலமானார். விஜய் டிவியின் ஜோடி நம்பர் 1 இல் ஆடும் வாய்ப்பு வந்தது. சீசன் 7 வரைக்கும் ஆடினார். இவரது ஆட்டத்தை பார்த்து பிரமித்த தனுஷ், தனது 3 படத்தில் நடிக்க வாய்ப்பளித்தார். ஆனால் பின்னர் பெரிய வாய்ப்புக்கள் வரவில்லை. மான்வேட்டை படத்தில் நடித்தார். மூன்று வருடமாகியும் படம் வெளியாக வில்லை. இதனால் வெறுத்துப்போன சுனிதா சில வருடங்கள் சினிமாவிலிருந்து ஒதுங்கியிருந்தார். மீண்டும் இப்பொழுது வாய்ப்பு வேட்டையில் இறங்கியுள்ளார்.




டக்ஷா

## எமிக்கு துணிச்சல்தான்!

ஜல்லிக்கட்டு தடைக்கு காரணமாக இருந்த பீட்டா அமைப்பின் மீது தமிழ் மக்கள் கொலைவெறியில் இருக்கிறார்கள். பீட்டாவிற்கு ஆதரவாக இருந்த நடிகைகள் மீது ரசிகர்களின் கோபம் திரும்பியபோது, பீட்டாவில் அங்கத்தவர் இல்லையென த்ரிஷா அறிவித்தார். அத்துடன் பீட்டாடனான உறவை துண்டித்தும் கொண்டார். ஆனால் தமிழில் நடிக்கும் சிலர் இன்னும் பீட்டா உறவை கைவிடவில்லை. இதில் முக்கியமானவர் எமி ஜக்சன். மக்களின் எதிர்ப்பை பொருட்படுத்தாமல் தொடர்ந்தும் பீட்டாவின் விளம்பரங்களில் நடித்து வருகிறார்.

## இரட்டை மாங்காய் அடிக்கும் சிவகுமார் பிள்ளைகள்

தீரன் அதிகாரம் ஒன்று படத்தில் நடித்து வருகிறார் கார்த்தி. இதன் படப்பிடிப்பு இறுதிக்கட்டத்தில் இருக்கிறது. கார்த்தியும் பங்குதாரராக இருக்கும் ட்ரீம் வாரியர்ஸ் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது. இதை தொடர்ந்து விஷாலுடன் இணைந்து கறுப்பு ராஜா வெள்ளை ராஜா படத்தில் நடிக்கிறார். பிரபுதேவா தயாரித்து இயக்கும் படம் இது. இதை தொடர்ந்து பாண்டிராஜ் இயக்கத்தில் ஒரு படத்தில் நடிக்கிறார். இதை சூர்யாவின் 3டி நிறுவனம் தயாரிக்கிறது. கார்த்தி கொமர்சியல் படங்களில் நடித்து வெகுநாளாயிற்று. 2டி நிறுவனம் எடுத்த படங்களும் கொமர்சியலாக வெற்றியடையவில்லை. இதனால் ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிக்கும் நோக்கத்துடன் இந்த படத்தை உருவாக்க திட்டமிட்டுள்ளனர்.

## ஸ்ருதியின் காலம் முடிகிறது?

தமிழ், தெலுங்கு, ஹிந்தி என மும்மொழிகளிலும் நடித்து வருகிறார் ஸ்ருதிஹாசன். இந்த ஆண்டு ஸ்ருதிக்கு மோசமான ஆண்டு. மூன்று மொழிகளிலும் தொடர் தோல்விப்படங்கள் அமைவது அவரை குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது. தமிழில் சூர்யா ஜோடியாக நடித்த சி3, தெலுங்கில் பவன்கல்யாணுடன் நடித்த கட்டமராயுடு, இந்தியில் கடந்தவாரம் வெளியான பெஹன் ஹொகி தெரி என மூன்று படமும் ஊற்றிக்கொண்டுவிட்டன. அதிலும் அண்மையில் வெளியான இந்திப்படத்தையும், அதில் ஸ்ருதியின் நடிப்பையும் இந்தி பத்திரிகைகளே கழுவிக்கழுவி ஊற்றிக்கொண்டிருக்கின்றன. 400 கோடி செலவில் தயாராகும் சங்கமித்திரை படத்திலிருந்தும் விலகிவிட்டார். தற்போது அவர்வசம் கமலின் "சபாஷ் நாயுடு" மட்டுமே உள்ளது. இதேபோக்கில் போனால் ஸ்ருதியும் காணாமல் போனவர்கள் படடியலில் வருவார் என கூறப்படுகிறது.

## கவர்ச்சி இல்லாவிட்டாலும் பார்க்கலாம்!

சிம்பு ஜோடியாக அச்சம் என்பது மடமையடா படத்தில் அறிமுகமானவர் மஞ்சிமா மோகன். தற்போது சத்திரியன், இப்படை வெல்லும் படங்களில் நடித்து வருகிறார். அறிமுக நடிகைகள் எல்லோருமே ரேவதியை போல நடிக்க வேண்டும் என்றபடிதான் வருவார்கள். பின்னர் போட்டி அதிகரிக்க கவர்ச்சியின் எல்லைவரை போவார்கள். ரேவதி பொலிசியுடன் திரைக்கு வந்தவர் ரெஜினா. இன்று கவர்ச்சி வெடிகுண்டாக மாறிவிட்டார். ஆனால் மஞ்சிமா இப்பொழுதும் கவர்ச்சியென்றால் காதைப்பொத்திக் கொள்கிறார். எந்தக்காலத்திலும் கவர்ச்சிக்கு போகமாட்டேன் என்பதில் உறுதியாக இருக்கிறார். கவர்ச்சியாக நடித்தால்தான் ரசிகர்கள் படம் பார்க்க வருவார்கள் என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது, நல்ல படங்களை பார்க்கத்தான் வருவார்கள் என்றுள்ளார்.

## மொட்டை ராஜேந்திரனின் ஒருநாள் சம்பளம்!


நான் கடவுள் படத்தில் வில்லனாக அறிமுகமானவர் மொட்டை ராஜேந்திரன். இன்று மோஸ்ட் வோண்டட் கொமடியன் அவர்தான். அவர் இல்லாமல் படம் வராது என்பதுதான் இன்றைய நிலை. அறுபது வயதுக்கு மேல் சினிமாவில் பிரபலமாகி, இன்று ஒருநாளைக்கு ஐந்து இலட்சம் சம்பளம் வாங்கிக்கொண்டிருக்கிறார். பெரிய ஹீரோக்களிற்குத்தான் ஓபனிங் சோங் வைப்பார்கள். இப்பொழுது தங்கரதம் என்ற படத்தில் ராஜேந்திரனுக்கும் ஓபனிங் சோங் வைத்திருக்கிறார்கள். "மொட்டைதலை மச்சானுக்கு முடி இருந்தால் அழகு. தங்கரதம் போல ஸ்டீல் பாடி உடம்பு" என்பது பாடல். இதில் ராஜேந்திரனுடன் ஆடியிருப்பவர் பிரபல கவர்ச்சி நடிகை டிஸ்கோ சாந்தியின் இளைய சகோதரி சுசித்ரா. எந்த நேரமும் குடித்துக்கொண்டிருக்கும் விவசாயியாக நடித்திருக்கிறார் ராஜேந்திரன்.

## அப்பாவான சரத்குமார்!

கதாநாயகனாகத்தான் நடிப்பேன் என சரத்குமார் இப்பொழுது அடம்பிடிப்பதில்லை. ஜி.வி.பிரகாசின் அடங்காதே படத்தில் அரசில்வாதியாக நடிக்கிறார். ஜி.வியில் பாசமுள்ள அண்ணன் பாத்திரமாம். அதுதவிர, சென்னையில் ஒருநாள் 2, ரெண்டாவது ஆட்டம் உள்ளிட்ட படங்களிலும் நடிக்கிறார். இதை தொடர்ந்து தெலுங்கில் மகேஸ்பாபு நடிக்கும் படத்தில் நடிக்கிறார். மகேஸ்பாபுவின் அப்பாவாம் சரத்குமார். படத்தின் பிளாஷ்பேக் காட்சிகளில் மட்டும்தான் நடிக்கிறாராம்.

## இளைய சூப்பர் ஸ்டார்!

நடிகர் தம்பி ராமையாவின் மகன் உமாபதி அறிமுகமாகியுள்ள படம் அதாகப்பட்டது மகாஜனங்களே. இந்தப்படத்தின் ட்ரெயிலர் அண்மையில் வெளியிடப்பட்டது. இதில் பேசிய தயாரிப்பாளர் செல்வக்குமார், சிவகார்த்திகேயன் படங்களிற்கு எல்லா தரப்பிலும் வரவேற்பு உள்ளது. அவர் இளைய சூப்பர் ஸ்டார் என்றார். இதை தொடர்ந்து பேசிய பலரும் அவரை இளைய சூப்பர் ஸ்டார் என்றுதான் அழைத்தனர். இதன்பின் பேசிய சிவகார்த்திகேயன் எனக்கு எந்தப்பட்டமும் தேவையில்லை, எந்தப்பட்டத்தையும் வாயால் உச்சரிக்கவும் விரும்பவில்லை என கூறி, இளைய சூப்பர் ஸ்டார் விவகாரத்தை தற்காலிகமாக முடிவுக்கு கொண்டு வந்துள்ளார்.



'காவல்காரன்' படத்தில் எம்.ஜி.ஆருடன் மோதுகிறார் ஆர்.எஸ். மனோகர்.




'உலகம் சுற்றும் வாலிபன்' படத்தில் எம்.ஜி.ஆர்.

# நாடகக்கலை மீதான பிரியம்!

ஸ்ரீதர் சுவாமிநாதன்

**எம்.ஜி.ஆர்.** திரைப்படத் துறையிலும் அரசியல்துறையிலும் உயர்ந்த நிலைக்குச் சென்றபோதும், அதற்கெல்லாம் காரணமாக விளங்கி மக்களிடம் தன்னை அறிமுகப்படுத்திய நாடகக் கலையின் மீது தீவிர பற்று கொண்டிருந்தவர். நாடகங்களை ஊக்குவித்தவர். நாடக உலகில் இருந்து திரைப்படங்களில் நடிக்க வந்தவர்கள் மீது எம்.ஜி.ஆருக்கு தனி அன்பு உண்டு.

நாமக்கல்லில் 1925ம் ஆண்டு பிறந்தவர் அவர். சிறுவயது முதலே நாடகங்களில் நடிப்பதில் ஈடுபாடு கொண்டவர். படிக்கும் காலத்திலேயே பம்மல் சம்பந்த முதலியாரின் 'மனோகரா' நாடகத்தில் மனோகரனாக சிறப்பாக நடித்து வந்தார். அதனால், அவரது இயற்பெயரே மறைந்துபோய் நாடகத்தில் நடித்த பாத்திரப் பெயரே நிலைத்துவிட்டது. அவர்தான் பின்னர் 1951ல் 'ராஜாம்பாள்' படத்தின் மூலம் அறிமுகமாகி, பல படங்களில் நடித்து புகழ்பெற்ற ராமசாமி சுப்பிரமணியம் மனோகர் என்ற ஆர்.எஸ்.மனோகர்.

எம்.ஜி.ஆருடன் 'பணம் படைத்தவன்', 'ஒளி விளக்கு', 'அடிமைப்பெண்', 'உலகம் சுற்றும் வாலிபன்' உட்பட பல படங்களில் மனோகர் நடித்துள்ளார். தோள்களை ஆட்டி உடலைக் குலுக்கி வசனம் பேசி நடித்து தனக்கென தனி முத்திரை பதித்தவர். 'காவல்காரன்' படத்தில் குத்துச்சண்டை வீரராக மனோகர் நடித்திருப்பார். ஆரம்பத்தில் எம்.ஜி.ஆருக்கும் மனோகருக்கும் குத்துச்சண்டை நடக்கும்.

படப்பிடிப்பின்போது மனோகரைப் பார்த்து, "உங்களுக்கு குத்துச்சண்டை தெரியுமா?" என்று எம்.ஜி.ஆர் கேட்டார். "ஏதோ கொஞ்சம் தெரியும்" என்றார் மனோகர். இரண்டு மூன்று ஷாட்கள் முடிந்ததும் மனோகரின் பஞ்ச், தான் குத்துவதை தடுப்பது ஆகியவற்றை கவனித்த எம்.ஜி.ஆர் மனோகரிடம், "ஏன்பா பொய் சொல்றே? பெரிய சாம்பியன் மாதிரி ஃபைட் பண்றே" என்று கூறியபடியே அவரை செல்லமாகக் குத்தினார்.

'அடிமைப்பெண்' படத்தில் நடிப்பதற்காக ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூருக்கு மனோகரை எம்.ஜி.ஆர் அழைத்துச் சென்றார். நாடகத்துக்குத் தேவையான அலங்காரப் பொருட்களுக்கு ஜெய்ப்பூர் மிகவும் பிரபலம். மனோகரை அழைத்த எம்.ஜி.ஆர், "நீங்கள் நடத்தும் நாடகங்களுக்குத்தேவையான பொருட்களை எவ்வளவு வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளுங்கள். எல்லாம் என்னுடைய செலவு" என்றார். மகிழ்ச்சியில் திக்குமுக்காடிப் போய்விட்டார் மனோகர். தனது நாடகங்களுக்கு தேவையான பொருட்களை வாங்கிக் கொண்டார்.

'அடிமைப்பெண்' படத்தில் சண்டைக் காட்சியில் நடிக்கும்போது, படிகளில் உருண்டு விழ இருந்த மனோகரை எம்.ஜி.ஆர் சரியான நேரத்தில் பிடித்து அவரைக் காப்பாற்றினார்.

நாடகத்தில் எம்.ஜி.ஆருக்கு இருந்த ஆர்வத்துக்கு ஒரு உதாரணம். ஒருமுறை சென்னை திருவல்லிக்கேணி என்.கே.டி. கலா மண்டபத்தில் மனோகரின் நாடகங்கள் பதின்மூன்று நாட்களுக்கு தொடர்ந்து நடந்தன. எல்லா நாட்களும் எம்.ஜி.ஆர் வந்து நாடகங்களைப் பார்த்தார்.

அடாது மழை பெய்தாலும் விடாமல் நாடகத்தை எம்.ஜி.ஆர் பார்த்ததும் உண்டு. அதே என்.கே.டி. கலா மண்டபத்தில் பழம்பெரும் நடிகர் எஸ்.வி.சகஸ்ரநாமத்தின் சேவா ஸ்டேஜ் சார்பில் 'சத்திய தரிசனம்' என்ற நாடகம் நடந்தது. அது திறந்தவெளி அரங்கம். தனது மனைவி ஜானகி அம்மையாருடன் வந்து நாடகத்தை எம்.ஜி.ஆர் பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது எதிர்பாராமல் மழை வந்துவிட்டது. கூடியிருந்தவர்கள் அருகே இருந்த கட்டிடங்களில் போய் ஒண்டிக் கொண்டனர். எம்.ஜி.ஆரும் ஜானகி அம்மையாரும் மழையில் நனைந்தபடியே அமர்ந்திருந்தனர்.

இதைப் பார்த்துவிட்டு சகஸ்ரநாமம், "மழை காரணமாக நாடகத்தை நிறுத்திக் கொள்கிறோம். இன்னொரு நாள் இதை நடத்துவோம்" என்று அறிவித்தார். நனைந்த உடையுடன் மேடையேறிய எம்.ஜி.ஆர், "அடாது மழை பெய்தாலும் நாடகம் பார்க்கத் தயாராக இருந்தேன். நீங்கள்தான் நிறுத்திவிட்டீர்கள். பார்த்தவரை நாடகம் சிறப்பாக இருந்தது. மீண்டும் நடத்தும்போது சொல்லுங்கள் வருகிறேன்" என்று பேசினார்.

அதன்படியே, பெரம்பூர் ஐ.சி.எஃப். திடலில் மறுபடியும் 'சத்திய தரிசனம்' நாடகம் நடந்தபோது எம்.ஜி.ஆர் சென்று பார்த்து கலைஞர்களை கவுரவித்தார்.

எம்.ஜி.ஆருடன் மனோகர் பல படங்களில்சண்டைக்காட்சிகளில்நடித்துள்ளார். என்றாலும், 'உலகம் சுற்றும் வாலிபன்' படத்தில் எம்.ஜி.ஆரின் சாதுர்யத்தைக் காட்டும் இடைவேளைக்கு முந்தைய ரசமான காட்சி ரசிகர்களைத் துள்ள வைக்கும்.

கதைப்படி, அணுசக்தி ஆராய்ச்சி குறிப்பின் ஒருபகுதி ஹாங்காங்கில் உள்ள ஒருவரின் வீட்டில் இருக்கும். டைம் பீஸில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கும் குறிப்பை வாங்கிக் கொள்ள எம்.ஜி.ஆர் அங்கு செல்வார். வில்லன் அசோகனின் கையாளாக வரும் மனோகரும் அந்தக் குறிப்பை அடைவதற்காக நாய் வியாபாரி போல, பெரிய கன்றுக்குட்டி சைஸில் இருக்கும் இரண்டு முரட்டு நாய்களுடன் அங்கு வருவார்.

மனோகர் வந்திருப்பதன் நோக்கத்தை நொடியில் எம்.ஜி.ஆர் புரிந்து கொண்டு விடுவார். புருவங்களை உயர்த்தி, உதடுகளை லேசாக விரித்து, மூச்சை உள்ளிழுத்து புன்முறுவல் பூக்கும்போதே, தாக்குதலை சமாளிக்க அவர் தயாராகிவிட்டார்

> மனோகர் நாடகங்களில் தந்திரக் காட்சிகள் ரசிகர்களைக் கவரும். அவற்றை பார்த்து ரசிக்கவே ஏராளமான மக்கள் வருவார்கள். சென்னையில் என்.கே.டி. கலா மண்டபத்தில் தொடர்ந்து அவரது நாடகங்களை பார்த்த எம்.ஜி.ஆர், கடைசிநாள் நிகழ்ச்சியில் மனோகருக்கு 'நாடகக் காவலர்' என்ற பட்டத்தை வழங்கினார்.

என்பதை உணர்ந்து தியேட்டர் அமர்க்களப்படும். தொடர்ந்து மனோகருக்கும் எம்.ஜி.ஆருக்கும் வாக்குவாதம் நடக்கும். எம்.ஜி.ஆர் நடந்து கொண்டே அறையின் மூலைக்கு சென்று கண்ணாடி ஜன்னலின் வழியே கீழே நோட்டம் விட்டுத் திரும்புவார்.


ஒரு கட்டத்தில் கோபமடையும் மனோகர், வீட்டின் சொந்தக்காரரை பார்த்து விரலை சொடுக்கியபடி, "சார், அப்படீங்கறதுக்குள்ளே, அவர் கையில் உள்ள டைம் பீஸை நாய் கொண்டு வந்துடும். பாக்கறீங்களா?" என்று சவால் விடுவார்.

இதை எதிர்பார்த்தவராய், மின்னலாய் பாய்ந்து சென்று ஏற்கெனவே நோட்டமிட்டு வைத்திருந்த கண்ணாடி ஜன்னலின் வழியே குதித்து எம்.ஜி.ஆர் அங்கிருந்து தப்புவார். அதற்கு முன் அவர் சொல்லும் வசனம் குத்துமதிப்பாகத்தான் காதில் விழும். அந்த அளவுக்கு அணை உடைத்த பெருவெள்ளமாய் ரசிகர்களின் உற்சாகக் கூச்சலும் ஆரவாரமும் தியேட்டரை நிரப்பும். மனோகரைப் பார்த்து எம்.ஜி.ஆர் சொல்லும் அந்த வசனம்...

"நாய்களோட திறமையை அவர் பார்க்கட்டும், என்னோட திறமையை நீ பாரு!"

தொடரும்...

படங்கள் உதவி:
ஞானம், செல்வகுமார்



மனோகருக்கு விருந்து வழங்குகிறார் எம்.ஜி.ஆர்.



'இதயக்கனி' படத்தில் எம்.ஜி.ஆருடன் மனோகர்.



எம்.ஜி.ஆருடன் எஸ்.வி. சகஸ்ரநாமம், மலையாள நடிகர் டி.கே.பாலச்சந்திரன்.

# ஸ்மார்ட்போனில் டிஎஸ்எல்ஆர் தரத்தில் புகைப்படங்கள் எடுப்பது எப்படி?




ஸ்மார்ட்போன் கமராக்களில் பல்வேறு தொழில்நுட்பங்கள் இடம் பெற்றுள்ளன, இவற்றை பயன்படுத்தி மிக அருமையாக திருமணம், சிறப்பு நிகழ்ச்சிகள், இயற்கை காட்சிகள், பறவைகள், விலங்குகள் போன்ற அனைத்தையும் மிகத்துல்லியமா படம்பிடிக்க முடியும். ஸ்மார்ட்போன்களில் உள்ள கமராக்கள் பல்வேறு மெகாபிக்சல் கொண்டிருக்கும். அதற்கு தகுந்தபடிதான் சிறப்பான புகைப்படங்கள் கிடைக்கும். மேலும் ஸ்மார்ட்போன்களில் உள்ள கமராவை இயக்குவது மிகவும் எளிது. இதில் எடுக்கும் புகைப்படங்கள் அனைத்தும் ஸ்மார்ட்போன்களில் கலரியில் இருக்கும்.

உங்களுடைய ஸ்மார்ட்போன் கமராவில் எச்டிஆர் முறையை பயன்படுத்தினால் மிகத்துள்ளியமாக படம்பிடிக்கமுடியும். மேலும் சாதாரண முறையை விட பல்வேறு வண்ண திருத்தம் கொண்டுவரும் இந்த எச்டிஆர் பயன்பாடு.

தேவையான இடத்திற்க்கு மட்டும் ஃப்ளாஷ் பயன்படத்தவும். சில சமயங்களில் ஃப்ளாஷ் பயன்படுத்தி போட்டோ எடுத்தால் அதிக குறிப்பிட்ட பிக்சல் மட்டுமே கிடைக்கும். எனவே ஃபிளாஷ் இல்லாமல் படங்களை எடுப்பது நல்லது.

லென்ஸ் அழுக்கு ஆகி இருந்தால் போட்டோ போகஸ் பிராப்ளம் வரும். அதனால் கமராவில் உள்ள லென்ஸ்களை துடைத்துப் பயன்படுத்த வேண்டும். அழுக்கு உள்ள லென்ஸ் புகைப்படங்களை கெடுக்கும்.

வெளிச்சம் இல்லாத இடத்தில் எக்ஸ்ட்ரா லைட் போன்றவற்றைப் பயன்படுத்த வேண்டும். பின்னணி அதிக வெளிச்சமா இருந்தால் சப்ஜெக்ட் எக்ஸ்போஷர் வெளிச்சம் குறைந்து விடும். இதை முடிந்த அளவிற்கு தவிர்க்கவேண்டும்.

உங்களுடைய ஸ்மார்ட்போன் கமராவில் கிரிட்லைன்ஸ் போன்றவற்றை அதிகமாக பயன்படுத்த வேண்டும். இது எந்தப் பொருளையும் மிகத்துள்ளியமாக எடுக்கும் ஆற்றலை கொண்டவை.

ஸ்மார்ட்போனில் இரண்டு கைகளையும் பயன்படுத்தி புகைப்படங்கள் எடுக்க வேண்டும். எந்தவிதமான போட்டோவை எடுக்கவும் இந்தமுறையைப் பயன்படுத்த வேண்டும்.

தற்போதுவரும் ஸ்மார்ட்போன்கள் வைட் லென்ஸ் இடம்பெற்றுவருகிறது. இதனால் கமரா எல்லா இடத்தையும் போகஸ் செய்யும். குறிப்பிட்ட இடத்தை போகஸ் செய்ய டிரை பண்ண வேண்டாம்.

# கலக்சி ரப் எஸ்3!

சாம்சங் நிறுவனம் அதன் கலக்ஸி ரப் எஸ்3 சாதனத்தை முன்னதாக இந்த ஆண்டு நடைபெற்ற மொபைல் வேர்ல்ட் காங்கிரஸ் 2017 நிகழ்வில் வெளியிட்டது. தற்போது சாம்சங் மொடல் எண் சாம்சங் எஸ்எம்டி385 என்ற சாதனம் ஜிஎப்எக்ஸ்பென்ஞ் தரப்படுத்தல் வலைத்தளத்தில் காணப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அறிவிக்கப்படாத இந்த ரப்ளெட் ஆனது சாம்சங் நிறுவனத்தின் அடுத்த புதிய ரப்ளெட் ஆக இருக்கலாம் என்றும் மேலும் அறிக்கைகள் படி, இந்த சாதனம் கலக்ஸி ரப் 8.0 (2017) என்ற பெயர் கொண்டிருக்கலாம் என்றும் அறியப்படுகிறது. விரைவில் வெளியாகும் இரு எதிர்பார்க்கப்படும் இந்த கலக்ஸி ரப் எஸ்3 சாதனத்தின் என்னென்ன அம்சங்களை நாம் எதிர்பார்க்கலாம் என்பதை பற்றிய விவரங்கள் இதோ!

ஜிஎப்எக்ஸ்பென்ஞ் தரப்படுத்தல் வலைத்தள பட்டியலின்படி, சாம்சங் எஸ்எம்டி 385 ஆனது 8 இன்ச் எச்டி டிஸ்ப்ளே கொண்டுள்ளது. இதில் 1280X800 பிக்சல்கள் தீர்மானம் மற்றும் 5 விரல் சைகை ஆதரவும் உள்ளது.

க்வால்காம் ஸ்னாப்ட்ராகன் 435 உடனான 1.4 ஜிகாஹெர்ட்ஸ் க்வாட் கோர் ப்ராசசர் மற்றும் 2 ஜிபி ரம், 16 ஜிபி உள்ளடக்க சேமிப்பு, இதில் 54 ஜிபி அளவு பயனர்களுக்கான ரிசர்வுடு சேமிப்பும் கொண்டுள்ளது.

மேலும் இந்த சாதனம் அட்ரீனோ 308 ஜிபியூ மற்றும் ஆண்ட்ராய்டு 7.0 நௌவ்கட் இயங்குதளம் கொண்டிருக்கும் என்பதையும் வெளியான பட்டியல் அறிவிக்கிறது. பற்றரி சார்ந்த எந்த தகவலும் குறிப்பிடப்படவில்லை.


இந்த சாம்சங் ரப்ளெட் ஆனது 8மெகாபிக்சல் ஆட்டோஃபோகஸ் கமரா மற்றும் எல்இஇஎல் ப்ளாஷ் ஆகியவற்றை பின்புற பலகத்திலும், முன்பக்கம் 5 மெகாபிக்சல் செல்பீ கமராவும் கொண்டிருக்கலாம்.


ஜிஎப்எக்ஸ் பட்டியலை தவிர்த்து இந்த சாதனமானது வைஃபை சான்றிதழ் ஆன வைஃபை அலியன்ஸ் தளத்திலும் காணப்பட்டுள்ளது. அங்கு இந்த சாதனம் நௌவ்கட் இயக்க முறைமையை உறுதிப்படுத்துகிறது.

தவிரப்ளுடூத், ஜிபிஎஸ் மற்றும் வைஃபை போன்ற இணைப்பு அம்சங்களைக் கொண்டுள்ளதாக ஜிஎப்எக்ஸ் பட்டியல் சுட்டிக்காட்டுகிறது. பட்டியலின் படி, சாதனம் அக்சேலரோமீட்டர் மற்றும் லைட் சென்சார்கள் கொண்டு உள்ளது.

வைஃபை சான்றிதழ் தளத்தின்படி, சாம்சங் எஸ்எம்டி385 இரட்டைபேண்ட் வைஃபை (2.4ஜிகாஹெர்ட்ஸ், 5ஜிகார்ட்ஸ்) மற்றும் வைஃபை நேரடி இணைப்பு அம்சங்கள் ஆகிய ஆதரவை அளிக்கும். துரதிர்ஷ்டவசமாக, இந்த சாதனம் ஆண்ட்ராய்டு 7.0 இயக்க முறைமை மூலம் இயக்கப்படும் என்பதைத் தவிர வேறெந்த அப்டேட் குறிப்பும் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கிரிக்கெட் போட்டியில் பயன்படும் கமராக்கள்!





ஆசியாவில் அதிகப்படியான மக்கள் கிரிக்கெட் போட்டியை விரும்புகின்றனர், மேலும் அதிகப்படியான மக்கள் டிவி. மற்றும் இன்டர்நெட் போன்றவற்றை பயன்படுத்தி ஆர்வமாக கிரிக்கெட் போட்டியை பார்க்கின்றனர், உலகநாடுகள் முழுவதும் கிரிக்கெட் மிகவும் பிரபலமான விளையாட்டுகளில் ஒன்றாக உள்ளது. குறிப்பாக கிரிக்கெட் போட்டியை ஒளிபரப்பு செய்ய பல்வேறு அதிநவீன கமராக்கள் பயன்படுத்தப்படுகறது, அவை மிகத்துல்லியமாக வீடியோ எடுக்கும் ஆற்றலை கொண்டவையாக உள்ளது. இதன் மூலம் மக்கள் விளையாட்டு மைதானத்தில் உள்ள அனைத்துவிதமான காட்சிகளையும் பார்க்க முடியும். மேலும் பல்வேறு செயல் திறன் மற்றும் அதிநவீன தொழில்நுட்பத்துடன் கிரிக்கெட் போட்டியை ஒளிபாப்பு செய்கிறது இப்போது வந்திருக்கும் புதிய வகை கமராக்கள்.

ஒரு நேரடி கிரிக்கெட் போட்டியை ஒளிபரப்பு செய்ய 30க்கும் மேற்பட்ட கமராக்கள் பயன்படுத்தப்படுகின்றன, மேலும் 80 பணியாளர்கள் இந்த ஒளிபரப்புக்கு தேவைப்படுகின்றனர். மைதானத்தில் பார்வையாளர்கள் உட்பட அனைத்தும் மிகத்துள்ளியமாக ஒளிபரப்பு செய்யப்படுகிறது.

போட்டியை ஒளிபரப்பு செய்யப்படும் கமரா வரிசைகள்: அல்ட்ரா மோஷன் கமராக்கள், ஸ்பைடர் காம், ஸ்டம்ப் காம், அம்பியர் காம், பிளேர்காம் மற்றும் முக்கிய பகுப்பாய்வு கொண்ட கிராபிக்ஸ் காம் போன்ற 30க்கும் மேற்பட்ட கமராக்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இதில் பார்வையாளர்கள் துல்லியமான நடவடிக்கையை எடுக்க ஏழு தீவிரமோஷன் கமராக்கள், ஸ்பைடர் காம் மற்றும் கிராபிக்ஸ் காம் போன்றவைப் பயன்படுத்தப்படுகின்றன. இந்த ஒளிபரப்பில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது.

அனைத்து கமராக்களில் எடுக்கும் காட்சியை கட்டுப்பாட்டு அறையின் மூலம் ஒளிபரப்பு செய்யப்படுகிறது. இதற்கென தனிப்பட்ட அத்துறையின் இயக்குனர் அனுமதியுடன் ஒளிபரப்பு செய்யப்படுகிறது.

# வட்ஸ்அப் படங்கள் டவுன்லோட் ஆகிறதா?




உலகெங்கிலும் 12 பில்லியன் மக்களால் வட்ஸ்அப் பயன்படுத்தப்படுகிறது. இது 2009 ஆம் ஆண்டு ஜேன் கோம் மற்றும் பிரையன் ஆக்டன் ஆகிய இருவர்களால் உருவாக்கப்பட்டது. இவர்கள் இருவரும் யாஹூ நிறுவனத்தில் ஏற்கவே பணிபுரிந்தவர்கள். இவர்கள் யாஹூ நிறுவனத்தில் இருந்து ஓய்வு பெற்றதன் பின்னர் பேஸ்புக் நிறுவனத்தில் பணிபுரிவதற்காக விண்ணப்பித்திருந்தனர். எனினும் அது பேஸ்புக் நிறுவனத்தால் புறக்கணிக்கப்பட்டது. இதில் வேடிக்கையான விடயம் என்ன வென்றால் அவ்வாறு புறக்கணிக்கப்பட்ட இருவராலும் உருவாக்கப்பட்ட வட்ஸ்அப் சேவையை பேஸ்புக் நிறுவனம் 2014 ஆம் ஆண்டில் 19 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு வாங்க வேண்டியிருந்தது. தற்போது வட்ஸ்அப்பில் உள்ள படங்கள், வீடியோக்கள் சேமிப்பதை நிறுத்துவது எப்படி எனப்பார்ப்போம்.



# விக்கியின் அறிவிப்பு முதல் இரகசிய பேச்சுக்கள் வரை

# பரபரப்பான அந்த ஏழு நாட்கள்

## திரைமறைவு நகர்வுகளின் விலாவாரி விபரம்



**நம்மாழ்வார், நிஹாலே**

ஒருவழியாக முதலமைச்சர் சர்ச்சை தீர்ந்துள்ளது. கடந்த ஒரு வாரமாகவே மணித்தியாலயத்திற்கு மணித்தியாலம் எதிர்பாராத திருப்பங்களுடன் பிரேக்கிங் நியூஸ் ஆகிக்கொண்டிருந்த நாட்கள் முடிந்து விட்டன. என்ன நடக்கிறதென மக்கள் நிதானிப்பதற்குள் அடுத்தடுத்த சம்பவங்கள் நடந்து, கடந்த ஒரு வாரமே சம்பவங்களால் ஆன நாட்களாகி விட்டன.

யாழ் நகரின் மார்ட்டின் வீதியில் உள்ள தமிழரசுக்கட்சி அலுவலகம், கோவில் வீதியிலுள்ள முதல்வரின் வீடு என இரண்டு இடங்களிலும் மையம் கொண்ட அரசியல் சூறாவளி ஒருவழியாக முடிவுக்கு வந்துகொண்டிருக்கிறது.

தனது முதலமைச்சர் கனவை கலைத்த விக்னேஸ்வரனுடன் பழைய கணக்கு தீர்க்க முயன்ற மாவைஞ் 1987 இல் காணத் தொடங்கிய முதல்வர் கனவை இந்த சமயத்திலாவது நிஜமாக்க முயன்ற சி.வீ.கே.சிவஞானம்ஞ் முதல்வராக இருந்து பழகிவிட்டு, சிக்கல்பட்டு வெளியேறினால் எதிர்காலம் என்னாகுமென தெரியாமல் விழித்த விக்னேஸ்வரன் என்ற மும்முனை காய்நகர்த்தலில் நடந்த திரைமறைவு சம்பவங்களை நாள் வாரியாக பட்டியல் படுத்துகிறோம்.

அமைச்சர்கள் மீதான விசாரணைக் குழுவின் அறிக்கை வெளியாகிய கடந்த 07ம் திகதிக்கு பின்னர் தொடங்கிய சர்ச்சை, பல எதிர்பாராத திடீர் திருப்பங்களுடன் கடந்த 15ம் திகதி இரவு ஓரளவுக்கு முடிவுக்கு வந்தது. இந்த ஒரு வாரத்தில் நடந்த சம்பவங்கள் மக்களை அதிர்ச்சியடைய வைப்பவை.

யூன் 06ம் திகதி மாகாணசபை அமர்வில் அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கையை முதல்வர் வெளியிடுவார் என எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எனினும், அன்று உறவுமுறையான ஒருவரின் மரணசடங்கில் கலந்துகொள்வதால் மறுநாள் அறிக்கையை உறுப்பினர்களிற்கு கையளிப்பதாக அவைத்தலைவர் சீ.வி.கே. சிவஞானத்திற்கு அறிவித்திருந்தார். சிவஞானம் இதை சபையில் அறிவித்தார்.

மறுநாள், 07ம் திகதி மாகாணசபை அமர்விற்கு முன்னதாக தமிழரசுக்கட்சியின் மாகாணசபை உறுப்பினர்கள் மார்ட்டின் வீதியிலுள்ள கட்சியின் தலைமை அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர். ஆறுபேர் வரையில் கலந்து கொண்டிருந்தனர். கட்சித்தலைவர் மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன் இதில் கலந்து கொண்டனர். மாகாணசபையில் எப்படி நடந்து கொள்வதென இதில் ஆராயப்பட்டது. முதலமைச்சர் விசாரணை அறிக்கையை வெளியிடுவதை குழப்பும் விதமாக செயற்படுவதில்லையென இதன்போது முடிவெடுக்கப்பட்டது.

மாகாணசபை அமர்வின்போது முதல்வர் தனது உரையை நிகழ்த்தி, உறுப்பினர்களிற்கு அறிக்கையை வழங்கினார். அன்றையதினம் மொத்த மாகாணசபையும் சமர்த்து பிள்ளையாக நடந்து கொண்டது. யாரும் குழப்பம் விளைவிக்கவில்லை. 14ம் திகதி உறுப்பினர்களின் கருத்தறியப்படும் என முதல்வர் கூறினார்.

இந்த இடத்தில் ஒன்றை சொல்ல வேண்டும். சுகாதார அமைச்சர் சத்திய லிங்கத்தின் செயற்பாடுகள் முதல்வரிற்கு ஒத்துழைப்பாக இருப்பதில்லை. அமைச்சர்களை பதவிநீக்குவதாக அறிவித்த சமயத்தில், "சில அமைச்சர்கள் மத்திய அரசுடன் நெருங்கி, எம்மை தூற்றவும் தயங்குவதில்லை என கூறியது. சத்திய லிங்கத்தின் செயற்பாட்டை விமர்சிக்கும் விதமாக சொல்லப்பட்டதாகவே கருதப்படுகிறது. சத்தியலிங்கத்தை பதவியிலிருந்து அகற்ற வேண்டுமென்பதை முதல்வர் முன்னரே தீர்மானித்து விட்டார்.

அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கையில் இரண்டு அமைச்சர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. சத்திய லிங்கம், டெனிஸ்வரன் மீது சுமத்தப் பட்ட ஊழல்குற்றசாட்டுக்களின் முறைப் பாட்டாளர்கள் சமூகமளிக்காததால் அவர்கள் நிரபராதிகளானார்கள். அதுதவிர, சத்தியலிங்கம் மீது முறைப்பாடு செய்து, சாட்சியமளிக்க வாய்ப்பில்லாதவர்களின் முறைப்பாடு, சாட்சியங்கள் முதல்வரிடம் கையளிக்கப்பட்டதாகவும் ஒருதகவலுண்டு.

இப்படி பலதையும் கூட்டிக்கழித்து பார்த்த முதல்வர், நான்கு அமைச்சர் களையும் பதவிநீக்க முடிவுசெய்தார். இந்த தகவல் அரசல்புரசலாக கசியத் தொடங்கியது.

அமைச்சர்களை பதவிநீக்கும் விடயத்தில் முதல்வர் எடுத்த ஆயுதம் பல மாதங்களின் முன் அமைச்சரவையை மாற்றுமாறு கோரி பதினாறு உறுப்பினர்கள் கையொப்பமிட்டு ஆவணமொன்றை கையளித்திருந்தனர். அப்போது அமைச்சர்கள் மாற்றத்தை முதல்வர் செய்யவில்லை. இப்பொழுது அந்த கடிதத்தை தூசிதட்டி எடுத்து, அதனடிப்படையில் அமைச்சர்களை மாற்ற முதல்வர் முடிவுசெய்திருந்தார்.

அந்த கடிதத்தில் கையொப்பமிட்ட உறுப்பினர்களுடன் 10,11ம் திகதிகளில் முதல்வர் ஆலோசனை நடத்தினார். ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக தொலைபேசி அழைப்பேற்படுத்திய முதல்வர், முன்னர் கையொப்பம் வைத்த நிலைப்பாட்டில் மாற்றமில்லையா என்பதை கேட்டார். அத்துடன், அமைச்ச ரவை மாற்றம் பற்றிய விருப்பத்தையும் கேட்டறிந்தார். எனினும், இந்த அழைப்பு எல்லா உறுப்பினர்களிற்கும் செய்யப்படவில்லை. தமிழரசுக்கட்சியின் முக்கிய உறுப்பினர்களை முதல்வர் தவிர்த்தது ஏன் என்பது புரியவில்லை.

முதல்வரின் கருத்தறிவில் கிடைத்தது சிக்கலான பதில். அமைச்சரவை மாற்றத்திற்கு பதினைந்து உறுப்பினர்கள் ஆதரவாகவும், பதினைந்து உறுப்பினர்கள் எதிராகவும் கருத்து தெரிவித்தனர். கருத்து கேட்கப்படாத தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள், அமைச்சரவை மாற்றத் திற்கு எதிரானவர்களாகத்தான் கணக் கிடப்பட்டனர்.

இதனையடுத்து 12ம் திகதியிலிருந்து முதல்வர் தமிழ்தேசிய கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளின் தலைவர்களுடன் தனித்தனியாக ஆலோசனை நடத்த தொடங்கினார். ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், ரெலோ கட்சிகளின் தலைவர்களுடன் நடந்த ஆலோசனையில், முதல்வரை முழுமையாக ஆதரிப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

இதற்குள் நான்கு அமைச்சர்கள் மாற்ற விவகாரம் கசிந்து பரவலாக பேசப்பட தொடங்கிவிட்டது. நான்கு அமைச்சர்களை மாற்றினால் எப்படியான பதில் நடவடிக்கை எடுப்பதென தமிழரசுக்கட்சியின் உயர்மட்டத்தில் ஆராயப்பட்டது. இதன்போது, நான்கு


தொடர்ச்சி அடுத்தபக்கம்...

அமைச்சர்களையும் பதவிநீக்கினால், முதல்வரையும் பதவிநீக்குவதென இதன்போது முடிவெட்டப்பட்டது.

13ம் திகதி கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் முதல்வருடன் பேசினார். நான்கு அமைச்சர்களையும் பதவியிலிருந்து நீக்கும் முடிவை கைவிடுமாறு கேட்டுக்கொண்டார். அத்துடன், மாவையுடன் இதுகுறித்து ஏன் ஆலோசிக்கவில்லையென்றும் கேட்டார். மாவையின் தொலைபேசி இலக்கம் தன்னிடம் இல்லையென முதல்வர் பதிலளித்துள்ளார். இதையடுத்து மாவையின் இலக்கம் விக்கிக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

அன்றே, மாவை சேனாதிராசாவிற்கு தொடர்பை ஏற்படுத்தினார் முதல்வர். அமைச்சரவை மாற்றம் பற்றி சொன்னதும், எரிந்து விழத் தொடங்கினார் மாவை. குற்றம்சாட்டப்படாத அமைச்சர்களை பதவியில் இருந்து அகற்ற முடியாது. அப்படி அகற்றினால் உங்களையும் பதவியிலிருந்து நீக்கும் முடிவிற்கு போவோம் என மாவை எகிறி விழுந்திருக்கிறார்.

அன்றிரவே தமிழரசுக்கட்சியின் மாகாண சபை உறுப்பினர்கள் சிலர், கட்சியின் தலைவர்கள் கூடிப்பேசி எப்படியான நடவடிக்கை எடுப்பதென முடிவு செய்தனர். மறுநாள் அமர்வில் முதலமைச்சர், அமைச்சர்கள் மீதான தனது நிலைப்பாட்டை அறிவித்தால், நான்கு அமைச்சர்களையும் பதவிநீக்கினால் குழப்பம் விளைவிப்பதென முடிவு செய்யப்பட்டது.



**விக்னேஸ்வரனுடன் பேச வேண்டுமென சம்பந்தன் விரும்பினார். சுன்னாகத்தில் இருந்த அலுவலகத்தில் இருந்து கோவில் வீதிக்கு விரைந்த சித்தார்த்தன், முதல்வருடன் பேச்சில் ஈடுபட்டிருக்கிறார். முதல்வர் நிதானத்தை கடைப்பிடித்து, தமிழரசுக்கட்சியுடன் இணக்கத்தை கடைப்பிடிக்க வலியுறுத்தி, சம்பந்தரின் நிலைப்பாட்டை சொல்லியுள்ளார்.**

மறுநாள் 14ம் திகதி. பரபரப்பான சூழலில் மாகாணசபை கூடியது. முதலில் குற்றம்சாட்டப்பட்ட அமைச்சர்களின் தன்னிலை விளக்கம். ஐங்கரநேசன் சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் உரையாற்றினார். அடுத்து குருலராஜா. ஆனால் உரையாற்ற மறுத்துவிட்டார். தனது தன்னிலை விளக்கத்தை முதல்வரிற்கு ஏற்கனவே அனுப்பிவிட்டதால், சபையில் வழங்கவில்லை என்றார். இதனையடுத்து எழுந்த முதல்வர் உரையாற்றினார்.




முதல்வர் இன்றையதினம் அமைச்சர்கள் பற்றிய முடிவை அறிவிக்ககூடாதென்பதே தமிழரசுக்கட்சியின் நிலைப்பாடு. ஆனால் அதை மீறி முதல்வர் தனது முடிவை அறிவிக்க, திட்டமிட்டபடி தமிழரசுக்கட்சி சபையிலிருந்து வெளிநடப்பு செய்தது. முதல்வரின் முடிவு அறிவிக்கப்பட்டதும், ஊழல் புரிந்தவர்கள் மீதான நடவடிக்கையை அவைத்தலைவர் பாராட்டினார்.

மதியமளவில் சபை நடவடிக்கைகள் முடிந்ததும், மார்டின் வீதி பரபரக்க தொடங்கியது. அங்கிருந்து தமிழரசுக்கட்சி மாகாணசபை உறுப்பினர்கள் அனைவரையும் உடனடியாக வருமாறு அறிவித்தல் பறந்தது. மாகாணசபை குழப்பங்களையடுத்து மாவை சேனாதிராசா பத்துநாளாக கட்சி தலைமையகத்தில் தங்கியிருந்தார். வழமையாக இத்தனைநாள் அவர் அங்கு தங்குவதில்லையென்பதே விடயத்தின் தீவிரத்தை உணர்த்தும்.

மாலை 3.30 அளவில் கலந்துரையாடல் ஆரம்பித்தது. மாவையரும் கொதிப்புடன் இருந்தார். உறுப்பினர்களும் பற்ற வைக்க, ஆரம்பத்திலேயே கூட்டத்தில் அனல்பறந்தது. முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் என்பது முதல் அரைமணி நேரத்திலேயே முடிவானது. ஆனால் அதை எப்படி செய்வது, அடுத்த முதல்வர் யார் என்பதிலேயே இழுபறி நடந்தது.

ஆரம்பத்தில் ப.சத்தியலிங்கத்தை முதலமைச்சராக்க யோசனையிருந்தது. தமிழரசுக்கட்சியின் ஒரு அணி இதை விரும்பியது. எனினும், சீ.வீ.கே. சிவஞானத்தை மாவை விரும்பினார். முன்னரே இருவருக்குமிடையில் இது குறித்த பேச்சு நடந்திருக்கலாமென்ற அபிப்பிராயமும் உண்டு. சிறிய இழுபறியின் பின்னர் சிவஞானம் முதல்வரென முடிவானது. இதில் ஒரு விடயத்தை கவனிக்க வேண்டும். புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய போரும் சமாதானமும் நூலில் சிவஞானம் குறித்த சில பகுதிகள் உள்ளன. சிவஞானம் 1987 இல் ஜேஆரால் சிபார்சு செய்யப்பட்டவர். குறித்த பொறுப்பில் அவர் நியமிக்கப்படகூடாதென புலிகள் உறுதியாக இருந்தனர். இந்த விடயம் பெரிய இழுபறியானது அப்போது.

மார்ட்டின் வீதியில் நடந்த குழப்பங்களையடுத்து, சிவஞானம் முதல்வர் என்பது தீர்மானிக்கப்பட்டது. 1987இல் இருந்து காத்திருந்த பதவியாயிற்றேஞ் சிவஞானம் சூறாவளியாக செயற்பட தொடங்கினார். பங்காளி கட்சிகளின் உறுப்பினர்கள், எதிர்கட்சி உறுப்பினர்களுடன் பேச்சில் ஈடுபட்டார். குறிப்பாக ஈ.பி.டி.பி தரப்புடனும் பேச்சில் ஈடுபட்டார். தமிழரசுக்கட்சியின் வேறு தலைவர்களும் இதில் ஈடுபட்டனர்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கொழும்பிலிருந்து கிடைத்த உத்தரவையடுத்து உடனடியாகவே கையெழுத்திட சம்மதித்தனர்.

எனினும், தமிழரசுக்கட்சியின் 15 உறுப்பினர்களின் கையெழுத்தே இருந்தது. மொத்தம் 20 வரையான கையெழுத்துக்கள் அவசியம் என்றபோது எதிரணியின் 6 கையொப்பங்கள் இருந்தனதான். ஆனால் தமிழர்களிற்கு எதிரான அரசகட்சிகளும் கூட்டுவைத்து முதல்வரை அகற்றுவதில் தமிழரசுக்கட்சியின் ஒரு சாரருக்கு தயக்கமிருந்தது. ஏனையவர்கள், உடனடியாக முதல்வரை அகற்றிவிட்டு, பதவிகளை பகிர்ந்து கொள்ளவே விரும்பினர்.

இதற்குள் பங்காளிகட்சிகளுடன் மாவை மற்றும் இன்னொரு முக்கியஸ்தர் பேச்சில் ஈடுபட்டனர். மாகாணசபை அமர்வின் முன்னரே விக்கிக்கு எதிரான நடவடிக்கைக்கு ஒத்துழைக்குமாறு மாவை பங்காளி தலைவர்களை கேட்டிருக்கிறார். அவர்கள் அதை சம்மதிக்கவில்லை. தான் ஒரு வார்த்தை சொன்னதும் பங்காளி கட்சி உறுப்பினர்கள் ஓடிவைத்து கையெழுத்திடுவார்கள் என எதிர்பார்த்திருந்த மாவைக்கு இது அதிர்ச்சியாகிவிட்டது.

"முதலமைச்சர் வேட்பாளர் நியமனத்தின் போதோ, அமைச்சரவை நியமனத்தின் போதோ எங்களை கேட்காமல் செயற்பட்டீர்கள். இப்பொழுது பிரச்சனை என்றதும் ஏன் வருகிறீர்கள். நீங்களே தீர்த்து கொள்ளுங்கள். விக்னேஸ்வரனின் நடவடிக்கை சரியென்பதே எமது நிலைப்பாடு" என ரெலா, புளொட் கட்சிகள் கூறிவிட்டன. ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சி தலைவருடன் பேசாமல் உறுப்பினர்களுடன் தனித்தனியாக தொடர்பு கொண்டும் பலனில்லை.

புளொட் அமைப்பின் லிங்கநாதன்தான் ஐங்கரநேசனிற்கு எதிரான குற்றச்சாட்டை வைத்தவர். அவரை வலைவீசி பிடிக்க கடும் பிரயத்தனம் நடந்தது. சிவஞானம், சத்தியலிங்கம் இருவரும் தொலைபேசியில் பேரம்பேசினர். விவசாய அமைச்சை தரலாமென கூறியும், லிங்கநாதன் அசைந்து கொடுக்கவில்லை. இதற்குள் மற்ற உறுப்பினர்களுடனும் பதவி, பண பேரங்கள் நடந்ததாக தகவல்.

மாகாணசபை அமர்வுகள் முடிந்ததும் அரசகட்சிகளை சேர்ந்த உறுப்பினர்கள் வவுனியா சென்றுவிட்டனர். அவர்கள் திரும்பிவரும்வரை காத்திருந்து, இரவு 8 மணிக்கு பின்னர் ஆளுனரை சந்தித்து முதல்வரிற்கு எதிரான உறுப்பினர்களின் கையொப்பத்தை ஒப்படைத்தனர்.

அன்றிரவு மாரட்டின் வீதியில் இன்னொரு யோசனையும் கலந்துரையாடப்பட்டது. ரெலா, புளொட் கட்சிகளை ஈர்க்க, தமிழரசுக்கட்சி மீதான அதிருப்தியை குறைக்க சிவாஜிலிங்கத்தை இடைக்கால முதல்வராக்கலாமென ஒரு கலந்துரையாடல் நடந்தது. எனினும், அது பின்னர் கைவிடப்பட்டது.

மறுநாள், 15ம் திகதி. அதிகாலையிலேயே கோவில் வீதியிலுள்ள முதல்வரின் வீடு பரபரத்தது. சுரேஷ் பிரேமச்சந்திரன் நேரில் சென்று ஆலோசித்தார். ஐங்கரநேசன் சென்றார். பல ஆலோசனைகள் நடந்தாலும், அடுத்து என்ன செய்வதென முதல்வரிற்கு தெரியவில்லை. குழப்பமடைந்தவராக இருந்தார்.

இந்த சமயத்தில் இன்னொரு சம்பவம் நடந்தது. தமிழ்தேசிய கூட்டமைப்பின் பங்காளி கட்சிகளில் ஒன்றான புளொட தலைவர் சித்தார்த்தனை தொலைபேசியில் அழைத்தார் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன். யாழ்ப்பாண நிலைமைகள் எப்படியிருக்கின்றன என அவர் கேட்க, நிலைமையை புரிய வைத்திருக்கிறார் சித்தார்த்தன். முதல்வரிற்கு எதிரான நடவடிக்கைகள் மக்களை குழப்பத்தில் ஆழ்த்தியுள்ள நிலவரத்தை அவர் புரிய வைத்த பின்னர், சம்பந்தன் அதிர்ச்சியடைந்துள்ளார். நிலைமையின் இந்தளவு தீவிரத்தை அவர் உணர்ந்திருக்கவில்லை. அத்துடன் எதிர்க்கட்சிகளின் துணையுடன்தான் முதல்வரிற்கு எதிரான நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதையும் அவர் அறிந்திருக்கவில்லை.

இந்த நிலைமையை தொடர முடியாதென்பதால், உடனடியாக விக்னேஸ்வரனுடன் பேச வேண்டுமென சம்பந்தன் விரும்பினார். சுன்னாகத்தில் இருந்த அலுவலகத்தில் இருந்து கோவில் வீதிக்கு விரைந்த சித்தார்த்தன், முதல்வருடன் பேச்சில் ஈடுபட்டிருக்கிறார். முதல்வர் நிதானத்தை கடைப்பிடித்து, தமிழரசுக்கட்சியுடன் இணக்கத்தை கடைப்பிடிக்க வலியுறுத்தி, சம்பந்தரின் நிலைப்பாட்டை சொல்லியுள்ளார். பின்னர் தனது கையடக்க தொலைபேசியிலேயே சம்பந்தருக்கு அழைப்பேற்படுத்தி, முதல்வருடன் பேச கொடுத்தார்.

இருவருக்குமிடையில் மிக சுமுகமாக நடந்த கலந்துரையாடலின் முடிவில் ஒரு இணக்கப்பாடு எட்டப்பட்டது. சத்தியலிங்கம், டெனிஸ்வரன் மீது மீள்விசாரணை நடத்துவது, அதுவரை அவர்கள் பதவியில் தொடர்வது, விசாரணையில் தமிழரசுக்கட்சி தலையிடாது, விசாரணையில் குற்றவாளிகளாக காணப்பட்டால் முதல்வர் என்ன நடவடிக்கையும் எடுக்கலாம். விசாரணையில் தமிழரசுக்கட்சி தலையிடாது என்ற உத்தரவாத கடிதம் தரப்பட வேண்டும்.

தொடர்ச்சி 25-ம் பக்கம்...




## வழிபாடு முடிந்தும் கோயிலில் அமர்வது ஏன்?

**கோ**வில் வழிபாடுகள் முடிந்ததும் சிறிது நேரம் அமர்ந்து செல்வார்கள். ஏனெனில் கண்களுக்கு தெரியாத கடவுளின் தூதர்கள் கோவிலில் உள்ளனர். அவர்கள் கடவுளின் பக்தர்களுக்கு வழிகாட்டுவதாக ஐதீகம் உள்ளது. மேலும் இதனால் கடவுளின் கட்டளைகளை நிறைவேற்ற கோவிலில் காத்திருக்கும் தூதர்கள் பக்தர்களின் வேண்டுகோளை ஏற்று அருள் புரிய வேண்டும் என்று பிரார்த்திப்பதற்காக சிறிது நேரம் கோவிலில் அமர்ந்து தியானம் செய்து விட்டு செல்ல வேண்டும் என்று கூறுகின்றனர். எனவே கோவில் வழிபாடுகள் முடிந்ததும், அவர்களிடம் இருந்து விடை பெறும் விதமாக சிறிது நேரம் கோவிலில் அமர வேண்டும்.

## பிள்ளையார் சுழி இடுவதன் காரணம்

**எ**ந்த ஒரு காரியத்தையும் தொடங்குவதற்கு முன்னால் உ என பிள்ளையார் சுழி போட்டு எழுதுவதற்கு காரணம் என்னவென்று தெரிந்து கொள்ளுங்கள். ஓம் என்ற மந்திரத்திற்கு பிறகே கணேசாய நமஹ, நாராயணாய நமஹ, சிவாயநம என்று மந்திரங்களைச் சொல்கிறோம். இதில் ஓம் என்பதை அ, உ, ம் என்று பிரிக்க வேண்டும். அதாவது அ, உ, ம் என்ற எழுத்துகளை இணைத்தால் ஓம் என்று வரும். அ என்பது படைப்பதையும், உ என்பது காப்பதையும், ம் என்பது அழிப்பதையும் குறிக்கும். அ என்பது முதலெழுத்து. இது வாழ்வின் ஆரம்பத்தை குறிக்கிறது. உ என்பது உயிரெழுத்துக்களின் வரிசையில் ஐந்தாவதாக வருகிறது. மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து உறுப்புகளை மனிதர்கள் அடக்கி வைத்துக் கொண்டால், ஆயுள் அதிகரிக்கும் என்பதும், ஆயுள் கூடக்கூட, மனிதர்கள் துவங்கியது தடையின்றி நடக்கும் என்பதும் தெரிந்த விஷயம். மேலும், உ என்பது காத்தல் எழுத்து என்பதால், இறைவன் நம்மை பாதுகாப்பதைக் குறிக்கிறது. நம் செயல்கள் தடையின்றி நடக்க வேண்டுமானால் நமக்கொரு பாதுகாப்பு வேண்டும். இதற்காகவே உ என எழுதுகிறோம்.

## திருஷ்டி பூசணி உடைக்கலாமா?

**க**ண் திருஷ்டி நீங்க அமாவாசை தினங்களில் பூசணிக்காய் உடைப்பது மிகவும் நல்லது என்ற எண்ணம் அனைவர் மனதிலும் உள்ளது. இறை நம்பிக்கை, மூட நம்பிக்கை இரண்டும் வேறு வேறானவை. இரண்டையுமே ஒதுக்குபவர்கள் நாத்திகர்கள். அவர்களால் இது போன்ற பிரச்சனை ஏற்படுவதில்லை. பகுத்தறிவோடு இறைவனை வழிபடுபவர்களாலும் எந்த இடையூறும் உண்டாவதில்லை. மூடநம்பிக்கையுடன் இறைவனை அணுகுபவர்களால் தான் இந்த மாதிரியான சூழ்நிலை உண்டாகிறது. கண் திருஷ்டி நீங்க பூசணிக்காயை உடைப்பது நல்லது தான். ஆனால், பலரும் காண வேண்டும் என்ற எண்ணத்துடன் நடுரோட்டில் உடைப்பது மூடநம்பிக்கை. ஒரு ஓரமாக உடையுங்கள். அவ்வளவு தான்.

## விளக்கேற்றிய பின் தலைவாரலாமா?

**மா**லை நேரம் வழிபாட்டுக்குரிய நேரம். விளக்கேற்றும் வேளையில் திருமகள் இல்லத்தில் உறைந்திருப்பதாக ஐதீகம். அந்த சமயத்தில் பெண்கள் கூந்தலை விரித்தபடி நிற்பது நல்லதல்ல. எனவே விளக்கு வைப்பதற்கு முன்பாக மாலை 5.30 மணிக்குள் பெண்கள் தலைவாரி, பூ முடித்து, நெற்றியில் திலகமிட்டுக் கொள்வது சிறப்பைத்தரும் என கூறுகின்றனர் சான்றோர்கள். திருமகள் வீட்டில் வாசம் செய்ய வேண்டும் என்று விரும்புபவர்கள் தினமும் மாலையில் வீட்டின் பூஜை அறையிலும், வாசலிலும் நெய் தீபம் ஏற்றி வழிபட வேண்டும். தீபம் ஏற்றும் போது கொல்லைபுற கதவை மூடி விட வேண்டும். அல்லது பின்புற கதவு இருந்தால் அதை மூடி விட வேண்டும்.

## கோயிலுக்குள் வலம் வரும் முறை

**ஒ**ரு நிறைமாத கர்ப்பிணி, எப்படி பவ்யமாக நடப்பாளோ, அந்தளவு வேகத்தில் தான் பிரகாரத்தை வலம் வர வேண்டும். கோயில்களில் மூலவர் பிரார்த்தனை முடிந்ததும், பிரகார வலம் வந்து வணங்குவது வழக்கம். சிலர், வேலைக்குப் போக வேண்டும், என்ற நோக்கத்தில், வேக வேகமாக கோயிலை வலம் வருவார்கள். சிலர் ஒரு கையால் நமஸ்கரித்து விட்டு, அல்லது வாயருகே கையைக்கொண்டுவந்து முத்தம் கொடுப்பது போல் பாவனை செய்து விட்டு வேகமாக கோயிலைக் கடப்பார்கள். இவையெல்லாம் சாஸ்திரப்படி தவறு. ஒரு நிறைமாத கர்ப்பிணி, எப்படி பவ்யமாக நடப்பாளோ, அந்தளவு வேகத்தில் தான் பிரகாரத்தை வலம் வர வேண்டும். அப்போது, அந்த தெய்வத்தின் நினைவு மட்டுமே இருக்க வேண்டும். கதை பேசிக்கொண்டும், சேஷ்டைகள் செய்தபடியும் கோயிலை வலம் வரக்கூடாது. குழந்தைகள் சப்தம் செய்தால், அவர்களுக்கு பக்குவமாக எடுத்துச்சொல்லி, அமைதிப்படுத்த வேண்டும். இவ்வாறு வலம் வருவதால், முன் ஜென்ம பாவங்கள் எல்லாம் விலகி விடும்.

# இந்தவார ராசி பலன்கள்

## 18.06.2016 – 24.06.2016

**மேஷம்:** செவ்வாயின் பார்வை பலம் காரணமாக தடைகள் நீங்கும். முக்கியமான பேச்சுவார்த்தைகள் நல்லபடியாக முடியும். சுக்கிரன் 7ம் வீட்டைப் பார்ப்பதால் இல்லறம் இனிக்கும். பெண்களால் ஆதாயம் உண்டு. சூரியன் தனஸ்தானத்தில் இருப்பதால் கொடுக்கல், வாங்கல் சாதகமாக இருக்கும். கல்வி வகையில் செலவுகள் இருக்கும். வண்டி பழுதடைவதால் வேலைகள் தடைபடலாம். வேலை சம்பந்தமாக தேர்வு எழுதியவர்களுக்கு நல்ல செய்தி வரும். அவசரத் தேவைக்காக கடனை வாங்கி பின்னர் அடைப்பீர்கள்.

**ரிஷபம்:** சூரியன் ராசியில் தொடர்வதால் சாதகமான நிலை உண்டு. நிலம் சம்பந்தமாக முக்கிய முடிவுகள் வரும். ஆன்மிக தாகம் அதிகரிக்கும். செவ்வாய் 2ல் இருப்பதால் சொந்த பந்தங்களின் விஷயங்களில் கருத்து கூற வேண்டாம். புதன் ராசியில் இருப்பதால் வரவு, செலவு உண்டு. பெண்களின் சேமிப்பு பணம் தங்க நகைகளாக மாறும். போட்டி, பந்தயங்களில் கலந்து கொண்டு வெற்றி பெறுவீர்கள். உத்யோகம் சாதகமாக இருக்கும்.

**மிதுனம்:** அனுகூலம், ஆதாயம், வரவு, செலவு, அலைச்சல் என கலவையான பலன்கள் இருக்கும். செவ்வாய் ராசியிலே இருப்பதால் மன உளைச்சல் வந்து நீங்கும். பிறந்த வீட்டிலிருந்து பெண்களுக்கு ஆதாயம் வரும். குரு ராசிநாதனான புதனை பார்ப்பதால் செல்வாக்கு கூடும். உத்யோகத்தில் பதவி உயர்வு, ஊதிய உயர்வுக்கு வாய்ப்புள்ளது. மாணவர்கள் உயர்கல்விக்காக வெளிநாடு செல்லும் யோகம் உள்ளது. கேது 9ல் தொடர்வதால் குலதெய்வ வழிபாடுகள், நேர்த்திக் கடன்கள் போன்றவற்றை செய்து முடிப்பீர்கள்.

**கடகம்:** செவ்வாயின் பார்வை பலம் காரணமாக தீர்க்கமான, தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். சொந்த வேலைகளுடன், உறவினர் வேலைகளையும் பார்க்க வேண்டி வரும். சூரியன் யோக ஸ்தானத்தை பார்ப்பதால் எதிர்பார்த்த இடத்தில் இருந்து பண வரவும், உதவிகளும் வந்து சேரும். 2ல் ராகு தொடர்வதால் யாருக்கும் யோசிக்காமல் எந்த வாக்குறுதியும் தர வேண்டாம். வீட்டில் பராமரிப்புச் செலவுகள் ஏற்படும். வியாபாரம் லாபகரமாக நடக்கும். புதிய ஆர்டர்கள் கிடைக்கும்.

**சிம்மம்:** சூரியன், புதன் பார்வை சாதகமாக இருப்பதால் உற்சாகமாக செயல்படுவீர்கள். சொத்து சம்பந்தமாக முக்கிய முடிவுகள் வரும். தந்தையிடம் அனுசரணையாகப் போவது நல்லது.



மாமன், மச்சான் உறவுகளால் அனுகூலம் உண்டு. குரு நல்ல அம்சத்தில் இருப்பதால் புதுமணத் தம்பதிகள் குழந்தை பாக்கியத்தை எதிர்பார்க்கலாம். சனிபகவானின் சஞ்சாரம் காரணமாக உத்யோகத்தில் அலைச்சல், வேலைச்சுமை, பயணங்கள் இருக்கும். புதன் கிழமை சுப செய்தியை எதிர்பார்க்கலாம்.

**கன்னி:** கிரக சாரபலம், ராசிநாதன் புதன்பலம், குரு பார்வை யோகம் காரணமாக நல்ல மாற்றங்கள், திருப்பங்கள் உண்டாகும். வராது என்று நினைத்த பணம் கை வந்து சேரும். மாமியார், நாத்தனார் மூலம் மகிழ்ச்சியும், பரிசுகளும் கிடைக்கும். சனி பகவானின் சஞ்சாரம் காரணமாக திடீர் பயணங்கள் இருக்கும். தாயாரின் உடல் நலத்தில் கவனம் தேவை. நிலம் சொத்து சம்பந்தமாக அவசர முடிவுகள் வேண்டாம். சுக்கிரனின் பார்வை காரணமாக பொன், பொருள் சேர்க்கை உண்டு. சுப விசேஷத்திற்கான தேதியை நிர்ணயம் செய்வீர்கள். தொழில் லாபகரமாக நடக்கும். வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள்.

**துலாம்:** ராசிநாதன் சுக்கிரன் ராசியை பார்ப்பதால் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். இல்லறம் இனிக்கும். மகனுக்கு நல்ல நிறுவனத்தில் இருந்து வேலைக்கான அழைப்பு வரும். புதன் தன ஸ்தானத்தைப் பார்ப்பதால் பணப் புழக்கம் உண்டு. தந்தையிடம் இருந்து உதவி கிடைக்கும். குரு பார்வை காரணமாக மருத்துவ சிகிச்சையில் இருந்தவர்கள் குணமடைவார்கள். பெண்கள் நகைகளை இரவல் வாங்கவோ, கொடுக்கவோ கூடாது. காது, தொண்டை சம்பந்தமாக உபாதைகள் வரலாம்.

**விருச்சிகம்:** செவ்வாய் தனம், குடும்பம், வாக்கு ஸ்தானத்தை பார்ப்பதால் மனமகிழ்ச்சி, பண வரவு உண்டு. வீடு மாற இடம் பார்த்தவர்களுக்கு நல்ல வீடு அமையும். மகளின் ஆசைகள், கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள். சுக்கிரன் 6ல் இருப்பதால் சாதக, பாதகம் உண்டு. மனைவியிடம் பழைய பிரச்னைகளை பேச வேண்டாம். கேது 4ல் தொடர்வதால் வண்டி வகையில் செலவுகள் இருக்கும். வயிறு சம்பந்தமாக உபாதைகள் வரலாம். வியாபாரம் சாதகமாக இருக்கும். வங்கியில் இருந்து உதவிகள் கிடைக்கும். வேலையாட்கள் பிரச்னை தீரும்.

**தனுசு:** சுக்கிரன் 5ல் இருப்பதால் நிறை, குறைகள் உண்டு. பிள்ளைகள் கல்வி சம்பந்தமாக அலைச்சல், செலவுகள் இருக்கும். செவ்வாயின் பார்வை காரணமாக பாதியில் நின்ற கட்டிட வேலைகளை மீண்டும் தொடங்குவீர்கள். வழக்கில் சாதகமான தீர்ப்பு கிடைக்கும். குருபகவானின் பார்வை காரணமாக கடல் கடந்து செல்வதற்கு வாய்ப்புண்டு. குழந்தை பாக்கியத்தை எதிர்பார்த்தவர்களுக்கு இனிக்கும் செய்தி உண்டு. உத்யோகத்தில் உயர் அதிகாரிகளிடம் அனுசரித்துப் போகவும், பிரசித்தி பெற்ற கோயில்களுக்கு குடும்பத்துடன் சென்று வருவீர்கள்.

**மகரம்:** தன, வாக்கு ஸ்தானத்தில் கேது தொடர்வதால் அவசிய, அநாவசிய செலவுகள் ஏற்படும். குடும்பத்துடன் பரிகார கோயில்களுக்கு சென்று வருவீர்கள். சுக்கிரன் பலமாக இருப்பதால் உடல் ஆரோக்கியம் மேம்படும். கணவன், மனைவி இடையே நெருக்கம் கூடும். தசாபுக்தி சாதகமாக இருப்பவர்கள் நான்கு சக்கர வண்டி வாங்கி மகிழ்வார்கள். சனிபகவானின் பார்வை காரணமாக தாயார் உடல் நலனில் கவனம் தேவை. அடமானத்தில் இருக்கும் பத்திரம், நகைகளை மீட்பீர்கள். உத்யோகத்தில் சக ஊழியர்களிடம் அனுசரித்துப் போவது நலம் தரும்.

**கும்பம்:** சுக்கிரன் பாக்கிய ஸ்தானத்தைப் பார்ப்பதால் சுப விஷயங்கள் கூடிவரும். புதுமணத் தம்பதிகள் குழந்தை பாக்கியம் எதிர்பார்க்கலாம். கடல் கடந்து செல்வதற்கான கால நேரம் வந்துள்ளது. புதன் சாதகமாக இருப்பதால் போட்டி, பந்தயங்களில் கலந்து கொண்டு வெற்றிபெறுவீர்கள். குருபகவான் தன ஸ்தானத்தைப் பார்ப்பதால் கொடுக்கல் வாங்கல் சீராக இருக்கும். திருமண விஷயமாக ஒருமித்த கருத்து உண்டாகும். பெண்கள் பழைய நகைகளை மாற்றி புது டிசைன் நகை வாங்குவீர்கள்.

**மீனம்:** குரு பார்வை காரணமாக செல்வாக்கு, சொல்வாக்கு உயரும். சகோதரி, பிரசவ சம்பந்தமாக அலைச்சல், செலவுகள் இருக்கும். செவ்வாய் 4ல் பலமாக இருப்பதால் சொத்து, பாகப் பிரிவினை சுமுகமாக முடியும். தந்தை உதவுவார். பிறந்தநாள் விழா, வளைகாப்பு, நிச்சயதார்த்தம் போன்றவற்றிற்கான ஏற்பாடுகளை செய்வீர்கள். புதன் பார்வை காரணமாக மகன், மகள் வேலை சம்பந்தமாக ஆர்டர் வரும். உறவுப் பெண்களால் குடும்பத்தில் சில சலசலப்புகள் வந்துபோகும். தொழில், வியாபாரம் செழிப்படையும். கடையில் பராமரிப்புச் செலவுகள் வரலாம். வியாபார வளர்ச்சிக்காக புதிய முயற்சிகள் எடுப்பீர்கள்.

# சித்திரவதையின் பின்னரும் புலிகளில் இருந்த ஜெயம்!

பீஷ்மர்

விடுதலைப்புலிகள் அமைப்பிற்கு எதிராக மாத்தையா சதி செய்கிறார் என்ற சந்தேகம் புலிகளின் தலைமைக்கு ஏற்பட்டது. அது உண்மையா, ஊகமா என்பதில் உறுதியான தகவல்கள் இல்லையென்பதை இந்த பகுதியின் தொடக்கத்தில் பார்த்தோம்.

பிரபாகரனின் நெருக்கமான பாதுகாப்பு பணியில்இருந்த செங்கமலம்,கிருபன், முருகன் போன்றவர்களும் சதியின் உடந்தையாளர்கள் என கைதானார்கள். இவர்கள் தவிர, புலிகளின் உயர்மட்ட தலைவர்கள் சிலரும் கைதானார்கள். அனேகமாக வன்னிப்படை யணியினர் தான் கைதானார்கள். ஏனெனில், மாத்தையா கணிசமான காலம் வன்னியை மையமாக கொண்டுதான் செயற்பட்டார். அப்படி கைதானவர்களில் பலர் விடுதலையானார்கள். குட்டி, ஜெயம், யோகி போன்றவர்கள் இதில் முக்கியமானவர்கள்.

அப்போது விடுதலைப்புலிகளின் அரசியல் கட்சியாக மக்கள் முன்னணி செயபற்பட்டது. மாத்தையா, யோகி எல்லாம் அதில்தான் செயற்பட்டனர். அப்போது இருவருக்குமிடையில் நெருக்கமிருந்தது.

மாத்தையாவின் கைதை தொடர்ந்து யோகியும் கைதானார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், சதி தொடர்பான தகவல்களை தெரிந்து வைத்திருந்தார் என்றும், ஆனால் சதியில் சம்பந்தப்படவில்லையென்றும் புலிகள் முடிவுசெய்தனர். தெரிந்து கொண்டு தகவல் தரவில்லையென்பதே அவர் மீதான குற்றச்சாட்டு. அதற்கான தண்டனை என்ன தெரியுமா?

சில காலம் தடுப்பு, விசாரணையின் பின் 1995 இல் யோகி விடுவிக்கப்பட்டார். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பழைய




மாணவர் அவர். கிரிக்கெட், செஸ் விளையாட்டுக்களில் கில்லாடி. விடுவிக்கப்பட்ட பின்னர் இந்துக்கல்லூரியில் இரண்டு விளையாட்டுக்களையும் மாணவர்களிற்கு பயிற்றுவித்துக் கொண்டிருந்தார்.

பின்னர் மெதுமெதுவாக அமைப்பிற்குள் இணைப்பட்டார். ஆனால் இறுதிவரையும் அவர் முக்கிய பொறுப்புக்களில் அமர்த்தப் படவில்லை. அதிகபட்சமாக 2005 அளவில் சமராய்வு பிரிவு பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். யுத்தகளங்களை பின்னர் ஆய்வுசெய்யும் பிரிவு. இதன்மூலம் களத்தில் நடந்த சம்பவங்களை மீள்பரிசீலனை செய்து, திருத்திக்கொள்ளும் வாய்ப்பு உருவானது.

இறுதியுத்த சமயத்தில் விடுதலைப் புலிகளின் ஒரு தொகுதி முக்கியஸ்தர்கள் சரணடைந்திருந்தனர். இதில் யோகியும் ஒருவர். புலிகளின் முக்கியஸ்தர்கள் சரணடைவதற்கு பாதுகாப்பாக பிரான்சிஸ் யோசப் பாதரை அழைத்து சென்றனர். சரணடைபவர்களின் பெயரை ஆங்கிலத்தில் எழுதும் பொறுப்பை ஏற்றவர் யோகி. இறுதி யுத்தத்தில் தப்பி வந்த பலர், யோகி சரணடைய நின்றதை கண்டதாக ஆணைக்குழுக்களின் முன்பாக சாட்சியமளித்ததும் குறிப்பிடத்தக்கது.

மாத்தையா சமயத்தில் கைதான இன்னொருவர் குட்டி. எம்ஆர்எஸ் குட்டியென பின்னாளில் அழைக்கப்பட்டவர். விசாரணையின் பின் நிரபராதியென விடுவிக்கப்பட்டார். அனேகமாக இவர் வழங்கல் தொடர்பான பணிகளில் தான் ஈடுபட்டவர். 1980களின் மத்திய பகுதியிலேயே லொறிகள் மூலம் பொருட்களை கொண்டு சென்று விற்பது, பொருட்களை ஏற்றியிறக்குவதென அமைப்பிற்காக பணமீட்டிக் கொண்டிருந்தார்.

மார்ட்டியஸ் ரூட் சேர்விஸ் (எம்ஆர்எஸ்) என்ற பெயரில் லொறிகளை வைத்து பொருள் விநியோகம், ஆட்கள் போக்குவரத்தை செய்து வந்தவர். ஆரம்பத்தில் கள்ளமரம் ஏற்றும் லொறிகளை பிடிப்பது என்று ஆரம்பித்து, 1990 இன் பின் வன்னியில் மார்ட்டியஸ் ரூட் சேர்விஸ் பெயரில் ஏராளம் லொறிகளை வைத்திருந்தார்.

மாத்தையா விவகாரத்தில் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின் பழைய பொறுப்புக்களை ஏற்றார். இதன் பின் தமிழீழ போக்குவரத்து கழகம் என்ற போக்குவரத்து நிறுவனமொன்றை உருவாக்கினார்.


ஜெயம் குடும்பம்


வெளிநாட்டு பிரதிநிதிகளுடன் ஜெயம்


பிரபாகரன், சொர்ணம், வெள்ளை, பானு, ஜெயம் (இடது மூலை)

இவர்களைவிட இன்னொருவரும் கைதாகி விடுவிக்கப்பட்ட முக்கியஸ்தர்கள் பட்டியலில் உள்ளார். அவர்தான் தளபதி ஜெயம். கைதாகும்போது மாத்தையாவிற்கு நெருக்கமானவராக இருந்தார். மாத்தையா சதியில்ஜெயம்நிச்சயம்பங்குபெற்றிருப்பார் என புலிகளின் புலனாய்வுத்துறை விசாரணையாளர்கள் கருதினார்கள். அந்த உண்மையை ஜெயத்தின் வாயால் கக்க வைப்பதற்காக கடுமையான சித்திரவதைகள் செய்தனர். சொல்லவே முடியாத சித்திரவதைக்கு உள்ளானார். ஜெயத்தின் இரண்டு கைகள், கால்களில் இருந்த நகங்கள் பிடுங்கப்பட்டன. உடலெல்லாம் காயங்கள்.

உடற்காயங்கள் ஏற்படுத்தப்பட்ட சித்திரவதையின் முடிவிலும் பிரபாகரனிற்கு விசுவாசமானவராகவே ஜெயம் இருந்தார். அவர் குற்றமற்றவர் என்ற முடிவிற்கு வந்த சமயத்தில், விசாரணை முகாமில் இருந்து வேறுமுகாமிற்கு மாற்றப்பட்டார். அப்பொழுது அவர் பகிரங்கமாக நடமாட விடப்பட்டார். அது எப்படியெனில் ஒட்டுசுட்டானில் இருந்த அந்த முகாமிற்கான மரக்கறி, உணவு பொருட்களை சைக்கிளில் கட்டி வருவது. புதிய போராளிகள், அமைப்பிலிருந்து விலகுவதற்கான தண்டனை அனுபவிப்பவர்கள் போன்றவர்கள்தான் இந்த வேலையில் ஈடுபடுத்தப்படுவார்கள். முக்கிய பொறுப்பில் இருந்த மூத்த போராளியான ஜெயத்தை அந்த வேலையில் ஈடுபடுத்துவது அவரை அவமானப்படுத்துவதாகும். இப்படியான நிலைமை ஏற்பட்டால் பெரும்பாலானவர்கள் பின்னர் அந்த இடத்தில் இருக்கமாட்டார்கள்.

ஆனால் ஜெயம் வித்தியாசமானவர்.

ஜெயத்தின் அனைத்து விசாரணைகளும் முடிந்த பின்னர், அவர் எந்த குற்றத்திலும் ஈடுபடாதவர் என்பதை புலனாய்வுத்துறை உறுதி செய்து கொண்டது. ஆனாலும், பிரபாகரன் உள்ளிட்ட மூத்த தளபதிகளிற்கு பெரும் உறுத்தல் ஏற்பட்டது. ஜெயத்திற்கு இவ்வளவு சித்திரவதை செய்தபின்னர், நிரபராதியென சொல்லி அமைப்பில் இருக்குமாறு எப்படி கேட்பதென தயங்கினர். அவரது நகங்களை பிடுங்கி கடுமையான சித்திரவதை செய்தபின், அமைப்பில் இருக்கவும் விரும்பமாட்டார் என்றுதான் பிரபாகரன் நினைத்தார். ஜெயத்திற்கு இழைக்கப்பட்ட அநீதி பிரபாகரனின் மனதை உறுத்தியது.

அவரை வீட்டுக்கு செல்லுமாறும், ஏதாவது தொழில் ஆரம்பிக்க அல்லது வெளிநாடு செல்ல பணஉதவி செய்வதாக அமைப்பின் சார்பில் பொட்டம்மான் கேட்டார். எனினும் ஜெயம் அதை மறுத்துவிட்டார். தனது கடைசிக்கணம் வரை தமிழீழ இலட்சியத்திற்காக வாழ்வேன் என கூறினார். சிலர் இப்படி தம்பட்டம் அடிப்பார்கள். நிஜத்தில் அப்படி இருப்பதில்லை. ஆனால் ஜெயம் அப்படி தம்பட்டம் அடித்து திரிபவர் அல்ல. நிஜத்தில் அப்படித்தான் வாழ்ந்தார்.

அதன்பின் ஜெயத்தை பிரபாகரன் நேரில் சந்தித்து தழுவிக்கொண்டார். பிரபாகரன் அப்படித்தான். அவருக்கு இலட்சியம்தான் முக்கியம் கூட வருபவர்கள் தடுமாறினாலும் சென்றுகொண்டேயிருப்பார். ஜெயம் தடுமாறவில்லை. ஆனால் அப்படி நினைத்து சிரமப்படுத்திவிட்டேன் என கலங்கினார்.

அதன்பின் விசேட வேவு அணிக்கு ஜெயம் பொறுப்பாக நியமிக்கப்பட்டார். அதன்பின் ஜெயம் பல்வேறு பொறுப்புக்களை ஏற்று ஓய்வில்லாமல் இயங்கினார். ஜெயசிக்குறு எதிர்சமர், ஓயாத அலைகள் 2, ஓயாத அலைகள் 3, தீச்சுவாலை முறியடிப்பு சமர்களில் முக்கிய பங்காற்றினார். மன்னார் களமுனை தளபதி, கிழக்குதளபதி என பல்வேறு பொறுப்புக்களை வகித்தார். ஜெயத்தின் போர்க்களங்களை இந்த பகுதியில் விலாவாரியாக குறிப்பிடவில்லை.

ஜெயம் ஆர்ப்பாட்டமில்லாதஉறுதியான தளபதி. இறுதியுத்தத்தில் மே 17 மதியத்தின் பின்னர் அல்லது மே 18 காலையில் அவர் தன்னைத்தானே மாய்த்துக்கொண்டார்.

(தொடரும்)



## த்ரெட்டிங் செய்த பின் கண்டிப்பாக பின்பற்ற வேண்டியவை

முகத்தில் வளரும் தேவையற்ற முடிகளை நீக்குவதற்கு பெண்கள் த்ரெட்டிங் செய்வார்கள். சருமத்தில் வளரும் தேவையற்ற முடிகளை நீக்க வேக்சிங் இருந்தாலும், பெரும்பாலான பெண்கள் த்ரெட்டிங்கை தான் மேற்கொள்கிறார்கள். இதற்கு காரணம் வேக்சிங்கை விட த்ரெட்டிங் செய்வதால் வலி சற்று குறைவாக இருப்பது தான்.

த்ரெட்டிங் புருவங்களில் மட்டுமின்றி, உதட்டிற்கு மேல் மற்றும் நெற்றியிலும் சிலர் செய்வார்கள். த்ரெட்டிங் செய்த பின் சில விஷயங்களை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும். அப்போது தான் அவ்விடத்தில் பிம்பிள், புண் வருவதை தடுக்கலாம். இப்போது த்ரெட்டிங் செய்த பின் கடைபிடிக்க வேண்டிய சில முக்கியமான வழிமுறைகளை பார்க்கலாம்.


த்ரெட்டிங் செய்யும் முன், முகத்தை நீரினால் சுத்தமாக கழுவிக் கொள்ள வேண்டும். குறிப்பாக சுடுநீரைப் பயன்படுத்துவது நல்லது. ஏனெனில் சுடுநீர் சருமத்தில் உள்ள அதிகப் படியான எண்ணெய் பசையை நீக்கிவிடும்.

முகத்தை நீரில் கழுவியப் பின், சுத்தமான காட்டன் துணியால் முகத்தைத் துடைக்காமல், ஒற்றி எடுக்க வேண்டும். ஏனெனில் துடைத்தால், சருமம் பாதிக்கப்படக்கூடும்.

பின் இயற்கையான டோனரைக் கொண்டு முகத்தைத் துடைக்க வேண்டும். அதிலும் சீமைச் சாமந்தி டீ அல்லது கற்றாழை ஜெல் கொண்டு துடைத்து, உலர விடுங்கள். அதன் பின் பியூட்டிசியனை த்ரெட்டிங் செய்ய அனுமதியுங்கள். த்ரெட்டிங் செய்து முடித்த பின், மீண்டும் டோனரை தடவி, ஒரு ஐஸ் கட்டியால் அவ்விடத்தை ஒத்தடம் கொடுக்க வேண்டும். இதனால் சருமத்துளைகள் மூடி பிம்பிள் வருவது தடுக்கப்படும்.

ஒருவேளை உங்களுக்கு முகம் கழுவ வேண்டுமென்பது போல் தோன்றினால், ரோஸ் வாட்டரைப் பயன்படுத்துங்கள். இதனால் த்ரெட்டிங் மூலம் ஏற்பட்ட காயங்கள் மற்றும் பிம்பிள் வருவது தடுக்கப்படும்.

த்ரெட்டிங் செய்து முடித்த பின் 6 மணிநேரத்திற்கு அவ்விடத்தைத் தொடக் கூடாது. அதேப்போல் கண்ட க்ரீம்களையும் பயன்படுத்தக்கூடாது. அதுமட்டுமின்றி, குறைந்தது 12 மணிநேரத்திற்கு ஸ்கரப் செய்வதைத் தவிர்க்க வேண்டும்.



## கால்களுக்கு வலிமை தரும் பாடஹஸ்தாசனம்

இந்த ஆசனத்தை செய்வது மிகவும் சுலபமானது. இந்த ஆசனத்தை தொடர்ந்து செய்து வந்தால் இடுப்பு, கால்கள் நன்கு வலிமை அடையும். மேலும் ஜீரண சக்தியை அதிகரிக்கும்.

**செய்முறை:** விரிப்பில் கையை உயர்த்தி நேராக நிற்கவும். பின்னர் மெதுவாக உடலை முன்பக்கமாக வளைக்கவும். கைகளை நேராக தொங்கவிட்டு விரல்கள் இணைந்த நிலையில் பூமியை நோக்கியும், தலை கவிழ்ந்தும் படத்தில் உள்ளபடி இருக்கட்டும். இதே நிலையில் சிறிது நேரமிருந்து ஆரம்ப நிலைக்கு வரவும். இவ்வாறு 3 முதல் 5 முறை செய்யவும்.

**பலன்கள்:** இடுப்பு வளையும் தன்மை பெறுகிறது. ஜீரண சக்தி அதிகரிக்கிறது. கால்கள் வலுப்பெறுகின்றன.



## பூப்படைந்த பெண்களுக்கு என்னவெல்லாம் சொல்லித்தர வேண்டும்?

பெண் பிள்ளைகள் பூப்படைதலை பருவமடைதல் என்று கூறுவோம். இந்த காலகட்டத்தில் பெண்களுக்கு பல்வேறு சந்தேகங்கள் வரும். அந்த சந்தேகங்களை தாய் தான் பொறுமையாக சொல்லித்தர வேண்டும்.

எல்லா பெண்களுக்கும் பருவம் அடையும்போது மாதவிலக்கு வருவது இயல்பு, இதில் பயப்பட ஒன்றுமில்லை என்பதை வெளிப்படையாகக் கூறவேண்டும்.

மாதவிலக்கு பற்றிய ஏதாவது கட்டுரைகள், தகவல்கள் இருந்தால் அதை அவர்களிடம் காட்டலாம்.

பிறப்புறுப்பிலிருந்து ரத்தம் வருவதைப் பார்த்து சிறுமிகள் திகிலடைந்து விடுவார்கள். இது இயல்பு, இவ்வளவு ரத்தம் வெளியேறும், அந்த சமயத்தில் தலையும், முதுகும் வலிக்கும், அவ்வப்போது முகம் வெளுத்தது போல இருக்கும்.

மனநிலையில் ஏற்ற இறக்கம், கோபம் சிடுசிடுப்பு போன்றவை இருக்கும் இதெல்லாம் இந்த சமயத்தில் வரும் அறிகுறிகள் என செல்லித் தரவேண்டும்.

அந்தரங்க சுத்தம் அவசியம் என்பதையும் அதற்கான காரணங்களையும் சொல்லித் தரவேண்டும்.

அதே சமயம் மாதவிலக்கு காலத்தில் கொஞ்சமாக சாப்பிட வேண்டும், அடிக்கடி குளிக்கக்கூடாது, எல்லாவற்றிடமிருந்தும் ஒதுங்கியிருக்க வேண்டும், படிக்கக்கூடாது, உடல் சார்ந்த எந்த வேலையையும் செய்யக்கூடாது, விளையாடக்கூடாது என்றெல்லாம் தப்புத் தப்பாக சொல்லித் தரக்கூடாது.

எப்படி மாதவிலக்கு காலத்தில் சானிடரி நாப்கினைக் பயன்படுத்த வேண்டும் என்பதை அவர்களுக்குச் சொல்லித் தரவேண்டும்.

மார்பகவளர்ச்சிக் காலத்தில் இறுக்கமான ப்ராக்களை அணியக்கூடாது என்பன போன்ற சந்தேகங்களை தயங்காமல் சொல்லவேண்டும்.

## சோடா குடிப்பவருக்கு இந்த நோய்கள் வரலாம்

சோடா.. மதுவில் கலப்பதற்காகட்டும்,. தாகத்திற்காகட்டும். சோடாவை குடிப்பதில் இன்னமும் எல்லாருக்கும் தனி விருப்பமாக இருக்கிறது. ஆனால் சோடாவில் இருக்கும் காரணிகள் பலவித ஆபத்தான நோய்களுக்கு காரணமாக இருக்கிறது .

ஒரு நாளைக்கு 2 சோடாவை குடிக்கும் பழக்கம் இந்த கால இளைஞர்கள் ஒரு கலாச்சாரமாகவே பின்பற்றி வருகிறார்கள். இப்படி குடிப்பதானால் உண்டாகும் தீமைகளை காண்போம்.

சோடாவை தினமும் குடிப்பதால் 50% இதய நோய்கள் உருவாகும் வாய்ப்புகள் அதிகம் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்து ஒருவருடம் சோடாவை குடித்தால் உடல் பருமன் இரட்டிப்பாகும் என ஒரு ஆய்வில் தெரிய வந்துள்ளது.

சோடாவிலுள்ள மூலப்பொருட்களால் நரம்பு மண்டலம் விரைவில் பலமிழந்து போய்விடும். இதனால் நரம்புத் தளர்ச்சி உருவாகும் வாய்ப்புகள் அதிகம்.

அடிக்கடி ரத்த அழுத்தத்தில் மாறுபாட்டை சோடா உருவாக்குவதால் அதிக காற்றாழுத்தத்தையும் உடலில் உருவாக்கும். இது தலைவலியை உண்டாக்கும். மைக்ரேன் உருவாகவும் சோடா காரணமாகும்.

சோடாவை தினமும் குடித்தால் முதுமையில் அல்சீமர் நோய்க்கு தள்ளப் படுவீர்கள் என ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கிறார்கள். இதனால் ஞாபக மறதி, மந்தத் தன்மை, வாய் குழறுதல் போன்றவை உண்டாகும் வாய்ப்புகள் உண்டு.

அதிகப்படியாக செரடோனின் சுரப்பை தூண்டச் செய்வதால் ஒரு வித ஹைபர் நிலை உண்டாகும். நிம்மதியற்ற ஏதாவது செய்து கொண்டே இருக்கும்படியான ம நிலை உருவாகும்.

சோடாவை மதுவுடன் கலந்து குடிப்பவர்களுக்கு விரைவில் சர்க்கரை வியாதி உருவாகும். அதுமட்டுமில்லாமல் ஏற்கனவே சர்க்கரை வியாதி இருப்பவர்கள் சோடாவை தனியாக குடிக்கும்போது சர்க்கரையின் அளவு அதிகரித்து உடல் பாதிப்பு மோசமாகும்.

ஒரு நாளைக்கு இரு தடவை அல்லது அதற்கு மேல் சோடாவை குடித்தால் அடிக்கடி தலைசுற்றல், வாந்தி மயக்கம் ஆகியவை உண்டாகும். அது தவிர்த்து, குண நலன்களில் மாறுபாடு, ரத்த அழுத்த நோய்கள், வயிற்று வலி, உடல் வலி என பலவித பாதிப்புகளை உண்டாக்கும்.



**தேவையான பொருட்கள்:** துண்டு மீன் 1/2 கிலோ, உப்பு, எண்ணெய் தேவையான அளவு, மஞ்சள் தூள் அரை ஸ்பூன், எலுமிச்சை சாறு 1 ஸ்பூன்

**அரைக்க:** பூண்டு 6 பல், பச்சைமிளகாய் 5, மிளகு 1 தேக்கரண்டி, சீரகம் லு தேக்கரண்டி, சோம்பு ரு தேக்கரண்டி, கொத்தமல்லி ஒரு கைப்பிடி, கறிவேப்பிலை சிறிதளவு, புதினா ஒரு கைப்பிடி.

**செய்முறை:** முதலில் மீனை நன்றாக சுத்தம் செய்து கொள்ளவும். மிக்ஸியில் அரைக்க வேண்டிய பொருட்களை நன்றாக அரைத்து கொள்ளவும்.

ஒரு பாத்திரத்தில் மீனை போட்டு அதனுடன் அரைத்த மசாலா, உப்பு, மஞ்சள் தூள், எலுமிச்சை சாறு சேர்த்து நன்றாக மீனில் தடவி பிரிட்ஜில் ஒரு மணிநேரம் ஊற வைக்கவும்.

ஒரு சட்டியில் எண்ணெய் ஊற்றி சூடானதும் மீனை போட்டு பொரித் தெடுக்கவும். சுவையான கிரீன் மசாலா மீன் பிரை தயார்.

# குழந்தைகளுக்கு விருப்பமான கிரீன் மசாலா மீன் பிரை





# வெங்காயத்தில் இவ்வளவு நன்மைகளா?

வெங்காயத்தில் சல்பர், விற்றமின் சி, பி6, பயோடின், ஃபோலிக் அமிலம், குரோமியம், கல்சியம் மற்றும் நார்ச்சத்து போன்றவை வளமாக நிறைந்துள்ளது. இவ்வளவு சத்துக்களை உள்ளடக்கிய வெங்காயத்தை பச்சையாக சாப்பிடுவதால் கிடைக்கும் நன்மைகள் என்னவென்று தெரியுமா?

வெங்காயத்தில் உள்ள க்யூயர்சிடின் தமனிகளில் ப்ளேக்குகளின் உருவாக்கத்தைத் தடுத்து, மாரடைப்பு ஏற்படும் அபாயத்தை குறைக்கிறது.

வெங்காயத்தில் உள்ள அழற்சி எதிர்ப்பு பண்புகள் சுவாசகுழாய் தசைகளை ரிலாக்ஸ் அடையச் செய்து, ஆஸ்துமா மற்றும் மூச்சுக்குழாய் அழற்சியில் இருந்து விடுபட உதவுகிறது. வெங்காயம் சளி, இருமல், காய்ச்சல், தும்மல் மற்றும் மூக்கு ஒழுகல் போன்றவற்றையும் தடுக்க பெரிதும் உதவியாக இருக்கும்.

வெங்காயத்தில் உள்ள அன்டி மைக்ரோபியல் தன்மை சளி, காய்ச்சல், தும்மல், மூக்கு ஒழுகல், போன்ற நோய்களை சரி செய்து, அல்சர் ஏற்படும் அபாயத்தைக் குறைக்க உதவுகிறது.

வெங்காயத்தில் உள்ள கரையக் கூடிய நார்ச்சத்துக்கள், குடலில் நல்ல பக்டீரியாக்களின் வளர்ச்சியை அதிகரித்து, செரிமானம், மலச்சிக்கல், சிறுநீர்ப்பை கோளாறுகள் போன்ற பிரச்சனை ஏற்படாமல் தடுக்கிறது.

வெங்காயத்தில் உள்ள அன்டி செப்டிக் மற்றும் அன்டி மைக்ரோபியல் பண்புகள், காசநோயை ஏற்படுத்தும் மைகோ பக்டீரியத்தை செயலிழக்கச் செய்து, காச நோய் வராமல் தடுக்கிறது.

பிரசவத்திற்கு பின் பெண்கள் வெங்காயத்தை சிறிது பச்சையாக தினமும் சாப்பிட்டால், அது தாய்ப்பால் உற்பத்தியை அதிகரிக்க உதவுகிறது.

வெங்காயத்தில் கலோரிகள், சோடியம் குறைவு மற்றும் கொழுப்புகள் அற்றது என்பதால், அது ரத்த நாளங்களின் நெகிழ்வுத் தன்மையை அதிகரித்து, ரத்த சோகை, உயர் இரத்த அழுத்த பிரச்சனை வராமல் தடுக்கிறது.

# மோட்டார்சைக்கிள் பெண்கள் கவனத்திற்கு!

வாகனம் ஓட்டுவதில் ஆண்களை விட பெண்களுக்கு சிரமம் கொஞ்சம் அதிகம் தான். முக்கியமாக பெண்கள் உடை அணியும் முறை அவர்களை விபத்தில் சிக்க வைத்து விடும். அதிலும் மோட்டார்சைக்கிள்களில் பறக்கும் பெண்களிற்குத்தான் ஆபத்து அதிகம். எனவே அடிக்கடி மோட்டார் சைக்கிள்களில் பயணிக்கும் பெண்கள் இதை ஒரு முறை படித்துவிட்டு பயணத்துக்கு கிளம்புங்கஞ்

**சேலை உடுத்தும் பெண்கள்..**

சேலை உடுத்தி செல்லும் பெண்கள், அதிக இறுக்கமாகவோ அல்லது தளர் வாகவோ சேலை கட்டக் கூடாது. இறுக்கமாக அணிந்தால் பயணத் தின்போது சுமூகமாக இருக்காது. தளர்வாக இருந்தால் காற்றினால் மேலும் தளரும்.

முந்தானையைச் சரியாக தோள்பட்டையில் 'ஊக்கு' கொண்டு பின் செய்து இருக்க வேண்டும். முந்தானை காற்றில் பறப்பதுபோல இருக்கக் கூடாது. இடுப்பில் சொருகப்பட்டு இருக்க வேண்டும். சேலை காற்றில் பறந்தவாறு இருந்தால் 'ரியர் வியூ' கண்ணாடியை மறைக்கும். எனவே கவனம் தேவை.

வழவழப்பு தன்மை கொண்ட சேலையை உடுத்தி பயணிப்பது ஆபத்தானது. ஏனெனில் திடீர் 'பிரேக்' போடும்போது அமர்ந்திருக்கும் நிலையில் இருந்து நழுவி வாகனம் கட்டுப்பாட்டை இழக்கும் ஆபத்து இருக்கிறது. இரவு நேரங்களில் பயணிக்க வேண்டிய நிலை இருந்தால் பளிச்சிடும் வண்ணம் கொண்ட சேலையை தேர்ந்தெடுங்கள். அது இரவில் ஒளியைப் பிரதிபலிப்பதால் பாதுகாப்பாக பயணிக்கலாம்.

**பின்னால் அமரும் பெண்களுக்கு!**

துணிமணிகள் சக்கரத்திற்குள் செல் லாமல் தடுக்கும் 'சாரி கார்ட்' இல்லாத பைக்கில் அமர்ந்து செல்வது பாதுகாப் பானது அல்ல. சேலை அணிந்திருந்தால் இரு பக்கமும் கால் வைத்து பின் சீட்டில் அமர முடியாது. ஒரு பக்கமாகத்தான் அமர முடியும். வண்டியை ஓட்டுகிறவர், பின் சீட்டில் அமர்ந்து செல்பவர் என இருவருக்குமே இதனால் பலன்ஸ் கிடைக்காது. எனவே கூடுமானவரை சேலை அணிவதை தவிர்க்கலாம்.

முந்தானை தொங்கியவாறு இருந்தால் பின் சக்கரத்தில் சிக்கிக் கொள்ளும் அபாயம் உண்டு. எனவே முந்தானையை இடுப்பில் சொருகிக் கொண்டு கவனமாக அமர வேண்டும். ஓட்டுனரின் இடுப்பைப் பிடித்தவாறு பயணிப்பதுதான் பாதுக ாப்பானது. தோள்பட்டையைப் பிடித்தால் ஓட்டுனருக்கு சமநிலை கிடைக்காது.

ஒரு பக்கமாக அமரும்போது கால்மீது கால்போட்டு அமருவது ஆபத்தானது. சவுகரியமாகவும் இருக்காது. வெயிலுக்காகத் தலைமீது சேலையைச் சுற்றியிருந்தால் அதைச் சரியாக பின் செய்து இருப்பது நல்லது.

**பைக் ஓட்டும் சுடிதார்களுக்கு!**

அதிக இறுக்கமாகவோ, அதிக தளர்வாகவோ சுடிதார் அணிவதைத் தவிருங்கள். இறுக்கமாக அணிந்தால் பயணம் சவுகரியமாக இருக்காது.

துப்பட்டா இரு தோள்பட்டையிலும் பின் செய்யப்பட்டு, முன்பக்கமாக முடிச்சு போட வேண்டும். பின்பக்கம் முடிச்சு போட்டுக் கொள்வது தவறு. முடிச்சு அவிழ்ந்து விட்டால் வாகனத்தை ஓட்டிக் கொண்டு சரி செய்ய முயற்சிப்பது தவறு.

துப்பட்டாவைக் குறுக்காக அணிபவர்கள் தோள்பட்டையில் பின் செய்து முடிச்சை பக்கவாட்டில் இல்லாமல் முன்பக்கம் இருக்குமாறு அணிவது நல்லது. முகத்தை மறைத்தோ அல்லது தலையை மூடியோ கழுத்தைச் சுற்றியவாறு துப்பட்டாவை போட்டிருந்தால் அதன் முனை எதிலாவது சிக்கினால் கழுத்து முறிந்து போகும் ஆபத்து இருக்கிறது.

**சுடிதார் அணிந்து பின்னால் இருப்பவர்கள்**

இரு பக்கமும் கால்போட்டு அமருங்கள். இது ஓட்டுநருக்கு வசதியானது மட்டுமல்ல, உங்களுக்கும் பாதுகாப்பானது. ஒரு பக்கமாக அமர்ந்தால் சேலை அணிந்து பயணிக்கும்போது உண்டாகும் ஆபத்துகள் அனைத்தும் இதிலும் உண்டு.

சில சமயம் பின் பக்க விளக்குகள், 'நம்பர் பிளேட்' போன்றவற்றை சுடிதாரின் பின்பகுதி மறைக்கும். அப்போது இண்டிகேட்டர், பிரேக் லைட் தெரியாததால் பின்னால் வரும் வாகனம் மோதிவிடும் ஆபத்து உண்டு. இரு கால்களையும் உங்களுக்கு உரிய புட் ரெஸ்ட்டில் வைத்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் ஓட்டுனருக்கு பாலன்ஸ் கிடைக்காது.


**பொதுவான கவனிக்க வேண்டியவை:**

பின்னால் அமர்ந்திருப்பவர்களும் ஓட்டுநரைப் போலவே ஹெல்மட் அணிவது பாதுகாப் பானது. தலை முடியை காற்றில் பறக்க விடக்கூடாது. நீண்ட கூந்தல் உள்ளவர்கள் கவனமாக வாகனம் ஓட்ட வேண்டும்.

கைக்குழந்தைகளை மடியிலோ, தோளி லோ தூக்கிச் செல்வதை தவிருங்கள். கைப்பை தோளில் மாட்டிச் செல்வதை தவிர்த்திடுங்கள்.



# நடைமுறையில் பிணைச் சட்டம்





எம்.ரமணன் LLB

இலங்கையின் சட்டமுறைமையில் குடியியல் சட்டம் குற்றவியல் சட்டம் என சட்டங்களை இரு பிரதான வகுதிகளாக பிரித்து நோக்க முடியும். குற்றவியல் சட்டத்தினைப் பொறுத்தவரையில் இலங்கையில் புரியப்படுகின்ற குற்றங்கள் அனைத்தும் அரசுக்கெதிராகப் புரியப்படுகின்ற குற்றங்களாகவே கருதப்பட்டு அரசின் சார்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தினாலும் பொலிஸ் அதிகாரிகளாலும் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டு குற்றம் நிரூபிக்கப்பட்டால் நீதிமன்றங்களால் குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்படும்.

இலங்கை அரசியல் யாப்பின் உறுப்புரை 13(5)ற்கு அமைவாக குற்றம் சாட்டப்பட்ட சந்தேகநபர் குற்றவாளியாக நீதிமன்றால் காணும்வரை அவர் சுற்றவாளியாகவே கருதப்பட வேண்டும் என்பதன் அடிப்படையில் கைது செய்யப்படும் சந்தேகநபர்களுக்கு நீதிமன்றங்களால் குறித்த வழக்கு முடியும்வரை பிணை வழங்கப்படுகின்றது.

1997ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 30ம் இலக்க பிணைச்சட்டத்தின் (Bail Act) அடிப்படையிலேயே பிணை சம்பந்தமான நடைமுறைகள் தற்போது பின்பற்றப்படுகின்றன. பிணைச் சட்டத்தின் பிரிவு 2 ஆனது பிணை வழங்கப்படுவது விதியாகும் (rule), பிணை மறுக்கப்படுவது விதிவிலக்கான சந்தர்ப்பத்திலாகும் எனக் குறிப்பிடுகின்றது. இது J Ediriveera Vs Attorney general என்ற மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்கில் தெளிவாகப் பொருள் கோடல் செய்யப்பட்டது. இவ்வாறு பிணைவழங்கல் விதி எனக் குறிப்பிடப்பட்டாலும் பிணைச் சட்டத்தின் பிரிவு 4 பிணைச் சட்டம் தவிர்ந்த ஏதாவது வேறு சட்டங்கள் பிணை சம்மந்தமாக ஏதாவது விசேட ஏற்பாடுகளைக் கொண்டிருந்தால் இப் பிணைச் சட்டம் ஏற்புடைத்தாகாது எனக் கூறுகின்றது. அவ்வாறான விசேட சட்டங்களின் கீழ் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களுக்கு அதன் கீழ் உள்ள விசேட ஏற்பாடுகளின் பிரகாரமே பிணை வழங்கப்படவோ அல்லது மறுக்கப்படவோ முடியும் என vd ThilangaSumathypala Vs Attorney General என்ற வழக்கில் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. உதாரணமாக இலங்கையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்படும் எந்தவொரு சந்தேகநபருக்கும் வழக்கு முடிவடையும் வரை பிணையில் விடுவிக்கப்பட முடியாது என பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பிரிவு 19 குறிப்பிடுகின்றது. இதனால் இச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்படும் சந்தேகநபர்களுக்கு இப் பிணைச்சட்டம் ஏற்புடைத்தாகாது.

பிணைச்சட்டத்தின் பிரிவு 16ன் பிரகாரம் எந்தச் சந்தேகநபரும் பன்னிரண்டு மாதங்களுக்கு மேல் தடுத்துவைத்திருக்கப்பட முடியாது. இருப்பினும் சட்டமா அதிபரின் விண்ணப்பத்தின் பேரில் மேல் நீதிமன்றம் சந்தேகநபரை மேலும் பன்னிரண்டு மாதங்களுக்கு தடுத்து வைத்திருக்க உத்தரவிட முடியும்.

பொதுவாக நீதிமன்றுகளால் வழங்கப்படும் பிணையை இரண்டாக நோக்க முடியும்.

1) கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களுக்கு வழங்கப்படும் பிணை (Ordinary Bail)
2) முற் பிணை (Anticipatory Bail)



**கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களுக்கு வழங்கப்படும் பிணை** (Ordinary Bail)

சந்தேகத்தின் பெயரில் கைதுசெய்யப்படும் நபர் பொலிஸாரால் எந்தக் குற்றச்சாட்டின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்பதைப் பொறுத்து அவரின் பிணை தீர்மானிக்கப்படும். இலங்கை தண்டனைச் சட்டக்கோவையின் படி குற்றங்களினை இரண்டாகப் பிரிக்கமுடியும்.

1) பிணை வழங்கக்கூடிய குற்றங்கள் (Bailable Offences)
2) பிணை வழங்கமுடியாத குற்றங்கள் (Non bailable offences)

பிணை வழங்கக்கூடிய குற்றங்கள் என்பது மூன்று வருடங்களுக்கு மேற்படாத சிறைத் தண்டனை அல்லது ரூபா 1000/=ற்கு மேற்படாத தண்டப்பணம் அல்லது இரண்டும் விதிக்கப்படக் கூடிய குற்றங்களைக் குறிக்கும். இக் குற்றங்களுக்கு பிணை மறுக்கப்படல் கூடாது. பிணைச் சட்டத்தின் பிரிவு 6ன் பிரகாரம் பிணை வழங்கக்கூடிய குற்றங்களுக்கு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியே பிணை வழங்க முடியும். அவ்வாறு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியினால் பிணை வழங்கப்படும்போது குறித்த திகதியில் நீதவான் நீதிமன்றில் பிரசன்னமாவேன் என்ற எழுத்துமூல உத்தரவாதம் சந்தேகநபரிடம் இருந்து பெறப்படும். அவ்வாறு குறிப்பிட்ட திகதியில் சந்தேகநபர் செய்யத் தவறினால் குற்றவாளியாகக் கருதப்பட்டு ஆறு மாதத்துக்கு மேற்படாத சிறைத் தண்டனை அல்லது ரூபா 1000/=ற்கு மேற்படாத தண்டப்பணம் அல்லது இரண்டும் விதிக்கப்படும். பிணை வழங்கக்கூடிய குற்றங்களுக்கு பொலிஸ் நிலையத்தில் பிணை மறுக்கப்படின் 24 மணிநேரத்தினுள் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தும்போது அங்கு பிணை வழங்கப்படும்.

**பொலிசாரினால் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்படுவேன் என உறுதியாக நம்பினால் தனது வசிப்பிட நியாயாதிக்கம் கொண்ட நீதவான் நீதிமன்றில் முற் பிணையினைப் பெற்றுக்கொள்ள முடியும்.**

பிணை வழங்க முடியாத குற்றங்களின் கீழ் கைது செய்யப்படும் சந்தேகநபர்களுக்கு பிணை வழங்கப்பட முடியாது என்பது கருத்தல்ல. மாறாக நீதிமன்றம் தனது தற்துணிவின் பெயரிலே பிணை வழங்கவோ அல்லது மறுக்கவோ முடியும். நீதவான் நீதிமன்றங்களில் பிணை மறுக்கப்படும்போது மேல் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்வதன் மூலம் பிணை பெற முயற்சி செய்யமுடியும்.

இருப்பினும் பிணைச்சட்டத்தின் பிரிவு 14ன் படி பிணை வழங்கக்கூடிய குற்றங்களாயினும் சரி, பிணை வழங்க முடியாத குற்றங்களாயினும் சரி நடைமுறையில் பின்வரும் காரணங்களுக்காக பிணை மறுக்கப்படுகின்றது.

அ) குறித்தசந்தேகநபர்

1) அவரது விசாரணைக்கு அல்லது

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

19-ம் பக்கம் தொடர்ச்சி...

இதுதான் பேச்சின் சாரம். முதல்வரிற்கு எதிரான நடவடிக்கையை நிறுத்த சொல்லி தமிழரசுக்கட்சி தலைமைக்கு உடனடியாக அறிவிப்பதாக சம்பந்தர் சொன்னார்.

இதன்பின்னர்தான் அதிர்ச்சிகரமான இன்னொரு திருப்பம் நடந்தது. சம்பந்தரின் அபிப்பிராயத்தை மாவை சேனாதிராசா விரும்பவில்லை. முதல்வரிற்கு எதிரான நடவடிக்கையை எடுத்தே தீரவேண்டுமென விடாப்பிடியாக நின்றார். சீ.வீ.கே. சிவஞானமும் இதேநிலைப்பாட்டில் இருந்தார். கிடைத்த வாய்ப்பை பயன்படுத்தி, முதல்வரை அகற்றிவிட விரும்பினார்.


மாவையுடன் கதைத்து பலனில்லாத பின்னர், மதியத்திற்கு பின்னர் சிவஞானம், சத்தியலிங்கத்துடனும் சம்பந்தர் தொலைபேசியில் பேசி, நிலைமையை சிக்கலாக்ககூடாதென கூறியுள்ளார். சம்பந்தர் பேசிய பின்னர், சத்தியலிங்கம் தமிழரசுக்கட்சியின் நிலைப்பாடு அவசரகதியானது என உணரத் தொடங்கினார்.

ஆனால், மார்ட்டின் வீதியில் சிவஞானம் தலைமையில் விக்னேஸ்வரனிற்கு எதிரான முயற்சிகள் தீவிரமாக நடந்து கொண்டிருந்தன. எதிர்க்கட்சி (அரச கட்சிகள்) உறுப்பினர்களுடன் அவர் தொடர்ந்து பேசி ஆதரவு திரட்டிக் கொண்டிருந்தார்.

இதற்கிடையில், சமூகவலைத்தளங்களின் ஊடாக முதல்வரிற்கு ஆதரவாக எழுந்த கருத்துக்களையடுத்து கைதடியிலுள்ள மாகாணசபை கட்டிடத் தொகுதிக்கு முன்பாக திரண்ட பெருமளவு இளைஞர்கள் முதல்வரிற்கு ஆதரவாக கோசம் எழுப்பினர். பின்னர் அங்கிருந்து கோவில் வீதியிலுள்ள முதல்வர் வீட்டுக்கு வந்தனர். தனக்கு ஆதரவாக இப்படியொரு அலையிருப்பதை மதியத்தின் பின்னர்தான் முதல்வர் புரிந்து கொண்டார். அதுவரை என்ன செய்வதென தெரியாமல் தத்தளித்து கொண்டிருந்த முதல்வர், உற்சாகமாக களமிறங்கியது இதன் பின்னர்தான்.

சம்பந்தனின் கையை விட்டு போன தமிழரசுக்கட்சி

இந்த இழுபறியில் மாலையாகிக் கொண்டிருக்கும்போது, புளொட் தலைவர் சித்தார்த்தனிற்கு மீண்டும் அழைப்பேற்படுத்தினார் சம்பந்தன். சம்பந்தனின் சமரச முயற்சிகளை தமிழரசுக்கட்சி அவ்வளவாக விரும்பவில்லையென்ற சாரப்பட சம்பந்தன் பேசினார். மாவை, சிவஞானம், சத்தியலிங்கத்துடன் பேசியதை குறிப்பிட்ட சம்பந்தன், அவர்களுடன் சித்தார்த்தனையும் பேசுமாறு கேட்டுக்கொண்டார். எனினும், சித்தார்த்தனின் தொலைபேசி அழைப்பை மாவை ஏற்கவில்லை.



அதற்கு காரணமிருந்தது. நம்பிக்கையில்லா பிரேரணையில் தனது சொல்லையேற்று புளொட் கையெழுத்திடும் என அவர் எதிர்பார்த்திருந்தார். அது நடக்கவில்லை. மாகாணசபை உறுப்பினர் கஜதீபனை கையெழுத்திடுமாறு கடுமையான அழுத்தங்கள் கொடுத்து பார்த்தார். இறுதிவரை அவர் கையெழுத்திடவில்லை.

இதற்கிடையில் சம்பந்தனின் சமரசத்தை தமிழரசுக்கட்சி ஏற்கவில்லையென்ற தகவல் தமிழரசுக்கட்சியின் மாகாண சபை உறுப்பினர்களிற்கு கிடைத்தது. சம்பந்தன் தொலைபேசியில் பேசியதையே தலைவர்கள் மறைத்த விடயம் உறுப்பினர்களிற்கு தெரிந்தது. இதனையடுத்து இரண்டு மாகாணசபை உறுப்பினர்கள் முதல்வரிற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையிலிருந்து விலகிக்கொள்ளும் முடிவிற்கு வந்தனர். மாகாணசபை உறுப்பினர் பதவிகளிலிருந்து விலகிக்கொள்வது பற்றியும் அவர்கள் ஆலோசனையில் ஈடுபட்டனர்.

சீ.வீ.கே.சிவஞானம் போன்ற சிலரின் விருப்புகளிற்காக இந்த மோதல் வளர்கிறதென்ற அபிப்பிராயம் தமிழரசுக்கட்சியின் சில உறுப்பினர்களிடம் ஏற்பட தொடங்கியது.

இந்த குழப்பத்தை உடனடியாக தீர்க்க வேண்டுமென்ற எண்ணம் எல்லா தரப்பிற்கும் 15ம் திகதி மாலையே ஏற்பட்டு விட்டது. பொதுமக்களின் எழுச்சி, அரசபங்காளிகளுடன் இணைந்து ஆட்சிகவிழ்ப்பால் ஏற்படப்போகும் வரலாற்று கறை எல்லாம் சேர தமிழரசுக்கட்சியினரை பதட்டப்படுத்தியது. முதலமைச்சர் பதவி இல்லாவிட்டால் என்ன செய்வதென தெரியாத திண்டாட்டம் விக்கிக்கு. முதலமைச்சர் பதவி இல்லாவிட்டால் அவர் வீட்டுக்கு போய்விடுவார், அதன்பின் தமிழ் மக்கள் பேரவை படுத்துவிடும் என்பது விக்கியின் இன்னொரு தரப்பு ஆதரவாளர்களின் கவலை.

16ம் திகதி காலை மாவை சேனாதிராஜாவிடம் முதல்வரின் தகவல் பகிரப்பட்டது. விசாரணையில் தலையிட மாட்டோம் என்ற உத்தரவாத கடிதம்தான் தமிழரசுக்கட்சிக்கு பிரச்சனையாக இருந்தது.

மாலையில் தமிழரசுக்கட்சியின் நிலைப்பாடு முதல்வரிடம் தெரிவிக்கப்பட்டது. இதற்குள் பகலில் நடந்த ஹர்த்தால், இளைஞர்களின் ஆர்ப்பாட்டம் முதல்வரின் நம்பிக்கையை அதிகரிக்க செய்திருக்கிறது. சமரசப் பேச்சிற்கு சென்றவர்களிடம் முதல்வர் அவ்வளவாக பிடிகொடுத்து பேசவில்லை. விசாரணையில் தமிழரசுக்கட்சி தலையிடாது, பதவியிலிருந்து ஒதுங்கியிருக்க சொன்ன அமைச்சர்களை மீள நியமிக்குமாறு கோரிக்கை கடிதம் சம்பந்தன் தரவேண்டுமென்ற கறாரான நிபந்தனை விதித்துள்ளார்.

இதன்பின்னர் வடக்கு எதிர்க்கட்சி தலைவர் தவராசாவும் இரவு சென்று சில சமரச பேச்சுக்களில் ஈடுபட்டார். முதல்வர் சில விடயங்களில் விட்டுக் கொடுக்கலாம் என அவரும் வலியுறுத்தி கேட்டுக்கொண்டார். இந்த பத்தி எழுதப்பட்டுக் கொண்டிருக்கும் வரை சமரச முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. ●

---

விளக்கத்திற்கு பிரசன்னமாகமாட்டார்

2) சாட்சிக்காரர்களிடம் அல்லது அவருக்கு எதிரான சாட்சியத்தில் தலையீடு செய்ய அல்லது வேறு ஏதேனும் நீதிக்கு பங்கம் விளைவிப்பார்
3) பிணையில் உள்ளபோது குற்றம் செய்வார்

ஆ) குறித்த குற்றத்துக்கு பிணை அனுமதிப்பதன் விளைவாக அது பொதுமக்களிடையே அமைதியின்மையை ஏற்படுத்தும்

மேற்போந்த விடயங்கள் நீதிமன்றின் தற்துணிவுக்கு உட்பட்டது. ஊயசனநச Carder (On behalf of Rashid haran) V Office In charge Narcotics Bureau) என்ற வழக்கில் சந்தேகநபர் பிணையில் விடுவிக்கப்படும் போது நீதிபதிகளால் பின்வரும் விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும் எனக் கூறப்பட்டது.

1) குற்றச்சாட்டின் தன்மை
2) குற்றச்சாட்டு சம்மந்தமான சாட்சியம்
3) தண்டனையின் கடுமைத் தன்மை
4) சந்தேகநபர் தலைமறைவாவதற்க்கான தன்மை
5) சந்தேகநபரின் இயல்பு
6) குறித்த குற்றம் மீள நிகழ்ந்தால் அதனால் ஏற்படும் அபாயம்
7) பொதுமக்களின் பாரிய அக்கறை
8) வழக்குதொடுனர் மற்றும் எதிரி தரப்புசாட்சியம் குழப்பப்படுவதற்க்கான சந்தர்ப்பம்

பொதுவாக பாரதூரமான கற்பழிப்பு, கொலை, சிறுவர் பாலியல் துஸ்பிரயோகம் போன்ற குற்றங்களுக்கு நீதிமன்றங்களால் பிணை மறுக்கப்படுகின்றது. நீதிமன்றங்களினால் சந்தேகநபர்களுக்கு காசுப் பிணை (cash bail), சரீரப் பிணை ((Surety bail), தனிப்பட்ட பிணை (Personal Bail), ஆவணப் பிணை (Certified Bail) என்ற பல அடிப்படையில் குற்றத்தின் தன்மைக்கு ஏற்ப பிணை வழங்கப்படுகின்றது.

குற்றம்சாட்டப்பட்ட சந்தேகநபர் வேறு ஒரு குற்றத்திற்க்காக விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்தால் அவருக்கு குறித்த வழக்கில் பிணை வழங்க முடியாது என்பதுடன் பிணைச்சட்டம் பிரிவு 13ன் படி மரணதண்டனை, ஆயுள் தண்டனை விதிக்கப்படக் கூடிய குற்றங்களுக்காக கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களுக்கு மேல் நீதிமன்ற நீதிபதியினாலேயே பிணை வழங்கவோ அல்லது மறுக்கவோ முடியும். மேலும் பிணைச் சட்டத்தின் பிரிவு 19(2)ன் பிரகாரம் சந்தேகநபர் நீதவான் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டால் குற்றவாளி மேன்முறையீடு செய்து தீர்ப்பு பெறுவதற்கிடையில் குற்றத்தின் தன்மையைப் பொறுத்து நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட முடியும். அத்துடன் பிணைச்சட்டம் பிரிவு 20ன் பிரகாரம் மேல் நீதிமன்றினால் குற்றவாளியாகக் காணப்படும் ஒருவர் மேன்முறையீடு செய்து தீர்ப்பு பெறுவதற்கிடையில் குற்றத்தின் தன்மையைப் பொறுத்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட முடியும். இருப்பினும் மேல் நீதிமன்றினால் மரணதண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளி மேன்முறையீட்டில் சுற்றவாளி என தீர்ப்பளிக்கப்படும் வரை பிணையில் விடுவிக்கப்படமாட்டார்.

**முற் பிணை** (Anticipatory Bail)

பிணை வழங்கலில் மற்றுமொரு விடயமாகக் காணப்படும் முற் பிணை (Anticipatory Bail) என்பது பிணைச் சட்டத்தின் பிரிவு 21ற்கு அமைவாக இந்தியாவின் பிணைச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது. யாராவது ஒரு நபர் தான் குறித்த பிணை வழங்கப்பட முடியாத குற்றத்துக்காகப் பொலிசாரினால் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்படுவேன் என உறுதியாக நம்பினால் தனது வசிப்பிட நியாயாதிக்கம் கொண்ட நீதவான் நீதிமன்றில் முற் பிணையினைப் பெற்றுக்கொள்ள முடியும்.


நீதவான் நீதிமன்றம் இப்பிணை தொடர்பான விசாரணைக்காக முறைப்பாட்டாளர் மற்றும் குறித்த குற்றம் நடந்ததாகக் கூறப்படும் நியாயாதிக்கம் உள்ள பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகிய இருவரையும் விசாரித்து ஏழு நாட்களுக்குள் பிணை வழங்கவோ அல்லது நிராகரிக்கவோ முடியும். நீதவான் நீதிமன்றம் முற்பிணை வழங்கும்போது குறித்த பிணையினைப் பெற்றுக் கொள்பவர் வெளிநாடு செல்ல அனுமதிக்கக்கூடாது எனக் கருதினால் அவரின் கடவுச்சீட்டையும் கைப்பற்றி அது தொடர்பில் குடிவரவு குடியகல்வு திணைக்களத்துக்கு தெரிவிக்க முடியும்.

குறித்த நபர் முற்பிணையைப் பெற்றுக் கொண்ட பின் பிணைச் சட்டம் பிரிவு 23ற்கு அமைவாக பின்வரும் நிபந்தனைகளுக்கு கட்டுப்படல் வேண்டும்.

1) காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை பொலிஸ் விசாரணைக்கு எந்த நேரத்திலும் அழைத்தவுடன் சமூகம் தர வேண்டும்.
2) நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ குறித்த வழக்குடன் தொடர்புபட்ட நபர்களுக்கு எந்தவித அச்சுறுத்தல்களையோ தூண்டுதல்களையோ மேற்க்கொள்ளக் கூடாது.
3) ஆதாரங்களை தகர்க்கும் முயற்சியில் ஈடுபடக்கூடாது.

முற்பிணை வழங்கப்பட்டமையானது பொலிஸ் அதிகாரி தனது கடமையினை மேற்கொள்வதனையோ அல்லது குறித்த குற்றத்துக்கு எதிராக பிடியாணைக்கு விண்ணப்பிப்பதையோ தடைசெய்துவிட முடியாது.

இலங்கையில் பிணைச் சட்டம் 1997ம் ஆண்டு பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டமையைத் தொடர்ந்து நீதிமன்றங்களால் பிணை வழங்கல் என்பது அடிப்படை உரிமைகள் தனிமனிதசுதந்திரம் போன்ற விடயங்களோடு இணைத்துப் பார்க்கப்பட்டாலும் குற்றச் செயல்கள் தொடர்பில் பிணைவழங்கும்போது முனைப்புடன் செயற்பட வேண்டியது அவசியமானது என்பதுடன் சாதாரண பொதுமக்கள் தாம் சந்தேகத்தின் பெயரில் கைதுசெய்யப்படும்போது எவ்வாறான உரிமைகள் தமக்கு உண்டு மற்றும் எத்தகைய நடைமுறைகளைத் தாம் பின்பற்றவேண்டும் என்ற பிணை வழங்கல் தொடர்பான அடிப்படை சட்ட அறிவினை பெற்றுக் கொள்ளல் அவசியமாகும். ●



# சீ.வீ.கே.சிவஞானம்: இந்த பனம்பழத்தை சுமப்பாரா?

பரமார்த்தகுரு

1987ஆம் ஆண்டு. இந்திய இலங்கை உடன்பாடு எட்டப்பட்ட பின்னர், வடக்கு கிழக்கு மாகாணத்திற்கான இடைக்கால நிர்வாகசபை அமைக்க முயற்சிக்கப்பட்டது. அப்போது யாரை பழரதம நிர்வாக அதிகாரியாக நியமிப்பதென்ற சிக்கல் ஏற்பட்டது. அப்போதைய ஜே.ஆர் அரசு, புலிகள் இரண்டு தரப்புக்கும் இணக்கமான ஒருவரையே முதல்வராக நியமிக்க வேண்டும்.


புலிகளின் முதல்தெரிவு செ.பத்மநாதன்.

இந்திய இலங்கை உடன்பாட்டை குழப்ப வேண்டுமென ஆரம்பத்திலிருந்தே சகுனி வேலை பார்த்த ஜே.ஆர், வேறொருவரை நியமித்து குழப்பத்தை ஏற்படுத்த திட்டமிட்டார். அந்த நியமனம் பிரபாகரனை கோபமடைய வைத்தது. இதனால் எழுந்த குழப்பங்கள் பல. அதன்பின்னர் அந்த தீர்வு முயற்சியும் கைகூடவுவில்லை.

ஜே.ஆரின் அன்றைய தெரிவு சி.வி.கே. சிவஞானம்.

ஜே.ஆரின் அன்றைய தெரிவையே இன்று தமிழரசுக்கட்சியும் செய்துள்ளது. இதை காலமாற்றம் என்பதா, வரலாற்றின் முரண்நகை என்பதா என்று தெரியவில்லை. புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய போரும் சமாதானமும் நூலில் 1987ஆம் ஆண்டு குழப்பங்களை விலாவாரியாக பதிவுசெய்துள்ளார்.

சிவஞானம் இன்னும் முதல்வர் ஆகவில்லை. ஆனால், தமிழரசுக்கட்சியின் முதல்வர் வேட்பாளர் அவர்தான். முதல்வர் கதிரைக்காக எத்தனையோ முயற்சிகள் செய்தவரிற்கு, முப்பது வருடங்களின்



பின் இப்பொழுது மீண்டுமொரு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இம்முறை வாய்ப்பை தவறவிட்டு விடக்கூடாதென அவரும் நினைக்கிறார். கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவும் அவரை ஆதரிக்கிறார்.

இன்றைய தமிழரசுக்கட்சி மாகாணசபை உறுப்பினர்களில் அரசியல் ஆளுமை, அனுபவம், தலைமைப்பண்பு மிக்கவர்கள் என்று பார்த்தால் யாருமே தேற மாட்டார்கள். இன்றைய இலங்கை அரசியலில் ஆகட்டும், தமிழ் அரசியலில் ஆகட்டும் அந்த பண்புகளை கணக்கிட்டு யாருக்கும் வேட்பாளர் நியமனம் வழங்கப்படுவதில்லை. எப்படி நியமனம் வழங்குகிறார்கள் என்பதை எழுதினால் சந்தி சிரிக்கும். படித்த, கௌரவமான தொழில் பார்த்த, பணமுள்ள, ஊரில் அறியப்பட்ட, எப்பொழுதும் காலடியில் நிற்பார் என நம்புபவர்களிற்குத்தான் வேட்பாளர் நியமனம் வழங்கப்படும். இந்த தகுதிகளை பார்க்க, ஏதோ மணமகன் தேவை விளம்பரத்தை படித்தது போலிருக்கிறதல்லவா? அதுதான் இன்றைய வேட்பாளர் தேர்வுமுறை. எல்லா கட்சிகளும் இப்படித்தான் தேர்வு செய்கின்றன. தமிழரசுக்கட்சியின் பெரும்பாலான மாகாணசபை வேட்பாளர்களும் மாப்பிள்ளை தேவை விளம்பரத்தை ஒத்தவர்கள்தான். இதனால் இப்பொழுது சிவஞானத்திற்கு, ஒரே நாள்ஞ் ஓகோவென்ற வாழ்க்கையென திடீர் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

தமிழரசுக்கட்சியின் நீண்டகால உறுப்பினராக இருந்த சிவஞானத்தால் கட்சியின் உயர்மட்டத்திற்கு மேலெழ முடியவில்லை. கடந்த பல தேர்தல்களில் தலைகீழாக நின்று முயன்றபோதும், பாராளுமன்றத்திற்குள் அவரால் நுழைய முடியவில்லை. இனி உள்ளூராட்சிமன்ற பிரதிநிதித்துவத்துடன் திருப்திப்பட்டு கொள்ள வேண்டியதுதான் என்ற நிலைக்கு அவர் வந்தபோது, வடமாகாணசபை தேர்தல் வந்தது. வடமாகாணசபை முதல்வர் கனவுடன் பந்தயத்தில் குதித்தவர்கள் அனேகர். சிவஞானமும் அதில் ஒருவர். இன்றுள்ள தமிழ் தேசியகூட்டமைப்பு அரசியல்வாதிகளில் நிர்வாக அறிவு கூடியவர், மூப்பானவர் என்பதை தனது தகுதியாக அவர் கருதுகிறார். பந்தயத்தில் குதித்த பின்னர்தான் மாவை போன்ற சுறாக்களும் போட்டியிலிருப்பதை பார்த்தார். சுறாக்களின் போட்டியில் சிறிய மீன்களிற்கு இடமில்லையல்லவா!

வடமாகாணசபை அமைக்கப்பட்ட பின்னர் பதவிகள் பகிர்ந்தளிப்பில் இறுதிவரை முக்கிய அமைச்சு ஒன்றிற்காக மல்லுக்கட்டினார். மாகாண முதல்வர் கனவுடன் பந்தயத்திற்குள் குதித்தவரிற்கு அமைச்சு பதவியும் கிடைக்கவில்லையென்பதால் கடைசிவரை இழுபறியை ஏற்படுத்தினார். தமிழரசு கட்சி இரண்டு அமைச்சர்களையும், ரெலோ மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ் இரண்டு அமைச்சுக்களை எடுப்பதென்றும், புளொட்டிற்கு அவைத்தலைவர் பதவியென்பதும் சம்பந்தரின் கணக்கு. புளொட் அவைத்தலைவர் பதவியை எடுக்கவில்லை. அமைச்சு பதவிக்கு மல்லுக்கட்டிக் கொண்டிருந்த சிவஞானம் அவைத் தலைவராக்கப்பட்டார்.

வடக்கு மாகாணசபைக்குள் ஏற்பட்ட இன்றைய குழப்பத்திற்கு அவைத்தலைவரும் ஒருவிதத்தில் பொறுப்பானவர்தான். அவைத்தலைவர் என்பவர், அரசியல் முதிர்ச்சி மற்றும் பரந்த மனமுடையவராக இருந்திருக்க வேண்டும். கட்சி அரசியலை கடந்திருக்க வேண்டும். குறைந்தபட்சம் அப்படியாக காட்டிக்கொண்டாவது இருந்திருக்க வேண்டும். ஆனால் சிவஞானம் தமிழரசுக்கட்சிக்காரராகவே செயற்பட்டார்.

ஒருகாலத்தில் எதிர்க்கட்சிகளை மாகாணசபைக்குள் கடிவாளமிட தனது அவைத்தலைவர் பதவியை உபயோகித்தார். தற்போதைய எதிர்க்கட்சி தலைவர் தவராசா பதவியேற்ற புதிதிலும் இந்த நிலைமைதான் இருந்தது. பின்னர், எதிர்க்கட்சி தலைவர் தமிழரசுக்கட்சியுடன் கொஞ்சம் நெருக்கமானதாக தோன்ற தொடங்கிய பின்னர்தான், அவர் விடயத்தில் சிவஞானத்தின் போக்கு மாறியது.

ஆனால் சிவஞானத்தின் கடிவாளம் முதலமைச்சர் ஆதரவாளர்களின் கழுத்தில் விழுந்துவிட்டது. முதலமைச்சரிற்கு எதிராக மாகாணசபைக்குள் நடந்த குழப்பங்களிற்கு அவைத்தலைவரும் துணைபோனார் என சந்தேகிக்கப்படத்தக்க சம்பவங்கள் நடந்தன. முதல்வர் அணி, அவரிற்கு எதிரணியென்றபிளவின்போது சிவஞானம் ஒரு கட்சிக்காரராகத்தான் நடந்து கொண்டார். அவர் இன்னும் வெளிப்படை தன்மையுடன் நடந்து கொண்டிருந்தால், வரலாறு இந்த வடமாகாணசபையை காறி உமிழ்ந்திருக்காது. இன்றைய வடமாகாணசபை சீரழிவிற்கு வரலாறு மூவரைத்தான் குறைசொல்லும். ஒன்று, இன்றைய முதல்வரை தேர்வு செய்த சம்பந்தனை. இரண்டு, இன்றைய முதல்வரை. மூன்று, அவைத்தலைவரை.

கட்சி நலன்களிற்கு அப்பால், வடமாகாணசபையை பொறுப்புடன் நகர்த்த வேண்டும் என்ற தேசிய நலனை சிவஞானம் கருத்தில் கொண்டிருக்க வேண்டும். அவர் அதை செய்யவில்லை. தோல்வியடைந்த அமைப்பின் பங்காளியொருவரிற்கு மீண்டும் அதே அமைப்பின் தலைமை பதவி கொடுக்க தமிழரசுக்கட்சி முடிவு செய்திருக்கிறது. இது மிக தவறான முடிவு. அரசியல் ஏட்டிக்குப்போட்டி தன்மையால் எடுக்கப்பட்ட முடிவிது.

சீ.வீ.கே.சிவஞானத்தின் மீது எதிர்ப்பாளர்கள் காலம்காலமாக சுமத்திவரும் சில குற்றச்சாட்டுக்களும் உள்ளன. கூட்டுறவுத்துறையில் ஏற்பட்ட குழப்பங்கள், பிரமுக வங்கி தொடர்பான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருகின்றன. அவை பற்றிய முறையான விசாரணை நடத்தப்பட்டு, குற்றவாளிகளிகள் சுட்டிக்காட்டப்படவில்லை. ஆனாலும், ஒரு உயரிய மக்கள் மன்றத்தை தலைமை தாங்குபவர், தன்னைத்தானே தீக்குளித்துக்கொள்ள வேண்டும். கறைகளை அகற்றிக்கொள்வது தார்மீக பொறுப்புணர்வு. இது நடக்கவில்லை.

ஊழல் குற்றச்சாட்டு விவகாரத்தில் வடக்கு மாகாணசபை இந்த சிக்கலை சந்தித்திருக்கிறது. அதை மாற்றீடு செய்யும்போது, அதேவிதமான எதிர்பிரசாரங்கள் வருவதை தடுக்க வேண்டிய பொறுப்பு தமிழரசுக்கட்சி தலைமையினது. அதை அவர்கள் செய்ய வேண்டும்.

நீண்ட அரசியல் அனுபவமிருந்தபோதும், ஒரு ஆளுமையான தலைவராக சிவஞானம் மேலெழாதவர். ஒரு அதிர்ஸ்ட லாபத்தை போல முதல்வர் பதவி வாய்ப்பு இப்பொழுது அவருக்கு கிடைத்துள்ளது. விக்னேஸ்வரனை போல தலைமைக்கு கையைப்பிடித்து அழைத்து வந்தால், என்ன சிக்கல் ஏற்படுமென்பதை அறிந்து வைத்திருக்கிறோம். இந்த அனுபவத்தின் பின்னரும், இன்னொருவரை எதற்கு கையை பிடித்து அழைத்து வர வேண்டும்?

சிவஞானத்தின் எழுச்சி தன்னெழுச்சியானதல்ல. அவரால் ஒரு கட்டத்திற்கு மேல் மேலெழ முடியவில்லை. அப்படியானவரால் வடமாகாணசபையை நிர்வகிக்க முடியுமா? வடமாகாணசபை தனியே ஒரு நிர்வாக அலகு மட்டுமல்ல. இனப்பிரச்சனையின் முழுமையான அர்த்தத்தை புரிந்து கொண்டால், வடமாகாணசபையின் வகிபாகம் புரிந்து கொள்ளக்கூடியது. அதன் தலைமைப் பதவியில் சீ.வீ.கேயை வைத்து பார்ப்பது, காகத்தின் தலையில் பனம்பழத்தை வைத்ததை போலிருக்காதா?

# Mathura Beauty Care



- ✓ திருமண பெண் அலங்காரம்
- ✓ பூப்புனித நீராடுவிழா அலங்காரம்
- ✓ ஏனைய விழாக்களுக்கான அலங்காரம்
- ✓ பேசியல்
- ✓ அனைத்து வகையான தலை ஒப்பனை.
- ✓ அனைத்து வகையான தலை முடிவெட்டுதல்
- ✓ கண் இமை சேப் செய்தல்
- ✓ அனைத்து வகையான கேக் ஐசிங்க்கள்

அழகுக்கலை டிப்ளமோ கோர்ஸ், அட்வான்ஸ் டிப்ளமோ கோர்ஸ், கேக் ஐசிங், தையல், ஆரிவேர்க், ஹான்ட் வேர்க்...ஆகிய பயிற்சிகளும் மணப்பெண் அலங்காரம் கேக் ஐசிங், தையல் பேசியல், ஹெயார் ரெஷ்ஸிங், ரிசப்ஸன் மேக்கப், திரெட்டிங், பெடிகியூர்,மெனிக்கியூர், வக்ஸிங், மெகந்தி டிசைனிங், ஆகிய ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும் மகளிர் மட்டும்.

779362642

பருத்தித்துறை வீதி இருபாலைசந்தி கோப்பாய்


# 1ம் ஆண்டு நினைவு நாள்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 23 |  | 28 |
| 03 | | 06 |
| 1943 | | 1916 |

**திதி 18.06.2017**

## அமரர் சின்னையா செல்வராசா. (செல்வம்)

எமது குடும்பத்தின் குலவிளக்கு அணைந்து ஓராண்டு நிறைவை முன்னிட்டு அன்னாரது இல்லத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நாவலடி
அரியாலை

குடும்பத்தினர்
தொ.இல : 0772193707


# நல்லூர் கந்தன் திருமண சேவை



எல்லா மதம், எல்லா இனம், வெளிநாடு, உள்நாடு ஆகிய சகல திருமணங்களும் எம்மால் செய்து கொடுக்கப்படும்.

இல 303, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
வி.ஜெயந்தி தொலைபேசி 077 9733183, 021 227 1468





# Nivithra beauty parlour & Training academy

இலவச அழகு கலைப் பயிற்சி
(நிபந்தனைகளிற்குட்பட்டது)

நிவித்ரா அழகுக் கலைப் பயிற்சி நிலையத்தின் புதிய இலவச அழகுக் கலை வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

- Certificate in Cake icing course
- Certificate in Beauty Therapy
- Certificate in cooking

என மூன்று பிரிவுகளாக வகுப்புக்கள் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சியில் இணைய விரும்புவோர் 25.06.2017 திகதிக்கு முன்னதாக பதிவுகளை மேற்கொள்ளவும்

பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

**340 K.K.S Road, Jaffna**
**Telephone 0777 712604**



# MORA ENGINEERS & BUILDERS

யாழ் மண்ணின் அதி உன்னத மற்றும் முதல் தர கட்டடக்கலை நிபுணர்.

நியாயமான கட்டணத்தில் அதி துரித மற்றும் அதி உயர் தர சேவை

- House plan and modern houses
- Building consultancy
- Bridge construction
- Architectural designs
- Interior design
- Road construction
- Cladding works
- Renovation works and building repairnig
- Molding works
- Landscaping
- Aluminium works
- Bank B.O.Q
- Building estimate



அனுபவம் வாய்ந்த கட்டிட தொழில் துறை வல்லுனர்களால் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய மிக விரைவான சேவை

No 15, vempolai, inuvil east, inuvil chunnagam.
Phone number : 077 958 2315, 021 373 4022



# HOME DECOR

உங்கள் வீடுகள், அலுவலகங்கள் என்பவற்றுக்கான அதி உயர் தர மற்றும் மிகவும் அழகான கேட்டின் வகைகள், சோபா உறைகள் மிக குறுகிய காலத்தில் தைத்து பெற்றுகொள்ள இன்றே நாடுங்கள்.



தற்போது புதிதாக விரிவுபடுத்தப்பட்ட அலுவலகம் ஊடக எமது உயர் தர சேவையினை உங்களுக்கு வழங்குகிறோம்.

எமது அலுவலகத்துக்கு வருகை தந்து எமது டிசைன்களை பார்வை இடலாம்.

வெளிநாடு ஓடர்களும் குறித்த நேரத்தில் அனுப்பி வைக்கப்படும்.

உங்கள் மனதுக்கு பிடித்த டிசைன்களை நியாயமான விலைகளில் குறுகிய காலத்தில் பெற்றுக்கொள்ள உங்கள் தெரிவு Home Decor

No 18/1B, Jumma Mosque Lane,
Grand Bazzar Jaffna
Phone : 077 944 0000
Email : nasserrajeem@gmail.com

# ஐக்கிய நாடுகள் கல்வி விஞ்ஞான பண்பாட்டு கழகம் (UNESCO), கிளிநொச்சி மாவட்ட சமூக சேவை திணைக்களமும் இணைந்து நாடத்தும் நடத்தும் தமிழ் மாணவர்களுக்கான கட்டுரை மற்றும் ஓவிய போட்டி

**ஐக்கிய நாடுகள் கல்வி விஞ்ஞான பண்பாட்டு கழகம் (UNESCO) வினால் வருடம் தோறும் நடத்தப்பட்டுவரும் உலக தாய் மொழிகள் தினத்தை ஒட்டி அமெரிக்க இலங்கை தமிழ் சங்கம் உலகளாவிய ரீதியில் தமிழ் கட்டுரை போட்டி ஓவிய போட்டி நடத்தப்படவுள்ளது.**



கீழ்ப்பிரிவு 12-15 வயது உடையவர்கள்
மேல்பிரிவு 16-18 வயது உடையவர்கள்
(வயது எல்லை 20.07.2017 கணக்கில் கொள்ளப்படும்)



## கீழ்பிரிவுகுரிய கட்டுரை தலைப்புகள்

1. நான் வாழும் சூழலும் எனது கல்வியும்
2. இடம்பெயர்ந்து வாழுதல் அல்லது புலம் பெயர்த்து வாழுதல் .
3. எனது குடும்பம்
4. எனது எதிர்கால கனவுகள்

(கட்டுரைகள் 150 சொற்களுக்கு குறையாமலும் 250 சொற்களுக்கு மேற்படாமலும் எழுதப்பட வேண்டும்)

## மேல்பிரிவுக்குரிய கட்டுரை தலைப்புகள்

1.போரும் வாழ்வும்.
2.கல்வி அன்றும் இன்றும் அல்லது நானும் என் நாடும்
3.இராணுவ சூழலில் மாணவர் வாழ்க்கை
4.என் எதிர்காலம் எதை நோக்கி.

(கட்டுரைகள் 400சொற்களுக்கு குறையாமலும் 600சொற்களுக்கு மேற்படாமலும் எழுதப்பட வேண்டும்)

## ஓவிய போட்டி

கீழ்ப்பிரிவு / மேல்ப்பிரிவு

ஓவியத்துக்கு A 4 அல்லது A 3 தாளினை பயன் படுத்த முடியும். பொதுவாகப்பழக்கத்தில் உள்ள இலகுவாக பெற்று கொள்ள கூடியதுமான வர்ணங்களை பயன்படுத்தலாம். (color pencils, water color, oil paint, acrylic paint) ஓவியர்களின் படைப்புகள் தமிழ் உறவுகளின் உணர்வுகளை சித்தரிக்கும் தன்மை கொண்டதாகவும். சுயமானதாகவும் இருக்க வேண்டும்.

## போட்டி முடிவுத்திகதி 20/07/2017

மின்னஞ்சல் மூலமாக PDF முறையிலோ , தபால் ஊடாகவோ , நேரடியாகவோ கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பலாம்.

## போட்டி விதிமுறைகள்

1. மாணவர்கள் தமது பெயர், பிறந்த திகதி, பாடசாலை விபரம், முகவரி ஆகியவற்றை தெளிவாக தாளின் முன் பக்கத்தில் எழுத வேண்டும் .
2. படைப்புகள் பாடசாலை அதிபரால் அல்லது ஆசிரியரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
3. ஒருவர் தான் பங்குபற்றும் போட்டிக்கு ஒரு ஆக்கத்தை மட்டுமே சமர்ப்பிக்கலாம்.
4. A 4 தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுதப்பட வேண்டும்.

## போட்டி முடிவுகள்

1. இருவேறு நடுவர் குழுவினரால் மதிப்பீடு செய்யப்பட்டு புள்ளிகள் வழங்கப்படும்
2. போட்டி முடிவுகள் 20/9/2017 பொது அறிவித்தல் மூலமும் , வெற்றி பெற்றவர்களுக்கு தனியாகவும் அறிவிக்கப்படும் .
3. நடுவர்கள் தீர்ப்பே இறுதியானது

## பரிசு விபரங்கள்

| | |
|---|---|
| முதலாம் பரிசு | 500 USD (அமெரிக்கன் டொலர்) |
| இரண்டாம் பரிசு | 400 USD |
| மூன்றாம் பரிசு | 300 USD |
| ஆறுதல் பரிசு | 100 USD |

### அனுப்பவேண்டிய முகவரிகள்

ஈமெயில்: tamilarts.language@gmail.com, arul90650@gmail.com
Address : paralyses nursing home, no 452 ananthapuram east killinochchi.
Phone number : 0773692128.


# பண்டாரவன்னியன் பதிப்பகம்



**நாவல்கள், கவிதை நூல்கள், சிறுகதை நூல்களை பதிப்பித்துக் கொள்ளவும், மற்றும் அனைத்து அச்சு வேலைகளை செய்து கொள்ளவும் நாடுங்கள்.**

பண்டாரவன்னியன் பதிப்பகம்
ஒட்டுசுட்டான்

## செந்தணல் பதிப்பகம்
வவுனியா

தொடர்புகளுக்கு - வன்னியூர் செந்தூரன் 009477971

# IELTS life skill
## புதிய பிரிவுகள் ஆரம்பம் 2017.06.20

திருமணம் முடித்து SPOUSE விசாவில் uk செல்வோருக்கான பாடநெறி.



IELTS IELTS A1, B1 கற்பித்தலில் வடமாகாணத்தில் புகழ் பூத்த கல்வி நிறுவனம்.
இதுவரை கற்ற அனைத்து மாணவர்களும் ஒரே தடவையில் 100% சித்தி.
ஒவ்வொரு மாணவர் மீதும் தனிப்பட்ட கவனம்.
கடந்த 7 வருட காலமாக யாழ் மண்ணின் பிரபல IELTS விரிவுரையாளர் MRS .R .ANUSHANTHY என்பவரால் விரிவுரை முன்னெடுக்கப்படும்.
பரீட்சைகான பதிவுகள்.

உங்கள் பதிவு மற்றும் மேலதிக தகவல்களுக்கு
077 13 633 89, 076 41 90 327

LONDON METROPOLITAN COLLEGE
No 136, palali road,
parameswara junction, Jaffna.
தினேஸ் பேக்கரியின் மேல்புறம்
PH NUMBER : 021 753 8395



# ANTECH CONSTRUCTIONS

உங்கள் கனவுக்கு உயிர் கொடுக்க
நாங்கள் உங்கள் உடன் இணைகிறோம்

யாழ்ப்பாணத்தில் உயர் தொழிநுட்பத்துடன் கூடிய கட்டிடங்களை நிர்மாணிக்கும் ஸ்தாபனம்.

- தகுதி பெற்ற நிபுணர்களின் மேற்பார்வை
- துல்லியமான பெறுமதிக்கணிப்புகள்.
- பாரம்பரிய தொழிநுட்பத்துடன் கூடிய நவீன கட்டமைப்புகள்.
- வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள்.
- தவணை முறை கொடுப்பனவுகள்
- தரமான மூலப்பொருட்கள்.
- வாடிக்கையாளர் திருப்திக்கமைவான தெரிவுகள்

No. 112/1 Main Street jaffna town



இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்ட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 18.06.2017 அன்று வெளியிடப்பட்டது.